


## மஹிந்த அணியின் மே தினக் கூட்டம் பெரு வெற்றி

# காலி முகத்தில் ஜன சமுத்திரம்!

பக்கங்கள்: 20 விலை:20 ரூபா

# காலைக்கதிர்
Kalaikkathir

விடியல் 01 வள்ளுவர் ஆண்டு 2048 சித்திரை 19, செவ்வாய்க்கிழமை 02.05.2017 கதிர் 177

## நெரிசலில் 2 பேர் பலி

கொழும்பு, மே 02

முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தலைமையிலான கூட்டு எதிரணி நேற்றுகொழும்புகாலிமுகத் திடலில் நடத்திய மேதினக் கூட்டத்தில் ஜன சமுத்திரம் நிறைந்து வழிந்தது.

லட்சத்துக்கும் அதிகமானோர்கூடிய இந்தக்கூட்டத்தில்மூச்சுத்திணறல்மற்றும் கடும் வெப்பத்தால் பாதிக்கப்பட்டு இருவர் உயிரிழந்தனர்.

பக்கம் 18 »»



# தீர்வு குறித்து 2 வாரங்களில் அரசிடமிருந்து நல்ல முடிவு

## மே தின உரையில் சம்பந்தன் நம்பிக்கை



அம்பாறை, மே 02

**தமிழ் மக்களுக்கான அரசியல் தீர்வுத்திட்டம் தொடர்பாக அடுத்த இரண்டு வாரங்களுக்குள் அரசிடம் இருந்து நல் தோர் முடிவைத் தாங்கள் எதிர் பார்த்து இருக்கிறார்கள் எனத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவரும் எதிர்க்கட்சித் தலைவருமான இரா.சம்பந்தன் தெரிவித்தார்.**

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் மேதினக் கூட்டம் அம்பாறை மாவட்டம் ஆலையடி வேம்பு தர்ம சங்கரி மைதானத்தில் நேற்று நடைபெற்றது. இதில் கலந்து கொண்டு உரையாற்றும்போதே அவர்இவ்வாறுகுறிப்பிட்டுள்ளார். அங்கு தொடர்ந்தும் கருத்து தெரிவித்த அவர் -

இலங்கைதமிழ்,சிங்களம்மற்றும் முஸ்லிம் மக்களுக்குரியதே தவிர, தனிப்பட்ட ஓர் இனத்திற்கு உரித்துடையதல்ல. ஓர் இனம் மாத்திரம் இங்கு உரிமை கோர முடியாது.

இந்த நாட்டில் வாழ்கின்ற ஒவ்வொரு இனமும் சமத்துவமாகவும், சமாதானமாகவும் மற்றும் கௌரவமாகவும் வாழ்வதற்கான சூழலை ஏற்படுத்த வேண்டும்.

நீதி, நியாயத்தின் அடிப்படையில்பிரச்சினைகள்தீர்க்கப்பட

பக்கம் 18 »»

## மோடிக்குக் கறுப்புக் கொடி; கூட்டு எதிரணி தயாராகிறது

கொழும்பு, மே.02

இந்தியப்பிரதமர்மோடி இன்னும் பத்து நாள்களில் இலங்கைக்குவிஜயம்செய்யும்போது நாடு முழுவதிலும் கறுப்புக் கொடிபறக்க விட்டு அவரது வருகைக்கு எதிர்ப்புக் காட்டுமாறு மஹிந்த ராஜபக்ஷவின் கூட்டு எதிரணி மக்களைக் கோரியிருக்கின்றது.

இந்தியப் பிரதமர் மோடி சர்வதேச வெசாக் தின நிகழ்வில் பங்குபற்றுவதற்காக இலங்கை வருகின்றமையை உறுதிப்படுத்தியிருக்கின்றார்.

பக்கம் 18 »»



கொழும்பு பீ.ஆர்.சி.மைதானத்தில் ஜே.வி.பியின் மேதினம்



கண்டி, கெட்டம்பே மைதானத்தில் சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் மேதினம்



கொழும்பு, பொரளை, கெம்பல் மைதானத்தில் ஐக்கிய தேசியக் கட்சியின் மேதினம்

# சொந்தக் காணியை விடுவிக்கக் கோரி இரணைதீவு கிராம மக்கள் ஆர்ப்பாட்டம்



## தொழிலாளர் தினத்தில் நடத்தினர்

கிளிநொச்சி, மே 02

கிளிநொச்சி - இரணைதீவு கிராம மக்கள் கடல் வளத்துடன், தமது கிராமத்தை ஆக்கிரமித்துள்ள கடற்படையினருக்கு எதிராக, தொழிலாளர் தினமான நேற்றுக் கவனவீர்ப்புப் போராட்டம் ஒன்றை முன்னெடுத்துள்ளனர்.

இந்தக் கவனவீர்ப்புப் போராட்டம் இரணைமாநகர் கிராமத்தின் கடற்கரைபகுதியில் அமைந்துள்ள கடற்படை முகாமுக்கு முன்பாக நேற்று காலை முன்னெடுக்கப்பட்டது.

மீன்பிடியை வாழ்வாதாரமாகக்கொண்ட கிளிநொச்சி - இரணைதீவு கிராம மக்கள் 1982 ஆம் ஆண்டு இடம்பெற்ற யுத்தம் காரணமாக இடம்பெயர்ந்தனர்.

இடம்பெயர்ந்த 176 குடும்பங்கள் மன்னார் மற்றும் கிளிநொச்சி ஆகிய பகுதிகளுக்கு இடம்பெயர்ந்தனர்.


176 குடும்பங்கள் தற்போது 417 குடும்பங்களாகி கிளிநொச்சி - பூநகரி கிராமத்தில் வசிக்கின்றனர்.

இரணைதீவு கிராமத்தில் 1982 ஆம் ஆண்டு காலப் பகுதியில் வாழ்ந்தபோது ஒரு வாரத்தில் தமது வருமானம் 3 ஆயிரம் ரூபா என தெரிவிக்கும் மக்கள், தற்போது தமது வாழ்வாதாரம் முழுவதையும் கடற்படை அனுபவிக்கிறது என்று ஆதங்கம் வெளியிட்டுள்ளனர்.

இந்த நிலையில், பரம்பரை பரம்பரையாக தாம் தொழில் புரிந்த பகுதியை கையகப்படுத்தியுள்ள ஸ்ரீலங்கா கடற்படை அந்தப் பகுதிகளை தம்மிடம் வழங்க மறுத்து வருகிறது என்று இரணைதீவுகிராம மக்கள் குறிப்பிட்டுள்ளனர்.

இந்தப் பிரச்சினை தொடர்பாக கிளிநொச்சியில் அமைந்துள்ள கடற்றொழில் நீரியல்வளதிணைக்களத்திடம் பல தடவைகள் முறைப்பாடுகள் செய்ததாகவும் மக்கள் தெரிவிக்கின்றனர்.

இந்த நிலையில் கடற்படையினர் வசமுள்ள தமது சொந்த நிலங்களையும், பாரம்பரிய தொழில் வளங்களையும் தம்மிடம் கையளிக்குமாறு இரணைதீவு கிராமமக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (ஐ)



# நல்லாட்சி அரசுக்கு எதிராக கேப்பாபிலவில் ஒப்பாரி!

சர்வதேச தொழிலாளர் தினமான நேற்று ரணில், மைத்திரி அரசின் செயற்பாடுகளுக்கு எதிர்ப்புத் தெரிவித்தும், இராணுவத்தால் கையகப்படுத்தப்பட்டுள்ள தமது காணிகளை விடுவிக்க வலியுறுத்தியும் தொடர் நில மீட்புப் போராட்டத்தில் ஈடுபட்டுள்ள கேப்பாபிலவு மக்கள் ஒப்பாரிப் போராட்டம் ஒன்றை நடத்தியுள்ளனர்.

கேப்பாபிலவு இராணுவத் தலைமையகத்துக்கு முன்னால் ஒன்று கூடிய மக்கள் ஒப்பாரி வைத்து தமது எதிர்ப்பை வெளிப்படுத்தியுள்ளனர்.

கேப்பாபிலவு மக்களின் தொடர் போராட்டம் நேற்றுடன் 62 ஆவது நாளாக இடம்பெற்றது. மார்ச் மாதம் முதலாம் திகதி முன்னெடுக்கப்பட்ட போராட்டம் நேற்று இரண்டு மாதத்தை எட்டியுள்ளது. 138 குடும்பங்களுக்கு சொந்தமான 482 ஏக்கர் காணிகளை விடுவிக்குமாறு வலியுறுத்தி இந்த கவனவீர்ப்புப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டு வருகின்றது.

இந்த நிலையில், ஜனநாயகம் புதைக்கப்பட்டுள்ள நாட்டில் அரசியல் கட்சிகள் தமது கட்சி அரசியலை முன்னெடுப்பதற்கு மே தினத்தை பயன்படுத்துவதாக கேப்பாபிலவு மக்கள் குற்றம்சுமத்தியுள்ளனர்.

இதன்போது, மக்களின் ஒப்பாரிகள் நல்லாட்சி அரசின் காதுகளுக்குக் கேட்குமா என்பது கூட கேள்விக்குரிய விடயம் என்று வடமாகாண சபை உறுப்பினர் கந்தையா சிவநேசன் தெரிவித்தார்.

தமது சொந்த நிலத்துக்குச் செல்வதற்கு தமக்கு உரிமையில்லையா? என வினா எழுப்பும் மக்கள் தம்மைச் சொந்த நிலத்தில் குடியேற்றுமாறு நேற்றும் வலியுறுத்தியுள்ளனர். (ஐ)









ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியின் மேதினக் கூட்டம் வவுனியா வீரபுரம் பகுதியில் நடைபெற்றது.

கட்சியின் மத்திய குழு உறுப்பினர் க.அருந்தவராசா தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் அந்தக் கட்சியின் தலைவரும் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினருமான சுரேஷ் பிறேமச்சந்திரன், கட்சியின் செயலாளரும் வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான சிவசக்தி ஆனந்தன், வடமாகாண சபை உறுப்பினர்களான ம.தியாகராசா, ஆர்.இந்திரராஜா, க.சர்வேஸ்வரன், மத்திய மாகாண அரசியல் பிரமுகர் திலக் மடப்பல மற்றும் கட்சியின் உறுப்பினர்கள், பொதுமக்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர்.

# தமிழ்த் தேசியத்தை, சமூக மாற்றத்தை வலியுறுத்தும் மக்கள் சக்தியே தேவை!

## அதை உருவாக்குவோம் என்று சூளுரை யாழ்.பல்கலை மே தினப் பேரணியில்



யாழ்ப்பாணம், மே 02

தமிழ் தேசியத்தையும் சமூக மாற்றத்தையும் ஒருங்கே வலியுறுத்தி முன் நகர்த்தும் மக்கள் சக்தியை உருவாக்குவோம் என்று யாழ். பல்கலைக்கழக மேதினப் பேரணியில் வலியுறுத்தப்பட்டுள்ளது.

மக்கள் அபிலாஷைகளையும் அடிப்படை உரிமைகளையும் வென்றெடுக்கத் தவறும் தமிழ் அரசியல்வாதிகளை நீக்கம் செய்வோம் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தொழிலாளர் உரிமைகளை வென்றெடுக்க இலங்கை ஆசிரியர் சங்கம் மற்றும் கிராமிய உழைப்பாளர் சங்கம், தமிழ் மக்களின் வாழ்வுரிமைக்கான செயற்பாட்டு மையம், பல்கலைக்கழக ஊழியர் சங்கம் உட்பட 6 அமைப்புக்கள் ஒன்றிணைந்து மே தின எழுச்சிப் பேரணியையும் பொதுக் கூட்டத்தையும் யாழ். பல்கலைக்கழக வளாகத்தில் நடத்தின.

யாழ். பல்கலைக்கழக வளாகத்தில் இருந்து ஆரம்பிக்கப்பட்ட இந்த பேரணி, கலட்டி றபில் வீதி வழியாக பலாலி வீதியைச் சென்றடைந்து, அங்கிருந்து இராமநாதன் வீதி வழியாக யாழ். பல்கலைக்கழக வளாகத்தில் நிறைவடைந்தது.

மேதினக் கூட்டத்தின்போது, 'தேசம், இறைமை, சுயநிர்ணயம், சமஷ்டி, அடிப்படையில் இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வு காண குரல் கொடுப்போம் - இவை இல்லாத அரசியல் தீர்வை நிராகரிப்போம்', 'அரசியல் கைதிகள் உடனடியாக எவ்வித நிபந்தனையுமின்றி விடுதலை செய்யப்படல் வேண்டும்', 'படையினர் பறித்த காணிகள் உடனடியாக மக்களிடம் கையளிக்கப்படல் வேண்டும்', 'மக்கள் தாமாக நடத்தும் போராட்டங்களில் நாங்களும் இணைந்துகொள்வோம்', 'இடம்பெயர்ந்த மக்கள் அனைவரும் உடனடியாக மீள்குடியேற்றம் செய்யப்படல் வேண்டும்', 'வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோர் விவகாரத்துக்கு உடனடியாகத் தீர்வு வழங்கு', 'இனப்படுகொலைகளுக்கு சர்வதேச விசாரணை வேண்டும் என உலக முற்போக்கு ஜன நாயக சக்திகளுடன் இணைந்து குரல்கொடுப்போம்', 'தமிழர் தாயகத்தில் மேற்கொள்ளப்படுகின்ற திட்டமிட்ட சிங்களக் குடியேற்றங்கள் உடனடியாக நிறுத்தப்படல் வேண்டும்', 'சர்வதேச பாதுகாப்புப் பொறிமுறையை உருவாக்குவோம்', 'தமிழ் மீனவர்களின் வாழ்வுரிமையை பறிப்பது உடனடியாக நிறுத்தப்படல் வேண்டும்', 'சாதி, மத பிரதேச பால் ஒடுக்குமுறைகளை இல்லாதொழிப்போம்' 'மலையக மக்களின் வாழ்வாதார அடையாளப் போராட்டங்களுக்குத் துணைநின்று குரல் கொடுப்போம்', 'பலாலி ஆசிரியர் பயிற்சிக் கலாசாலையை விடுவிக்கப் போராடுவோம்', 'புலம், தமிழகத்துக்கிடையே ஒருங்கிணைந்த வேலைத் திட்டத்தை முன்னெடுப்போம்', தவறான வழிகளில் செல்லும் தமிழ் இளைஞர்களை நல்வழிப்படுத்தி சமூகத்துக்குப் பொருத்தப்பாடுடையவர்களாக மாற்றும் செயற்றிட்டங்களை முன்னெடுப்போம்' போன்ற விடயங்கள் வலியுறுத்தப்பட்டன. (ஐ)

# தேர்தலை நடத்தத் தயாரா? அரசுக்கு மஹிந்தர் சவால்!

"முடியுமானால் காலி முகத் திடலை மக்களை கொண்டு நிரப்பி மே தின கூட்டத்தை நடத்துமாறு இந்த அரசாங்கம் எனக்கு சவால்விடுத்தது.நான்அந்த சவாலை ஏற்றுக் கொண்டேன். இன்று அந்தச் சவாலைவெற்றிகொண்டு காண்பித்துள்ளேன். இப்போதுநான் இந்த அரசாங்கத்துக்கு ஒரு சவாலை விடுக்கின்றேன். முடியுமானால்மாகாணசபைத்தேர்தலை நடத்துங்கள். அதனைவிடுத்து எந்த வொரு அச்சுறுத்தலாலும்என்னை ஒன்றும்செய்ய முடியாது."

– இவ்வாறு முன்னாள் ஜனா திபதி மஹிந்த ராஜபக்ஷ நேற்று அரசாங்கத்துக்கு சவால் விடுத்தார்.

காலி முகத்திடலில் நேற்று நடைபெற்ற கூட்டு எதிரணியினரின் மே தின நிகழ்வில்கலந்துகொண்டு உரையாற்றும்போது மஹிந்தராஜபக்ஷ இந்தச் சவாலை விடுத்தார். அவர் அங்கு மேலும் கூறியவை வருமாறு :-

இந்த அரசாங்கம் நாட்டின்வளங்களைவிற்பனை செய் கின்றது. தெற்கில் மட்டுமல்ல. வடக்கு, கிழக்கில் உள்ள வளங்களையும் இந்த அரசு விற்பனை செய்கிறது. அம்பாந்தோட்டைத் துறைமுகத்துடன் சேர்த்து 15 ஆயிரம் ஏக்கர் நிலத்தைச்சீனாவுக்குவழங்கவும்,மாதுருஓயாபகுதியில் இடம் வழங்கவும் அனைத்து ஏற்பாடுகளையும்அரசாங்கம் செய்துள்ளது.

நாட்டு மக்கள் ஒரு முறைஏமாந்துவிட்டனர்.மீள ஏமாற மாட்டார்கள். நாட்டின் வளங்களைப் பாதுகாக்க ஒன்றிணைந்து தேசிய கொள்கை அடிப்படையில் செயற்படுவர்.

இந்த அரசாங்கத்தை வீட்டுக்கு அனுப்பும் நடவடிக்கையை நாம் இந்தக் காலிமுகத்திடலில்இருந்து ஆரம்பிக்கின்றோம்.

எமது பயணத்துக்கு அச்சுறுத்தல்கள் பல ஏற்படுத்தப்பட்டன. எம்மை சிறையிலடைத்தார்கள். விமல்வீரவன்ஸ,ஜோன்ஸ்டன், கம்பன்பில்ல, மஹிந்தானந்த, நாமல், எனது சகோதரர்கள், அரச அதிகாரிகள்எனபலர்இவ்வாறு அச்சுறுத்தப்பட்டனர்.

அத்தனை அச்சுறுத்தல்களையும் தாண்டி இங்கு ஒன்று சேர்ந்துள்ளோம்.

எனது ஆட்சியைக் கைப் பற்ற இந்த அரசாங்கம் பல மில்லியன் அமெரிக்கடொலர்களைச்செலவு செய்துள்ளது. இது தொடர்பில் சிலர் மலசல கூடங்களுக்குள்வைத்தேபணத்தை வழங்கியுள்ள னர்.

எனது காலத்தில் பயங்கரவாதத்தை இராணுவம் இல்லாது செய்து சமாதானத்தை ஏற்படுத்தியது. எனினும், இன்று அதே இராணுவத்தினரை மக்களின் நியாயமான கோரிக்கைகளை முடக்கப் பயன்படுத்தப் பார்க்கின்றனர்.

எமது இராணுவத்தினரைசர்வதேசயுத்தகுற்ற நீதிமன்றில் நிறுத்தும் விதமாகவே இந்த அரசாங்கம் செயற்படுகிறது. அதற்கு இடமளிக்க முடியாது. இந் நாட்டை பாதுகாத்த இராணுவத்தினரை சர்வதேச யுத்த குற்ற நீதிமன்றில் நிறுத்த ஒரு போதும் அனுமதிக்கமாட்டேன்.

குப்பை சரிந்து பொது மக்கள் உயிரிழந்த சம்பவங்கள் உலகில் எந்த நாட்டிலும்இடம்பெற்றதில்லை. எனினும், எமது நாட்டில் கவலைக்குரிய விடயமாக இது இடம்பெற்றுவிட்டது. ஒரு குப்பையைக் கூட அகற்றிக் கொள்ள முடியாத இந்த அரசாங்கம் எனக்கு சவால் விடுப்பது கேலிக்கைக்குரியது.– என்றார் மஹிந்தர். (உ)

# திடீர் தேர்தலுக்குத் தயார்! ரணில் அதிரடி அறிவிப்பு

"எந்தத் தேர்தலையும் நடத்து வதற்குத் தயார். எத்தகைய சவாலையும் முகம் கெடுக்கஆயத்தமாக இருக்கிறோம்." –இப்படித் திடீரென நேற்று அதிரடி அறிவிப்பு விடுத்தார் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க.

கொழும்பு, கெம்பல் பார்க்கில் ஐ.தே.கட்சி மேதினக் கூட்டத்தில் உரையாற்றுகையிலேயே இந்த அறிவிப்பை அவர் விடுத்தார்.

"இதுமிகப்பெரியஜனக் கூட்டம். இந்தச் சனக் கூட்டத்தைப் பார்த்ததும், நான் ஓர் அறிவிப்பை விடுக்க விரும்புகின்றேன். எந்தத் தேர்தலை நடத்தவும் நாங்கள் தயார். எந்தச் சவாலை முகம் கொடுக்கவும் நாம் ஆயத்தமாக உள்ளோம்.

"இந்தஓகஸ்ட்மாதத்துக்குப் பின்னர், எந்த அரசு அமையும்என்பதைத்தீர்மானிக்கப் போகின்றவர்கள் நாங்களே என சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் சில மூத்த தலைவர்கள் கூறுகின்றனர்.

"அவர்களின் சவாலை ஏற்கநாங்கள்தயார்."–என்றார்பிரதமர்ரணில்விக்கிரமசிங்க.

தற்போதையநல்லாட்சி அரசை நிறுவுவது தொடர்பாகஐ.தே.கட்சி–சிறிலங்கா சுதந்திரக் கட்சி இடையிலான இரண்டு வருட கால நல்லிணக்க உடன்பாடு இந்த ஓகஸ்ட் மாதத்துடன் முடிவடைகின்றது.

ஓகஸ்ட் மாதத்துக்குப் பின்னர் பிரதமர் ரணிலின் அரசு தொடர் வதா என்பது குறித்துத் தாங்களே தீர்மானிப்பார்கள் என சு.க.வின் அமைச்சரான டிலான் பெரேராஉட்படமூத்ததலைவர்கள் சிலர் கூறிவரும் பின்னணியிலேயே இந்த திடீர் தேர்தலுக்குத் தயார் என்ற அறிவிப்பை பிரதமர் ரணில்விக்கிரமசிங்கவிடுத்திருக்கின்றார்.

ஐ.தே.கவின்நேற்றைய மேதினம் கூட்டத்துக்குப் பொதுவாக எதிர்பார்க்கப்பட்ட கூட்டத்தை விட அதிக எண்ணிக்கையில் மக்கள் திரண்டிருந்தனர் என சுயாதீன செய்தி வட்டாரங்கள் தெரிவித்தன. (உ)

# சமாதானத்தை ஏற்படுத்த ஜனாதிபதி உறுதி

நாட்டில் நிரந்தர சமாதானம்ஏற்பட தேசிய நல்லிணக்கத்தை வலுப்படுத்த வேண்டும் என ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரிவித்துள்ளார்.

கண்டி – கெட்டம்பேயில் நேற்று இடம்பெற்ற மே தின நிகழ்வின் போதே அவர் மேற்கண்டவாறு கருத்து வெளியிட்டுள்ளார்.

எதிர்த் தரப்பினரால் அரசாங்கத்துக்கு எதிராக முன் வைக்கப்படும், விமர்சனங்களுக்குஉள்ளாகும் எந்தவொரு நடவடிக் கையையும் முன்னெடுக்க நான் ஒரு போதும் இடமளிக்கப்போவதில்லை. கண்ணாடி வீட்டில் இருந்து கொண்டுகல்எறியவேண்டாம் எனக் கேட்டுக்கொள்கின்றேன்.

நான்இந்தக்கதிரைக்கு வந்தது, நிலையான சமாதானமான ஒரு சூழலை ஏற்படுத்தி, சுதந்திரமான ஒரு நாட்டை கட்டியெழுப்புவதற்கேயாகும். வெளிநாட்டு அச்சுறுத்தல்களில் இல்லாத நாட்டைக் கட்டியெழுப்புவதாகும். இந்த நாட்டின் எந்த வொரு சிறு பகுதியையேனும் இன்னொருநாட்டுக்குவிலைபேசுவதற்கு நான் ஒரு போதும் இணக்கம் தெரிவிக்கமாட்டேன். – என்றார். (ம)

# 2020 இற்கு முன்னர் அரசு மீது தாக்குதல்

## மேதினக் கூட்டத்தில் விமல் வீராவேசம்

நாட்டில்2020 ஆம் ஆண்டு தேர்தல் வரும் வரை எதிர்பார்த்திருக்கமுடியாது. அதற்குள் தாக்குதலைமுன்னெடுக்க தயாராக வேண்டும் என தேசிய சுதந்திர முன்னணியின்தலைவர்விமல் வீரவன்ஸ தெரிவித்தார்.

காலி முகத்திடலில் நேற்று நடைபெற்ற மஹிந்த குழுவினரின்மேதினக்கூட்டத்தில்கலந்து கொண்டு உரையாற்றுகையில் அவர் இதனைக் கூறினார்.

2020வரைபார்த்திருந்தால் நாடு என்றவொன்று எமக்கு மீதமிருக்காது எனவும் அவர் சுட்டிக்காட்டினார்.

காலி முகத்திடலில் ஆள்களைக் கொண்டு வந்து நிரப்புமாறு சவால் விட்டனர். நாம் அந்தசவாலை முறியடித்தோம். அத்துடன் காலிமுகத்திடலைச் சுற்றியுள்ள பாதைகளையும் நாம் நிரப்பினோம். – எனவும் அவர் கூறினார். (ம)

# காணாமற்போனோரின் உறவினர்கள் கறுப்புப்பட்டி அணிந்து துக்கதினம்

## மே தினத்தைப் புறக்கணித்தனர்



முல்லைத்தீவு, மே 02

முல்லைத்தீவில் போராட்டத்தில்ஈடுபட்டுவருகின்றகாணாமற்போனோரின் உறவினர்கள், தொழிலாளர் தினமான நேற்று அதைப் புறக்கணித்துத் துக்க தினமாக அனுஷ்டித்தனர்.

மேற்படி காணாமற்போனோரின்உறவினர்கள்முல்லைத்தீவு மாவட்டச் செயலகத்திற்கு முன்பாகக் கூடாரம் அமைத்துப் போராடிவருகின்றனர். நேற்று 55ஆவது நாளாகவும் அவர்களின் போராட்டம் தொடர்ந்தது.

உழைக்கக்கூடிய தமது உறவுகளைப் படையினர் பிடித்துச் சென்றுள்ள நிலையில், தாங்கள் அன்றாட ஜீவனோபாயத்திற்கே பெரும் கஷ்டங்களை அனுபவிக்கின்றனர் என அவர்கள் தெரிவித்துள்ளனர்.

நேற்றைய தினம் அவர்கள் கறுப்புப் பட்டிகளை அணிந்து போராட்டத்தில்ஈடுபட்டனர்.தங்களைத் திரும்பிப் பார்க்காத நல்லாட்சி அரசின்செயற்பாட்டில்அவர்கள் கடும்விசனமடைந்தவர்களாகக் காணப்பட்டன. (ம–81)

# வாகனப் பவனி, எழுச்சிப் பேரணியுடன் த.தே.ம.மு. சாவகச்சேரியில் மேதினம்

## முதல் கரும்புலி மில்லரின் தாய் சுடரேற்றினார்



(எஸ்.நிதர்ஷன்)

தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் மேதின நிகழ்வுகள் நேற்று பிற்பகல் சாவகச்சேரியிலுள்ள வார்வனநாதர் சிவன் கோவில் முன்றிலில் இடம்பெற்றன.

மேதினத்தின் ஆரம்ப நிகழ்வாக, மோட்டார் சைக்கிள் பவனி இடம்பெற்றது. கைதடிச்சந்தியில் ஆரம்பமான இந்தப் பேரணி, ஏ–9 நெடுஞ்சாலை வழியாக சாவகச்சேரி பேருந்து நிலையத்தைச் சென்றடைந்தது.

பேருந்து நிலையத்தில் இருந்துஎழுச்சிப்பேரணி ஆரம்பமானது. இந்தப் பேரணியில் கலந்துகொண்ட பல நூற்றுக் கணக்கான மக்கள் பல்வேறு கோஷங்களை எழுப்பியவாறு சென்றனர். பேரணி பொதுக்கூட்டம் நடைபெற்ற இடமான வார்வனநாதர் சிவன் கோயிலடியில் சென்று பேரணி நிறைவடைந்தது.

அங்கு கட்சிக் கொடியை பொதுச்செயலாளர் செ.கஜேந்திரன் ஏற்றினார். தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பின் முதல் கரும்புலி கப்டன் மில்லரின் தாயார் திருமதி வல்லிபுரம் பொதுச் சுடர் ஏற்றி கூட்டத்தை ஆரம்பித்துவைத்தார். கட்சியின் சாவகச்சேரி அமைப்பாளர் தலைமையில் நடைபெற்ற இக்கூட்டத்தில் பலர் உரையாற்றினர்.

இதேவேளை, தமிழ்த் தேசிய மக்கள்முன்னணியின்மேதினப் பேரணியில் பங்குபற்றியவர்களை சீருடை தரித்த பொலிஸார் புகைப்படம் எடுத்து அச்சுறுத்தினர் எனவும், ஆனாலும் மக்கள் அதைப் பொருட்படுத்தாமல் அதில் பங்கேற்றனர் என்றும் தெரிவிக்கப்பட்டது. (ம)

# சமூக நீதிக்கான மக்கள் அமைப்பின் மேதினக் கூட்டம் கிளிநொச்சியில்

கிளிநொச்சி, மே 02

சமத்துவம், சமூக நீதிக்கான மக்கள் அமைப்பின் மே தின நிகழ்வு நேற்று கிளிநொச்சி கூட்டுறவாளர் மண்டபத்தில் இடம்பெற்றது.

நேற்றுப் பிற்பகல் 3.00 மணிக்கு பச்சிலைப்பள்ளி பிரதேசசபையின்முன்னாள்உறுப்பினர் அன்ரன் அன்பழகன் தலைமையில் மேதினக் கூட்டம் ஆரம்பமானது. இக்கூட்டத்தில் இந்த அமைப்பின் தலைவரும் முன்னாள்நாடாளுமன்ற உறுப்பினருமான மு.சந்திரகுமார் உரையாற்றினார்.

இந்த மேதினக் கூட்டத்தின் போது பத்து அம்சக் கோரிக்கைகளும் முன்வைக்கப்பட்டன. (ம–70)

# 5 தமிழக மீனவர் கைது

இராமேஸ்வரம், பாம்பனில் இருந்து நாட்டுப் படகில் மீன்பிடிக்கச் சென்ற – தங்கச்சிமடத்தைச் சேர்ந்த – 5 தமிழக மீனவர்களை இலங்கைக் கடற்படையினர் மன்னார் கடற்பகுதியில் வைத்து நேற்றுக் கைது செய்துள்ளனர் என்று தெரிவிக்கப்படுகின்றது.

கைதானோர் மன்னாருக்குக் கொண்டு செல்லப்பட்டு மன்னார் நீதிவான் அலெக்ஸ் ராஜா கிரேசின் முன் ஆஜர்செய்யப்பட்டனர். அவர்களை எதிர்வரும் 15 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்க நீதிவான் உத்தரவிட்டார். (உ)

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம்
செய்தி: 021 222 3000, editor@kalaikkathir.lk
தொலைநகல் (fax): 021 221 9440, ads@kalaikkathir.lk
விளம்பரம்/விநியோகம்: 021 222 2600


## நீடிக்கும் ஐயுறவுகள்!

தேசிய இனப்பிரச்சினையில் பிரதான தரப்புகளுள் ஒன்று தமிழர்கள். இன்றைய கட்டத்தில் அவர்களின் தெரிவு செய்யப்பட்ட ஜனநாயகப் பிரதிநிதிகளாக விளங்குபவர்கள் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினரே.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் முக்கிய தலைவர்கள் கடந்த சில நாள்களாக தேசிய இனப் பிரச்சினையை ஒட்டி பல்வேறு கருத்துக்களையும் முன்வைக்கக் கூடியதான மேடைகள் - அரங்குகள் - அடுத்தடுத்துத் திறக்கப்பட்டன. அதனால் தொடர்ந்து இந்த விடயங்களை ஒட்டி, தமது தலைவர்களின் நிலைப்பாடுகளை அறிந்துகொள்ளும் வாய்ப்பு நமது மக்களுக்குக் கிடைத்தது.

இலங்கைத் தமிழரசுக் கட்சியின் செயற்குழுக் கூட்டம், தந்தை செல்வாவின் நினைவுதினத்தை ஒட்டிப் பல்வேறு இடங்களிலும் நடைபெற்ற நிகழ்வுகள், ஊடகவியலாளர் சிவராம் நினைவு நிகழ்வுகள், மேதின நிகழ்வுகள் எனப் பல அரங்குகளில் இனப் பிரச்சினைக்குரிய தீர்வை ஒட்டிப் பல்வேறு கருத்துகள் அரசியல் தலைவர்களால் முன்வைக்கப்பட்டன. அவை தொடர்பில் சில குறிப் புக்களை இந்தப் பத்தியில் தருவது பொருத்தமானது என நினைக்கிறோம்.

"எமது மக்களுக்கு ஏற்பில்லாத தீர்வை ஒருபோதும் ஏற்க மாட்டோம்; ஏற்கவும் முடியாது; ஏற்கப்போவதும் இல்லை". - என்று கூட்டமைப்பின் தலைவர் இரா. சம்பந்தன் தந்தைசெல்வா நினைவுதின உரையில் குறிப்பிட்டுள்ளார். மேலோட்டமாகப் பார்ப்பதற்கு ஆழம்பொதிந்த - அர்த்தம் மிக்க - ஜனநாயகச் சிறப் புக் கொண்ட - வாசகமாக இது இருக்கின்றது. ஆனால், உட்கிடக்கையாக நோக்கினால், தீர்வு தொடர்பில் ஒரு ஐயுறவு நிலை - சந்தேகப் போக்கு - தொடர்வதையே இக்கூற்று வெளிப்படுத்தி நிற்கின்றது என்று எண்ணத் தோன்றுகின்றது.

"மக்கள் ஏற்கும் தீர்வு ஒன்றைப் பெற்றுத் தருவோம்" - என உறுதியளித்து, அதன் மூலம் மக்கள் ஆதரவை பெற்றுத் தனித்துவத் தலைவராக விளங்கும் சம்பந்தன், 'எமது மக்கள் ஏற்கக் கூடிய தீர்வைப் பெற்றுத் தருவேன்' - என்றுதான் கூறவேண்டும். அதை விடுத்து, 'எமது மக்கள் ஏற்காத தீர்வை நாம் ஒருபோதும் ஏற்கோம்' - என்று கூறுவது பொருத்தமற்றது என்பதே நமது கருத்து.

அதேசமயம், 'ஐ.நா. சபை, அமெரிக்கா உட்பட சர்வதேசம் எவையும் எங்களைக் கைவிடாதமையால் ஈழத் தமிழர் அரசியல் இப்போது திருப்புமுனையில் வந்து நிற்கிறது' - என்று குறிப்பிட்டு, அது குறித்து மகிழ்ச்சி கொள்ளலாம் என்றும் கூட்டமைப்பின் பேச்சாளர் சுமந்திரன் எம்.பி. தெரிவிக்கின்றார்.

"அரசியல் தீர்வொன்று வழங்கப்படவேண்டும். புதிய அரசமைப்பு ஏற்படுத்தப்படவேண்டும். நாட்டில் முன்னர் இடம்பெற்ற அத்தனை விடயங்களும் மீண்டும் நிகழாமல் உறுதிப்படுத்தப்படவேண்டும். - இவற்றுக்கான உத்தரவாதங்களை சர்வதேச சமூகத்தின் முன்னால் - ஐ.நா. மனித உரிமைகள் கவுன்ஸிலின் முன்னால் - இலங்கை ஒப்பமிட்டு அளித்துள்ளது. ஆகவே, இங்கு ஒன்றுமே நடக்கவில்லை என்று கூறக்கூடாது. ஆக்கபூர்வமான பல விடயங்கள் நடந்துள்ளன". - என்றும் சுமந்திரன் குறிப்பிட்டிருக்கின்றார்.

அவர் கூறுவது முற்றிலும் சரியே. ஆனாலும், நடந்தவற்றை மட்டும் - அவர் குறிப்பிட்ட விடயங்களை மட்டும் - கவனத்தில் கொண்டு மகிழ்வதற்கு இடமுண்டா என்ற கேள்வி எழுகின்றது.

தமிழர்கள் தனித்துவமான இனம் என்பதையும், வடக்கும் கிழக்கும் தமிழர் தாயகம் என்பதையும் இந்திய - இலங்கை ஒப்பந்தம் மூலமும் -

தமிழருக்குத் தனியான சுயநிர்ணய உரிமை உண்டென்பதை 2003 டிசெம்பரில் ஒஸ்லோ அறிக்கை மூலமும் -

சர்வதேசரீதியில் ஒப்புக்கொண்டு கையொப்பமிட்ட இலங்கை, பின்னர் அந்த நிலைப்பாடுகளிலிருந்து மாறவில்லையா? குத்துக்கரணம் அடிக்கவில்லையா?

ஏன், இப்போது யுத்தக் குற்ற விடயங்களுக்கு சர்வதேச ஈடுபாட்டுடனான கலப்பு நீதிமன்ற விசாரணைப் பொறிமுறை குறித்து ஐ.நா. மனித உரிமைக் கவுன்ஸிலில் எழுத்துமூலம் உத்தர வாதமும் அளித்துவிட்டு, அந்தக் கையோடே வெளியில் அதனை இலங்கை அப்பட்டமாக மறுத்து தட்டைப் புரட்டிப்போடவில்லையா?

ஆகவே, இலங்கையின் இணக்கத்தை - ஒப்பத்தை - மட்டும் நம்பி மகிழ்வதற்கு நமது தமிழ் மக்கள் தயாரில்லை. உறுதிமொழிகள் தொடர்பில், இலங்கை ஆட்சித் தரப்பு சம்பந்தமாகத் தமிழ் மக்களின் பட்டறிவு அத்தகையது.

இப்போதும் கூட - இதுவரை எல்லா ஆவணங்களிலும் சமஷ்டித் தீர்வு பற்றிச் சிலாகித்து, வலியுறுத்தி வந்த தமிழ்க் கூட்டமைப்பு, இப்போது தனது நேற்றைய மேதினப் பிரகடனத்தில் 'கூட்டாட்சி முறையின் கீழ் சுயநிர்ணய உரிமையின் அடிப்படையிலான தீர்வு' குறித்துப் பேச முற்பட்டிருக்கின்றது.

கூட்டாட்சி முறைமையில் ஒன்று சமஷ்டி. இப்போது சமஷ்டி முறைமை என்ற சொல் கைவிடப்பட்டமையில் - அல்லது தவிர்க்கப்பட்டமையினால் - ஏதேனும் சூத்திரம் பொதிந்திருக்குமோ? தெரியவில்லை.

'சொல் ஜாலங்களைப் பார்க்காதீர்கள்; விடயத்தையே - விவகாரத்தையே - பாருங்கள்' - என்று நமது தலைவர்கள் கூறும் விதத்தில்தான், இந்த மேதினப் பிரகடனத்தில் சமஷ்டி காணாமல் போயிருக்கின்றமையை நோக்கவேண்டுமா? அதுவும் தெரியவில்லை.

எது, எப்படியென்றாலும் தலைவர்களின் அறிவிப்புக்கள் தொடர்பில் நமது மக்களுக்கு ஐயுறவுகள் நீடிக்கவே செய்கின்றன.

# ஐக்கியத்தை நிலைநாட்ட இவ்வருடம் அரசியல் தீர்வு

### முன்னாள் ஜனாதிபதி ரணசிங்க பிரேமதாசவின் நினைவு தின நிகழ்வில் பிரதமர் தெரிவிப்பு

கொழும்பு, மே 02

இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண்பதற்கு சர்வதேச ஒத்துழைப்பு மிகவும் அவசியம். இதன்பிர்காரம் நாட்டின் ஐக்கியத்தை நிலை நாட்டும் முகமாக அரசியல் தீர்வை இவ் வருடத்தில் பெற்றுக்கொடுக்க முடியும் என்று நம்புகின்றோம் என்று பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.

முன்னாள் ஜனாதிபதி ரணசிங்க பிரேமதாசவின் 24 ஆவது நினைவு தினத்தை முன்னிட்டு கொழும்பு, புதுக்கடை நீதிமன்ற வளாகத்தில் நேற்றுக் காலை நடைபெற்ற நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

இன்னும் இரு மாதங்களுக்குள் புதிய அரசமைப்புக்கான வழிநடத்தல் குழுவின் இடைக் கால அறிக்கையைச் சமர்ப்பிக்க முடியும்.

அந்த அறிக்கையை மதத் தலைவர்கள், சிவில் அமைப் புக்களிடம் முன்வைத்து ஆலோசனை கோருவோம். அத்துடன் வழிநடத்தல் குழுவின் இடைக்



கால அறிக்கைக்கு அனைவரும் ஆதரவு நல்க வேண்டும்.

நாட்டை பிளவுபடுத்தாமல் அதிகாரத்தை பகிர்ந் தளிப்பதே எமது நோக்கமாகும். வடக்கு, கிழக்கு மற்றும் மலையகத்தில் வீடுகளை இழந்தவர்களுக்கும் வீடுகளை பெற்றுக் கொடுப் போம். - என்றார். (எ)

# தமிழ் மக்களின் பிரச்சினைகளுக்கு விரைவில் தீர்வு வழங்க வேண்டும்

### அரசை வலியுறுத்துகிறார் அமைச்சர் ரிஷாத்



வவுனியா, மே 02

நீறு பூத்த நெருப்பாகி இருக்கும் பல்வேறு பிரச்சினைகளுக்குத் தீர்வு காணுமாறு கோரி தமிழ் மக்கள் போராட்டங்களை நடத்துகின்றனர். அவர்களின் பிரச்சினைகளுக்கு விரைவில் தீர்வு பெற்றுக்கொடுக்க நல்லாட்சி அரசு முன்வரவேண்டும் என்று அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் கட்சியின் தலைவரும் வர்த்தக அமைச்சருமான ரிஷாத் பதியுதீன் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

வவுனியாவில் நேற்று முன்தினம் இடம்பெற்ற ஜனாதிபதி நடமாடும் சேவையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

மனச்சாட்சி, மனித நேயம் மற்றும் இறையச்சம் ஒவ்வொருவருக்கும் இருந்தால் மக்கள் எதிர்கொள்ளும் பிரச்சினைகளும் சமூகங்களுக்கிடையில் தோற்றுவிக்கப்படும் பிரச்சினைகளும் குறைவடையும்.

நல்லாட்சி அரசின் பிரதான பங்காளிகள் சிறுபான்மை மக்கள். கடந்த காலங்களில் பட்ட துன்பங்களுக்கும் துயரங்களுக்கும் விடிவு கிடைக்கும் என்ற நம்பிக்கையிலேயே ஆட்சி மாற்றத்தை ஏற்படுத்தி புதிய அரசை உருவாக்கினர்.

சிறுபான்மை மக்கள் உருவாக்கிய அரசில் வேண்டியவைகளை கேட்டுப் பெற்றுக் கொள்ளும் உரிமை காணப்படும் அதேவேளை, அவற்றை நிறைவேற்றும் பொறுப்பும் கடமையும் அரசுக்கு உள்ளது.

எமது தியாகங்களையும் அர்ப்பணிப்புக்களையும் எவரும் இலகுவில் புறந்தள்ளிவிட முடியாது.

ஆட்சி மாற்றத்துக்கு வழிவகுத்தவர்களும் ஆட்சியை தீர்மானித்தவர்களும் சிறுபான்மை மக்கள் தான் என்பதை மார்தட்டி என்றும் சொல்லுவோம்.

போர்க்காலத்தில் காணாமல் ஆக்கப்பட்டவர்கள் பிரச்சினை, காணிகளைப் பறிகொடுத்து கையறு நிலையில் இருப்பவர்களின் வேதனை, சிறையில் வாடும் அப்பாவி இளைஞர், யுவதிகளின் விடுதலை, தொழில் இல்லாத்திண்டாட்டம் மற்றும் நீறு பூத்த நெருப்பாகி இருக்கும் பல்வேறு பிரச்சினைகளுக்குத் தீர்வு காணுமாறு கோரி மக்கள் போராட்டங்களை நடத்துகின்றனர்.

இவ்வாறான பிரச்சினைகளுக்கு விரைவில் தீர்வைப்பெற்றுக்கொடுக்க அரசு முன்வர வேண்டும். - என்றார். (எ)

# மே தினத்தை முன்னிட்டு இ.போ.சவுக்கு 40 கோடி ரூபாவுக்கும் அதிக வருமானம்!

கொழும்பு, மே 02

மே தினத்தை முன்னிட்டு வழங்கப்பட்ட பஸ்களின் அடிப்படையில் இலங்கை போக்குவரத்துச் சபை 40 கோடி ரூபாவுக்கும் அதிகமான வருமானத்தை ஈட்டியுள்ளதாக இலங்கை போக்குவரத்துச் சபையின் தலைவர் ரமல் சிறிவர்தன தெரிவித்தார்.

சுமார் 4 ஆயிரம் பஸ்கள் கட்டணம் அறவிடப்பட்டு, பத்து அரசியல் கட்சிகளுக்கு வழங்கப்பட்டன என்று அவர் மேலும் கூறினார்.

இதேவேளை, மேதினத்தை முன்னிட்டு பல்வேறு அரசியல் கட்சிகள் 7 ஆயிரம் பஸ்களைப் பெற்றுக் கொள்வதற்கு விண்ணப்பித்திருந்தன என்று இலங்கை தனியார் பஸ் உரிமையாளர் சங்கத் தலைவர் கெமுனு விஜயரத்ன குறிப்பிட்டுள்ளார்.

இந்த விண்ணப்பங்களுக்கு அமைய பஸ்கள் ஏற்பாடு செய்யப்பட்டன. கட்டணம் செலுத்தாவிடின் பஸ்கள் வழங்கப்பட்டிருக்க மாட்டா என்று அவர் மேலும் கூறினார்.

இந்தநிலையில் மேதினத்தை முன்னிட்டு இரண்டு ரயில்கள் அரசியல் கட்சிக்காக ஒதுக்கப்பட்டிருந்தன என்று ரயில்வே திணைக்களம் தெரிவித்துள்ளது.

இந்த விசேட ரயில் சேவை மூலம் சுமார் 7 லட்சம் ரூபா வருமானம் ஈட்டப்பட்டுள்ளதாக திணைக்களத்தின் போக்குவரத்து அத்தியட்சகர் என்.ஜே.இதிபொலகே சுட்டிக்காட்டியுள்ளார்.

இந்த விசேட ரயில் சேவை மருதானை முதல் குருநாகல் நகருக்கும், மருதானை முதல் சிலாபம் இடையே இடம் பெற்றது.




விபத்தற்ற பயணமே
விருப்பத்துக்குரிய பயணம்!
சென்றடைய வேண்டிய நேரத்துக்கு
அரை மணி நேரத்துக்கு முன்பாகவே
பயணத்தை தொடங்குவோம்.
அவசரம், தேவையற்ற பதகளிப்பை
தவிர்ப்போம்.

விபத்தற்ற பயணமே
விருப்பத்திற்குரிய
பயணம்.

தகவல்: சுகாதார வைத்திய அதிகாரி பணிமனை / மாநகரசபை, யாழ்ப்பாணம்.


## நாளை

03.05.2017
புதன்கிழமை

நட்சத்திரம்: பூசம் மு.ப. 9.49 வரை
திதி: அட்டமி பி.ப. 1.09 வரை

சுபநேரம் : 4.26 - 5.56 வரை
இராகுகாலம் : 11.56 - 1.26 வரை

# ஐ.நாவில் இலங்கை பொறுப்பேற்ற விடயங்கள் துரிதகதியில் நடைமுறைக்கு வரவேண்டும்

## தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் மேதினப் பிரகடனத்தில் சுட்டிக்காட்டு

அம்பாறை, மே 02

ஐ.நா. மனித உரிமைப் பேரவைத் தீர்மானங்கள் 30/01,34/01 ஆகியவற்றில் இலங்கை பொறுப்பேற்றுக் கொண்ட விடயங்கள் அனைத்தும் முழுமையாகத் துரிதகதியில் நடைமுறைப்படுத்தப்பட வேண்டும்.

அம்பாறை ஆலையடி வேம்பு தர்ம சங்கரி பொது விளையாட்டு மைதானத்தில் நேற்று நடைபெற்ற மே தினக் கூட்டத்தில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு 15 கோரிக்கைகளை முன்வைத்து வெளியிட்டுள்ள மே தினப் பிரகடனத்தில் இந்த விடயம் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

அந்தப் பிரகடனத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளவை வருமாறு:-

★ ஐ.நா. மனிதஉரிமைப் பேரவைத் தீர்மானங்கள் 30/01, 34/01 ஆகியவற்றில் இலங்கை பொறுப்பேற்றுக் கொண்ட விடயங்கள் அனைத்தும் முழுமையாகத் துரிதகதியில் நடைமுறைப்படுத்தப்பட வேண்டும்.

★ தமிழ் மக்களின் அடிப்படை அரசியல் அபிலாஷைகளான சுய நிர்ணய அடிப்படையில் இணைந்த வடக்குக் கிழக்கிலே ஏற்படுத்தப்படும் கூட்டாட்சி முறைமைக்கு முழுமையான அதிகாரப் பங்கீடு செய்யப்படும் விதமான, அனைத்து மக்களாலும் ஏற்றுக் கொள்ளப்படும் அரசமைப்பு உருவாக்கப்பட வேண்டும்.

★ புதிதாக அறிமுகப்படுத்தப்படவுள்ள நாடாளுமன்றத் தேர்தல் முறையில், எண்ணிக்கையில் சிறுபான்மையினரான தமிழ், முஸ்லிம், மலையகத் தமிழ் மக்களின் பிரதிநிதித்துவம் பாதிப்புறாத வகையிலும் போர்ச் சூழல் காரணமாகக் குறைந்துள்ள தமிழ் மக்களது மக்கள் தொகை அவர்தம் பிரதிநிதித்துவத்தைக் குறைக்காது அதனை ஈடுசெய்யும் வகையிலும் ஒழுங்குகள் ஏற்படுத்தப்பட வேண்டும்.

★ போர்க் காலத்தில் காணாமல் ஆக்கப்பட்டவர்கள் தொடர்பான தீர்வு உடனடியாகக் காணப்பட வேண்டும். ஐ.நா. தீர்மானத்தில் இணங்கிக் கொண்டதற்கு ஏற்ப அரசால் தடுத்து வைக்கப்பட்டுள்ள அனைவரதும் பெயர்கள் கொண்ட பட்டியல் உடனடியாக வெளியிடப்பட்டு, ஏனைய ஒவ்வொருவர் தொடர்பாகவும் விசாரணை மேற்கொள்வதற்குக் காணாமல் ஆக்கப்பட்டோர் தொடர்பான பணியகச் சட்டம் விரைந்து நடைமுறைப்படுத்தப்பட வேண்டும்.

★ பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தின் கீழ்க் கைது செய்யப்பட்ட தமிழ் அரசியல் கைதிகள் அனைவரும் விடுவிக்கப்பட வேண்டும். இந்தச் சட்டம் நீக்கப்பட்டு மாற்றீடாகக் கொண்டுவரப்படவுள்ள சட்டம் சர்வதேசநியமங்களை முற்றாக அனுசரிப்பதாக அமைய வேண்டும்.

★ கடந்த மூன்று தசாப்தங்களில் அரச அடக்கு முறைகளுக்கு ஆட்பட்டுக் கொலை செய்யப்பட்ட தமிழ் ஊடகவியலாளர்களின் கொலைகள் சம்பந்தமான விசாரணைகள் உடனடியாக நடத்தப்பட்டுத் தண்டனை வழங்கப்படுவதுடன் பாதிக்கப்பட்டவர்களுக்கான நிவாரணங்களும் வழங்கப்பட வேண்டும்.

★ ஊடகவியலாளர்கள் தமது கடமைகளைச் சுயாதீனமாகவும், பயமின்றியும் செய்யக் கூடிய உத்தரவாதம் அளிக்கப்பட வேண்டும்.

★ பாதுகாப்புத் தரப்பினரால் வடக்கு, கிழக்கில் ஆக்கிரமிக்கப்பட்ட தமிழ், முஸ்லீம் மக்களின் நிலங்கள் வாக்குறுதி அளிக்கப்பட்டபடி காலதாமதமின்றி விடுவிக்கப்பட வேண்டும். இந்தக் காணிகளில் உரியவர்களைமீள்குடியேற்றுவதற்குத் தேவையான அனைத்து வசதிகளையும் செய்து கொடுத்து வீடற்றோருக்குக் கல் வீடுகள் கட்டிக் கொடுக்கும் திட்டம் அமுல்படுத்தப்பட வேண்டும். அவர்கள் தமது வாழ்வை மீள ஆரம்பிப்பதற்கான வாழ்வாதார வசதிகளும் செய்து கொடுக்கப்பட வேண்டும்.

★ தமிழ், முஸ்லிம் மக்கள் பூர்வீகமாக வாழ்ந்த பிரதேசங்களில் புத்தர் சிலைகள் நிறுவும் செயற்றிட்டம் உடனடியாகக் கைவிடப்பட வேண்டும்.

★ வனப் பிராந்தியமாகவும், வனவிலங்குக் காப்பகம் மற்றும் தொல்பொருள் பிரதேசங்களாகவும் பிரகடனப்படுத்தப்படுவதன் மூலம் தமிழ், முஸ்லிம் மக்களின் வாழிடங்கள் ஆக்கிரமிக்கப்படுதல் நிறுத்தப்பட்டுஅவ்விடங்கள் உரிய மக்களிடம் கையளிக்கப்பட வேண்டும்.

★ வடக்கு, கிழக்கில் தொழில் வாய்ப்பற்றுள்ள தமிழ்ப் பட்டதாரிகளுக்கும் ஏனைய இளைஞர் மற்றும் மகளிருக்கும் வேலை வாய்ப்புகள் ஏற்படுத்திக் கொடுக்கப்பட வேண்டும். அத்துடன் தொழில் வாய்ப்புக்கு ஏற்ற வகையில் கல்விக் கொள்கை சீரமைப்புச் செய்யப்பட வேண்டும்.

★ முதலீடுகள் மற்றும் தொழிற்றுறைகள் வடக்கு, கிழக்கில் ஏற்படுத்தப்பட வேண்டும் என்பதுடன் போர் காரணமாக அபிவிருத்தியில் பின்தள்ளப்பட்டுள்ள இவ்விரு மாகாணங்களும் விசேட ஏற்பாடுகள் மூலம் அபிவிருத்தி செய்யப்பட வேண்டும்.

★ முன்னாள் போராளிகள் சமூகத்தில் மீளிணைக்கப்படும் செயற்பாடு சீரானமுறையில் நடைபெற வேண்டும். அவர்களுக்கான வாழ்வாதார வசதிகள் செய்து கொடுக்கப்பட்டு ஜனநாயக, அரசியல் செயற்பாட்டுக்குள்ளும் அவர்கள் உள்ளீர்க்கப்பட வேண்டும்.

★ விலைவாசிக்கேற்ற சம்பள உயர்வோடு கூட்டுறவாளர்கள், தோட்டத் தொழிலாளர்கள் மற்றும் குடும்பங்களுக்குத் தலைமை தாங்கும் பெண்கள் ஆகியோரது சம்பளவேறுபாடுகள் சீர் செய்யப்பட வேண்டும்.

★ விவசாயம், மின்பிடி, கால்நடை வளர்ப்போர், சிறு கைத்தொழிலாளர்கள் ஆகியோருடைய வருவாய்கள் தடைப்படாமலும், குறைவுபடாமலும் இருக்க அரசு உத்தரவாதம் அளிக்கவேண்டும்.-என்றுள்ளது. (ஐ)

---

## வெலிக்கடை சிறைச்சாலையில் பெண் கைதிகள் மதுபான விருந்து

### கொழும்பு ஊடகம் பரபரப்புத் தகவல்

கொழும்பு, மே 02

வெலிக்கடை சிறைச்சாலையின் பெண்கள் பிரிவில் கைதிகள் சிலர் தங்கியிருக்கும் சிறை அறையில் மதுபான விருந்து நடைபெற்றது என கொழும்பு ஊடகம் ஒன்று தகவல் வெளியிட்டுள்ளது.

கடந்த வெள்ளிக்கிழமை இரவு மதுபான விருந்து நடத்தப்பட்டது எனச் சிறைச்சாலை வட்டாரங்களை மேற் கோள் காட்டி இந்தத் தகவல் வெளியிடப்பட்டுள்ளது.

இந்தச் சிறைச்சாலையின் பகுதியை ஆராய்ந்து பார்த்த போது மதுபான போத்தல் ஒன்றும் தொலைபேசி ஒன்று உள்ள பார்சல் ஒன்றும் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன என்று சிறைச்சாலை பேச்சாளர் ஒருவர் தெரிவித்துள்ளார்.

வெற்று ஜூஸ் போத்தல் ஒன்றில் மதுபானம் நிரப்பி சிறைச்சாலை மதிலுக்கு மேலாக எறியப்பட்டுள்ளது.

மதுபான விருந்து நிறைவடைந்தவுடன் பெண் சிறை கைதிகள் சிலர் நடனமாடி மகிழ்ச்சியடைந்துள்ளனர் என்றும் குறிப்பிடப்படுகிறது.

இது தொடர்பில் சந்தேகத்தின் பேரில் இரண்டு பெண் கைதிகளுக்குத் தண்டனை அதிகரிக்கப்பட்டுள்ளது என்று அந்தச் செய்திகள் மேலும் தெரிவிக்கின்றன. (ஐ)

---

## பரசூட் பயிற்சியில் தவறி வீழ்ந்த சிப்பாய்கள் காயம்!

கொழும்பு, மே 02

எம்பிலிபிட்டிய இராணுவ முகாமில் பயிற்சியில் ஈடுபட்டிருந்த இரு சிப்பாய்கள் தவறுதலாக விழுந்து காயமடைந்துள்ளனர்.

பரசூட்பயிற்சியில் ஈடுபட்டிருந்தபோதே இந்தச் சிப்பாய்கள் விழுந்து காயமடைந்துள்ளனர்எனத்தெரிவிக்கப்பட்டுள்ளது.

காயமடைந்த இரண்டு சிப்பாய்களும் சிகிச்சைகளுக்காக வைத்தியசாலையில்அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

சம்பவம் தொடர்பில், மேற்படி இராணுவ முகாமில் உள்ள அதிகாரிகள் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (ஐ)

---

## தொழிலாளர் தினத்தில் தொழில் தரக் கோரி பட்டதாரிகள் போராட்டம்



மட்டக்களப்பு, மே 02

நாடெங்கிலும் தொழிலாளர் தினம் கொண்டாடப்பட்டு வரும் நிலையில் தொழில் உரிமைக்காக வீதியோரங்களில் நின்று போராடும் நிலை உருவாகியுள்ளதுஎன்றுமட்டக்களப்பு வேலையற்ற பட்டதாரிகள் கவலை வெளியிட்டுள்ளனர்.

தொழில் உரிமைக்காக 70 ஆவது நாளாகவும் நேற்றும் போராட்டத்தை மேற்கொண்ட மட்டக்களப்பு வேலையற்ற பட்டதாரிகள் இவ்வாறு கூறினர்.

அவர்கள் தொடர்ந்து தெரிவிக்கையில்-

படித்தும் இன்று நாங்கள் தெருவோரப் பட்டதாரிகளாகஇருக்கின்றோம். குழந்தைகளையும் சுமந்து கொண்டு குடும்பப் பிரச்சினைகளுடன் மன வேதனைகளுடன் இங்கு வந்து வந்து செல்கின்றோம்.

இதனால் எங்களுக்கான நிரந்தரமான தொழில் உரிமையைப் பெற்றுத்தாருங்கள் என்று அரசியல்வாதிகளிடமும் அரசிடமும் கேட்டுக்கொள்கின்றோம்.-என்றனர். (ஐ)

---



புதிய ஜனநாயக மாக்ஸிச லெனினிசக் கட்சியின் புரட்சிகர மேதின ஊர்வலம் வவுனியாவில் இடம்பெற்றது.

இந்த மேதின ஊர்வலம் வவுனியா தமிழ் மத்திய மகா வித்தியாலயத்தில் ஆரம்பிக்கப் பட்டு, வவுனியா கடைவீதி வழியாக வவுனியா நகரசபை மண்டபத்தைச் சென்றடைந்து அங்கு மே தினக் கூட்டம் இடம்பெற்றுள்ளது. இந்த ஊர்வலத்தின்போது அரசியல் கைதிகள் சிறையில் அடைக்கப்பட்டிருப்பது போன்ற காட்சி உணர்வு பூர்வமாக உருவாக்கப்பட்டு வீதி வழியாக வாகனத்தில் எடுத்துச்செல்லப்பட்டிருந்தமை அனைவரதும் கவனத்தை ஈர்த்துள்ளது. (ஐ)

காலைக்கதிர்







# வேலையற்ற பட்டதாரிகள் விடயத்தில் 2 வாரங்களுக்குள் சாதகமான முடிவு!

### எதிர்க்கட்சித் தலைவர் சம்பந்தன் உறுதி

மட்டக்களப்பு,மே 02

வேலையற்ற பட்டதாரிகள் விடயத்தில் இரண்டு வாரங்களுக்குள் சாதகமான முடிவு பெற்றுத் தரப்படும்.

-இவ்வாறு எதிர்க்கட்சித் தலைவர் இரா.சம்பந்தன் தெரிவித்துள்ளார்.

மட்டக்களப்பு வேலையற்ற பட்டதாரிகளுக்கும், எதிர்க்கட்சித் தலைவர் இரா.சம்பந்தனுக்கும் இடையில் நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை மாலை அமெரிக்க மிஷன் மண்டபத்தில் சந்திப்பு ஒன்று இடம் பெற்றது. இந்தச் சந்திப்பின் போதே அவர் மேற்கண்ட உறுதிமொழியை வழங்கினார்.

இந்தச் சந்திப்பில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்களான எம்.ஏ.சுமந்திரன், மாவை சேனாதிராஜா, கிழக்கு மாகாணசபை விவசாய அமைச்சர் துரைராஜசிங்கம் ஆகியோர் கலந்து கொண்டமை குறிப்பிடத்தக்கது.

இது தொடர்பில் பட்டதாரிகள் தெரிவிக்கையில்-

இந்தச் சந்திப்பில் எங்களுடைய தொழில் உரிமையின் தேவைப்பாடு சம்பந்தமாக தெளிவுபடுத்தியுள்ளோம். எதிர்க்கட்சித் தலைவர் சம்பந்தன் ஐயா இன்னும் இரண்டு வாரங்களுக்குள் சாதகமான முடிவைப் பெற்றுத் தரப்படும் என்ற வாக்குறுதியை வழங்கியிருக்கின்றார். அவரது வாக்குறுதி நிறைவேற்றப்படும் என்ற எதிர்பார்ப்புடன் இருக்கின்றோம்.- என்றனர்.

## காத்தான்குடியில் விபத்து: இளைஞன் சாவு!

காத்தான்குடி,மே 02

மட்டக்களப்பு காத்தான்குடிப் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட ஆரையம்பதிப் பகுதியில் மோட்டார் சைக்கிள்கள் ஒன்றுடன் ஒன்று மோதி விபத்துக்குள்ளானதில், இளைஞன் ஒருவர் உயிரிழந்தார். மூன்று இளைஞர்கள் படுகாயமடைந்தனர்.

காத்தான்குடியைச் சேர்ந்த சலீம் முகம்மட் சப்னி (வயது-17) எனும் இளைஞனே இவ்வாறு உயிரிழந்தவர் ஆவார்.

காத்தான்குடியிலிருந்து ஆரையம்பதி நோக்கி நேற்றுமுன்தினம் ஞாயிற்றுக்கிழமை இரவு 11.30 மணியளவில் இரண்டு மோட்டார் சைக்கிள்களில் இந்த நான்கு இளைஞர்களும் சென்றுள்ளனர். இந்நிலையில் இரண்டு மோட்டார் சைக்கிள்களும் ஒன்றுடன் ஒன்று மோதி விபத்துக்குள்ளாகின எனத் தெரிவிக்கப்படுகிறது.

இந்தச் சம்பவத்தில் காயமடைந்த ஏனைய மூன்று இளைஞர்களும் மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையில் தற்போது சிகிச்சை பெற்று வருகின்றனர்.

இந்தச் சம்பவம் தொடர்பில் காத்தான்குடிப் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.

(ச)









மட்டக்களப்பு சித்தாண்டியில் சித்திரைப்புத்தாண்டை முன்னிட்டு, தாரம்பன் விளையாட்டுக் கழகத்தின் ஏற்பாட்டில் நேற்றுமுன்தினம் ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்ற கிராமிய கலாசார விளையாட்டு நிகழ்வுகளைப் படங்களில் காணலாம். (ச)

# அதிகூடிய வட்டியில் கடன் பெற்று மக்கள் கடனாளிகள் ஆகின்றனர்!

### மட்டு.மாவட்ட சமுர்த்திப் பணிப்பாளர் தெரிவிப்பு

மட்டக்களப்பு,மே 02

கிராமங்களுக்குப் படையெடுக்கின்ற நிதி நிறுவனங்களில் அதிகூடிய வட்டி வீதத்துக்கு கடன் பெற்று மக்கள் கடனாளிகளாக மாறுகின்றனர் என மட்டக்களப்பு மாவட்ட சமுர்த்திப் பணிப்பாளர் பி.குணரெட்ணம் தெரிவித்துள்ளார்.

கொக்கட்டிச்சோலை சமுதாய அடிப்படை வங்கியின் ஏற்பாட்டில் முனைக்காடு இராம கிருஷ்ணா விளையாட்டுக்கழகமைதானத்தில் நேற்றுமுன்தினம் ஞாயிற்றுக்கிழமை நடைபெற்ற சித்திரைப் புத்தாண்டு விளையாட்டு நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

இலகுவான மற்றும் குறைந்த வட்டி வீதத்தில் சமுர்த்தி வங்கிகள் ஊடாக கடன் வழங்கப்படுகிறது. இதனூடாக கடன் பெறாமல், அதிகூடிய வட்டி அறவிடும் நிதி நிறுவனங்களில் மக்கள் கடன் பெறுகின்றனர்.

சமுர்த்தித் திட்டத்தின் கீழ் மட்டக்களப்பில் 29 சமுர்த்தி வங்கிகள் உருவாக்கப்பட்டுள்ளன. சமுர்த்தி வங்கிகள் சேமிப்பை ஏற்றுக்கொள்வது மட்டுமல்லாமல், மக்களின் ஜீவனோபாயத்தை மேம்படுத்துவதற்காகவும் கடன் வழங்குகின்றன. -என்றார். (ச)

## மணல் அகழ்வில் ஈடுபட்ட இருவர் கைது!

திருகோணமலை குச்சவெளிப் பிரதேசத்தில் அனுமதிப்பத்திரம் இன்றி சட்டவிரோதமாக மணல் அகழ்வில் ஈடு பட்ட இரண்டு பேரைப் பொலிஸ் விசேட படையணியின் புல்மோட்டை முகாம் அதிகாரிகள் கைது செய்தனர்.

இதன்போது மணல் ஏற்றியவாறு நின்றிருந்த உழவு இயந்திரம் ஒன்றும், மணல் அள்ளுவதற்குப் பயன்படுத்தப்பட்ட உபகரணங்கள் சிலவும் கைப்பற்றப்பட்டுள்ளன.

கைது செய்யப்பட்டவர்கள் மேலதிக விசாரணைகளுக்காக குச்சவெளிப் பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளனர் எனத் தெரிவிக்கப்படுகிறது.

## கஞ்சாவுடன் இருவர் கைது!

கிண்ணியா,மே 02


கிண்ணியா பைசல் நகர் பகுதியில் கேரளக் கஞ்சா வைத்திருந்த இருவரை நேற்றுமுன்தினம் ஞாயிற்றுக்கிழமை திருகோணமலை பிராந்திய போதைப் பொருள் ஒழிப்புப் பொலிஸ் பிரிவினர் கைது செய்தனர்.

இவர்களில் ஒருவரிடமிருந்து 250 கிராமும் மற்றவரிடமிருந்து 5 கிராம் கஞ்சாவும் மீட்கப்பட்டன.

பிரஸ்தாப நபர்கள் இருவரும் கஞ்சாவுடன் கிண்ணியா பைசல் நகர்ப்பகுதியில் நடமாடுகின்றனர் எனக் கிடைத்த இரகசியத் தகவலையடுத்தே, இந்தக் கைது இடம்பெற்றது எனப் பிராந்திய போதைப் பொருள் ஒழிப்புப் பொலிஸார் தெரிவித்தனர். (ச)

மட்டக்களப்பு கல்லடி மகாவித்தியாலயம் ஆரம்பிக்கப்பட்ட தினம் மற்றும் மே தினம் என்பனவற்றை முன்னிட்டு நேற்றுத் திங்கட்கிழமை கல்லடி மகாவித்தியாலய பழைய மாணவர்கள் இரத்ததானம் செய்தனர்.

இதில் பழைய மாணவர்கள் கலந்து கொண்டு இரத்ததானம் செய்கின்றமையைப் படத்தில் காணலாம். (ச)



# தேர்தலில் போட்டியிடுவதற்காக பதவி விலகிய அரச பணியாளர்கள் மீண்டும் அதே பதவியைப் பெற முடியாது!

## பொதுநிர்வாக அமைச்சு அறிவிப்பு

கொழும்பு, மே 02

தேர்தலில் போட்டியிடுவதற்காக அரச சேவையில் இருந்து விலகிக் கொள்வோர் மீண்டும் அதே பதவியைப் பெற முடியாது என்று பொதுநிர்வாக அமைச்சு அறிவித்துள்ளது.

இதுதொடர்பாக பொதுநிர்வாக அமைச்சின் செயலர் ஜே.ஜே. ரத்னசிறி தெரிவித்தவை வருமாறு:-

தேர்தலில் தோல்வியடைந்த வேட்பாளர்கள் மீண்டும் அரச சேவையில் அதே பதவியில் அமர்ந்து கொள்ளும் மோசமான நடைமுறையைத் தடுப்பதற்கு அமைச்சரவை அங்கீகாரம் அளித்துள்ளது.

எனினும், தேர்தலில் போட்டியிடுவதற்காக பதவி விலகி, தேர்தலில் போட்டியிட்டு தோல்வியடைந்த பின்னர் அவர்கள் வேறோர் அரச நிறுவனத்தில் இணைந்து கொள்ளமுடியும். ஆனால், முன்னர் வகித்த பதவியைப் பெறமுடியாது.

அமைச்சரவை அனுமதி பெறப்பட்டதையடுத்து, இது தொடர்பான சுற்றறிக்கை அரச பணியகங்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.- என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

விரைவில் உள்ளூராட்சித் தேர்தல் நடக்கவுள்ள நிலையிலேயே அரசு இந்த நடவடிக்கையை எடுத்துள்ளது.

அரச பணியாளர்கள் தேர்தலில் போட்டியிட முடியாது என்பதால், அரச சேவையில் இருந்து விலகி, வேட்பாளர்களாகப் போட்டியிடுவது வழக்கம்.

எனினும், வெற்றி பெற முடியாத வேட்பாளர்கள் மீண்டும் அமைச்சுக்கு விண்ணப்பித்து, தமது முன்னைய பதவியைப் பெற்றுக்கொள்ளும் நடைமுறை இதுவரை இருந்து வந்தது. அந்த நடைமுறையே தற்போது மாற்றப்பட்டுள்ளது.

# 76 ஆண்டு கால சிற்றலை ஒலிபரப்பை நிறுத்தியது பி.பி.ஸி. தமிழோசை!

கொழும்பு, மே 02

பி.பி.ஸி. தமிழோசையின் சிற்றலைவானொலி ஒலிபரப்பு நேற்றுமுன்தினம் இரவுடன் முடிவுக்கு வந்திருக்கிறது.

நேற்று முன்தினம் இலங்கை நேரப்படி இரவு 9.15 மணி தொடக்கம் இடம்பெற்ற அரை மணிநேர சிறப்பு ஒலிபரப்புடன், சிற்றலை ஒலிபரப்பை பி.பி.ஸி. தமிழோசை நிறுத்திக் கொண்டது.

1941 ஆம் ஆண்டு மே மாதம் 3 ஆம் நாள் ஆரம்பித்த பி.பி.ஸி. தமிழோசையின் சிற்றலை ஒலிபரப்பு, 76 ஆண்டுகளுக்குப் பின்னர், நவீன தொடர்பாடல் கருவிகளின் வருகைக் குத்தாக்குப் பிடிக்க முடியாமல், முடிவுக்கு வந்திருக்கிறது.

பண்பலை ஒலிபரப்பு, இணையம், தொலைக்காட்சிகள் போன்ற நவீன தொடர்பாடல் கருவிகளின் துணையுடன் மக்களை இலகுவாகச் சென்றடையத் தொடங்கியுள்ள நிலையிலேயே, பி.பி.ஸி. தமிழோசையின் சிற்றலை வானொலி ஒலிபரப்பை நிறுத்தும் நிலை ஏற்பட்டுள்ளது.

பி.பி.ஸி. தமிழோசை இலங்கையில் போர் நடந்த காலகட்டங்களில் நாளிதழ்களும், தொலைக்காட்சிகளும் சென்றடைய முடியாத பகுதிகளில் நடப்பு நிலைவரங்களை மக்களுக்கு எடுத்துச் செல்வதில் முக்கிய பங்காற்றியிருந்தது.

ஈழத் தமிழர்கள் மத்தியில் பி.பி.ஸி. தமிழோசை பரந்துபட்ட வாசகர் வட்டத்தைக் கொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

# ஒட்டுமொத்த இலங்கையும் எனக்கு ஒரே தொகுதியே!

## மஹிந்த ராஜபக்ஷ கூறுகிறார்



கொழும்பு, மே 02

ஒட்டுமொத்த இலங்கையும் எனக்கு ஒரே தேர்தல் தொகுதியாகும் என்று முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

காலி முகத்திடலில் நடைபெறவுள்ள கூட்டு எதிர்க்கட்சியின் மே தினக் கூட்ட ஏற்பாடுகளைப் பார்வையிட நேற்றுமுன்தினம் சென்றிருந்த போது ஊடகவியலாளர்கள் எழுப்பிய கேள்விக்கே அவர் இவ்வாறு பதிலளித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

மே தினக் கூட்டத்தில் பங்கேற்கும் மக்களைத் தடுக்கப் பல்வேறு முயற்சிகள் மேற்கொள்ளப்படுகின்றன.

பிரச்சினைகளை - சவால்களை- எதிர்நோக்கி மேலும் தைரியமாக நாம் முன்நோக்கி நகர்வோம்.

அரசும், அரச தரப்புக்களும் நகைச்சுவையை வழங்கி வருகின்றன. அரசு ஒன்று மக்களுக்கு நகைச்சுவை வழங்கக்கூடாது.

காலி முகத்திடலிலிருந்து நாலா புறமும் [illegible]க்கும் போது கடந்த அரசின் ஆட்சிக் கால கட்டட நிர்மாணங்களையே காண முடிகின்றது.

இந்த அரசு அதனை அங்கு ஸார்ப்பணம் செய்யவே முயற்சிக்கின்றது.

காலி முகத்திடலின் எந்தவொரு மூலையில் மே தினக் கூட்ட மேடை அமைத்தாலும் அது அரசுக்குப் பெரும் தலையிடியை ஏற்படுத்தும்.- என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

# ராஜிதவைப் போல பல கட்சிகளில் கால் வைத்திருப்பவன் அல்லன் நான்!

## கூறுகிறார் சிரேஷ்ட அமைச்சர் ஜோன் செனவிரட்ண



கொழும்பு, மே 02

சுகாதார அமைச்சர் ராஜித சேனாரட்ணவை, தொழில் உறவுகள் அமைச்சர் ஜோன் செனவிரட்ண கடுமையாக சாடியுள்ளார்.

அமைச்சர் ராஜித சேனாரட்ன போன்று தாம் எல்லா கட்சிகளிலும் இணைந்து கொள்ளவில்லை என்று அவர் ஊடகம் ஒன்றுக்குக் கருத்துத் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

நான் அன்றும் இன்றும் என்றும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியிலேயே அங்கம் வகித்து வருகின்றேன். எனக்குள் இரட்டை நிலைப்பாடு கிடையாது. நான் எப்போதும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியிலேயே இருக்கின்றேன்.

என்னுடைய இரண்டு கால்களும் சுதந்திரக் கட்சியில் ஊன்றப்பட்டுள்ளன. ஒரு காலை ஒரு புறமும் மறு காலை மற்றொரு புறமும் வைத்துக் கொள்ளும் பழக்கம் எனக்கில்லை.

நான் சுதந்திரக் கட்சியில் அரசியலை ஆரம்பித்தேன். என்றாவது ஒரு நாள் சுதந்திரக் கட்சியின் ஊடாகவே அரசியலிலிருந்து ஓய்வுபெற்றுக் கொள்வேன்.

ராஜித சேனாரட்ண போன்று பல கட்சிகளுக்குச் செல்லவில்லை.- என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

அண்மைய நாள்களாக இரண்டு அமைச்சர்களுக்கும் இடையில் கருத்து முரண்பாடு நிலவி வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

அமைச்சரவைத் தீர்மானங்களை அறிவிக்கும் ஊடகவியலாளர் சந்திப்புக்களில் அமைச்சரவை இணைப் பேச்சாளர் ராஜித வெளியிடும் சில கருத்துக்கள் அரசை அசௌகரியத்திற்கு உள்ளாக்கும் வகையில் அமைந்துள்ளன என்றும் அமைச்சர் ஜோன் செனவிரட்ண குற்றம் சுமத்தியிருந்தார்.

இதேபோன்று அமைச்சர் ராஜிதவும், அமைச்சர் ஜோன் செனவிரட்ணவை பகிரங்கமாக சாடியிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

# மஹிந்தவால் ஓரங்கட்டப்பட்டனர் விமல் வீரவன்ஸ, உதய கம்மன்பில!

கொழும்பு, மே 02

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் மே தின பேரணி கூட்டம் நேற்று கொழும்பு, காலி முகத்திடலில் நடைபெற்றது.

இதற்கான அனைத்து நடவடிக்கைகளும் முன்னாள் அமைச்சர் பஸில் ராஜபக்ஷவால் மேற்கொள்ளப்பட்டிருந்தன என்று தகவல் வெளியாகியுள்ளது.

மஹிந்த ராஜபக்ஷவின் ஆலோசனை மற்றும் வழிகாட்டலின் கீழ் மே தின பேரணிக்கான அனைத்து ஏற்பாடுகளும் பஸில் ராஜபக்ஷவிடம் ஒப்படைக்கப்பட்டிருந்தன என்று தெரியவந்துள்ளது.

அதற்கமைய பிரசன்ன ரணதுங்க, பவித்ராவன்னி ஆராச்சி, ரேணுகா பெரேரா உள்ளிட்ட குழுவினரால் மேதினத்திற்கான ஏற்பாட்டு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

கடந்த வருடம் இதற்காக முன்நின்று செயற்பட்ட விமல் வீரவன்ஸ, உதய கம்மன்பில போன்றவர்கள் இம்முறையில் அந்த நடவடிக்கைகளில் இருந்து பின் தள்ளப்பட்டுள்ளனர்.

# கிராம மக்களின் முயற்சியால் ரயில் விபத்து தடுக்கப்பட்டது!



கொழும்பு, மே 02

காலியில் ஏற்படவிருந்த ரயில் விபத்தொன்று அந்தப் பகுதி மக்களின் முயற்சியில் தவிர்க்கப்பட்டுள்ளது.

காலி, பியதிகம பிரதேசத்தில் பயணித்த முச்சக்கர வண்டி ஒன்று ரயில் வீதியில் விழுந்து விபத்துக்குள்ளாகி உள்ளது.

இதன் காரணமாக ஏற்படவிருந்த ரயில் விபத்தொன்றை பிரதேச மக்கள் இணைந்து தடுத்துள்ளனர் என்று குறிப்பிடப்படுகின்றது.

இந்த முச்சக்கரவண்டி வீதியில் பயணித்துக் கொண்டிருக்கும்போது, வேறு வாகனம் ஒன்றிற்கு இடம் கொடுக்க முயற்சித்தபோது, பாலத்திற்கு அருகில் இருந்த மின்சார தூணுடன் மோதி வீதியில் கவிழ்ந்து விழுந்துள்ளது.

இந்த அனர்த்தம் காரணமாக முச்சக்கரவண்டி சாரதிக்கு சிறிய காயம் ஏற்பட்டுள்ளது.

இந்த நிலையில், உடனடியாகச் செயற்பட்ட மக்கள் அந்தப் பகுதிக்கு வருகைதரவிருந்த ரயிலை தடுப்பதற்கு நடவடிக்கைமேற்கொண்டனர். இதன்மூலம் அங்கு ஏற்படவிருந்த பாரிய விபத்து தடுக்கப்பட்டுள்ளதாக குறிப்பிடப்படுகின்றது.

இதன் காரணமாக காலி - கொழும்பு ரயில் பயணம் அரை மணி நேரம் தாமதம் ஏற்பட்டுள்ளது.

# சென்னையில் இடம்பெற்ற விபத்தில் இலங்கைப் பெண் ஒருவர் உயிரிழப்பு!



சென்னை, பாரிமுனைப் பகுதியில் நேற்றுமுன்தினம் ஏற்பட்ட வாகன விபத்தில் இலங்கை பெண் ஒருவர் உயிரிழந்தார்.

அந்தப் பெண் பயணித்த கெப் ரக வாகனம் ஒன்று 20 அடி பள்ளத்தில் வீழ்ந்ததில் இந்த விபத்து இடம்பெற்றுள்ளது.

குடும்பத்தினருடன் சுற்றுலாப் பயணம் மேற்கொண்ட இலங்கைப் பெண் ஒருவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

விபத்தில் கார் சாரதி உள்ளிட்ட 4 பேர் படுகாயமடைந்தனர். சம்பவத்தில் காயமடைந்த நால்வரும் ராஜிவ்காந்தி மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

இதுதொடர்பில் பொலிஸார் கூறுகையில்-

தி.நகருக்குப் பொருள்களை வாங்கச் சென்று திரும்பி வந்த நிலையிலேயே இந்த விபத்து இடம்பெற்றுள்ளது.

விபத்துக்குள்ளான அந்த வாகனம் கட்டுப்பாட்டை இழந்து வேகமாக வந்து தடுப்புச் சுவர்களை உடைத்துக்கொண்டு 20 அடி பள்ளத்தில் விழுந்துள்ளது.- என்றனர்.

சம்பவம் தொடர்பில் மேலதிக விசாரணைகளை பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர். (எ)

# 15 வருடங்களின் பின்னர் இலங்கையின் தனிநபர் வருமானத்தில் மாற்றம்

## மத்திய வங்கியின் புதிய அறிக்கையில் தகவல்

கொழும்பு, மே. 02

இலங்கையில் கடந்த வருடம் தனிநபர் வருமானம் 3 ஆயிரத்து 885 அமெரிக்க டொலராகக் குறைவடைந்துள்ளதாக மத்திய வங்கியின் புதிய வருடாந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

15 வருடங்களின் பின்னர் இவ்வாறு தனிநபர் வருமானம் குறைவடைந்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது. இறுதியாக 2001 ஆம் ஆண்டும் தனிநபர் வருமானம் குறைவடைந்துள்ளது.

அமெரிக்க டொலருடன் ஒப்பிடும்போது இலங்கை நாணயத்தின் பெறுமதி வீழ்ச்சி இதற்குப் பிரதான காரணமாக உள்ளதாக மத்திய வங்கி அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

ரூபாயின் பெறுமதிக்கு அமைய தனிநபர் ஒருவரின் வருமானம் 2015ஆம் ஆண்டு மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 522.355 ரூபாவாகக் காணப்பட்டுள்ளது.

இந்தநிலையில் அதனை கடந்த வருடத்துடன் ஒப்பிடும்போது 558.363 ரூபா வரையில் அதிகரித்துள்ளதுடன், அது நூற்றுக்கு 4.7 வீத அதிகரிப்பாகும்.

எனினும் சர்வதேச நாடுகளில் தனிநபர் வருமானம் அமெரிக்க டொலரின் பெறுமதிக்கு அமையவே மதிப்பிடப்படும். அதற்கமைய 2016 ஆம் தனிநபர் வருமானம் வீழ்ச்சியடைந்துள்ளதாகக் குறிப்பிடப்படுகின்றது. (எ)

## தினசரி ராசி பலன் 02.05.2017

ஏவிளம்பி வருஷம் 2017 ஆம் ஆண்டு சித்திரைத் திங்கள் 19 ஆம் நாள் ஸப்தமித்திதி. இரவு 8.52 மணி வரை. பின்னர் அஷ்டமி. நட்சத்திரம்: பூசம் பி.இ. 4.32 மணி வரை. பின்னர் ஆயிலியம். மரணயோகம் இரவு 8.52 மணி வரை. பின்னர் சுபயோகம். ராகுகாலம்: மாலை 3.14 மணி முதல் 4.47 வரை. சுபநேரம்: பகல் 10.23 மணி முதல் 11.53 மணி வரை. திவசம் செய்ய வேண்டிய திதி: சித்திரைமாத வளர்பிறை ஸப்தமி. பிறந்த நட்சத்திர வழிபாடு: பூசம்.

'ஜோதிடமணி' பிரம்மஸ்ரீ சி.ஜெகதீஸ்வரசர்மா ஜே.பி.

**மேஷம்:** யோசனையான நாள். குடும்பத்தில் கருத்து வேறுபாடுகள் உண்டாகும். கொடுக்கல், வாங்கலில் சிக்கல்கள் உண்டாகும்.

**ரிஷபம்:** சம பலன்கள் காணப்படுகின்றன. பிரயாணத்தில் எச்சரிக்கை தேவை. அலைச்சல்கள் அதிகமாகும். உத்தியோகத்தில் வேலைப்பளு அதிகரிக்கும்.

**மிதுனம்:** ஆக்கபூர்வமான பலன்கள் காணப்படுகின்றன. புதிய உறவுகள் மலரும். கஷ்டங்கள் பனிபோல விலகும். முடியாது நின்ற அனைத்து வேலைகளும் நடக்கும்.

**கடகம்:** அனுகூலமான நாள். பணவரவு தேவைக்கேற்ப கிடைக்கும். உத்தியோகத்தர்களுக்கு உயர்வுகள் கிடைக்கும். வியாபாரம் நன்கு விருத்தியடையும்.

**சிம்மம்:** சஞ்சலம் நிறைந்த நாள். வருமானம் குறையும். மனக்குழப்பம், யோசனை அதிகரிக்கும். உத்தியோகத்தில் வேலைப்பளு, பொறுப்புகள் அதிகமாகும்.

**கன்னி:** மேன்மையான நாள். வருமானம் வளமாக இருக்கும். நினைத்தவை நிறைவேறும். வியாபாரம் மேன்மை அடையும். உத்தியோகத்தில் திறமை பளிச்சிடும்.

**துலாம்:** மத்திம பலன்கள் காணப்படுகின்றன. உத்தியோகத்தர்களுக்கு வேலைப்பளு கூடுதலாகும். தூரப்பயணங்களைத் தவிர்க்கவும்.

**விருச்சிகம்:** நன்மையான நாள். செய்யும் தொழிலில் லாபம் கிட்டும். வழக்குகள் சாதகமாகும். புதிய முயற்சிகள் வெற்றி தரும்.

**தனுசு:** துயரமான நாள். மருத்துவச் செலவுகள் அதிகரிக்கும். எதிலும் விரயச் செலவுகள் கூடும். பிரயாணத்தில் எச்சரிக்கையும், உடமைகளில் பாதுகாப்பும் தேவை.

**மகரம்:** மத்திம பலன்கள் காணப்படுகின்றன. உடல்நலனில் அதிக கவனம் தேவை. புதிய முதலீடுகளைத் தள்ளிப் போடுவது நன்று.

**கும்பம்:** யோகமான நாள். தனலாபம் பெருகும். பூர்வீகச் சொத்துக் கிடைக்கும் யோகம் உண்டு. தொழில் துரித வளர்ச்சி அடையும்.

**மீனம்:** கீர்த்தியான நாள். பொருளாதாரம் வளமடையும். தொழிலில் லாபம் உண்டு. புதிய முயற்சியில் வெற்றி வாகை சூடலாம்.

சந்திராட்டமநாள்: மூலம், பூராடம், உத்தராடம் 1 ஆம் நட்சத்திரங்களில் பிறந்தோர் அவசியம் சுபகருமங்களை விலக்க வேண்டும்.

# குப்பைகளை மீள்சுழற்சி செய்யும் அறிவியல் முறைமை இல்லை!

## மேல் மாகாண அமைச்சர் சம்பிக்க கூறுகிறார்



கொழும்பு, மே 02

கொழும்பு மாநகர சபையிடம், குப்பைகளை மீள்சுழற்சி செய்வதற்கான அறிவியல் முறை இல்லை என்று, மேல் மாகாண நகர அபிவிருத்தி அமைச்சர் பாட்டாலி சம்பிக்க ரணவக்க தெரிவித்துள்ளார்.

எனினும், குப்பைகளை மீள் சுழற்சி செய்வதற்கான தொழில்நுட்ப உதவிகளைவழங்குவதற்காக, தகுதி மிக்க 70 அதிகாரிகள் உள்ளனர் என்றும் அவர் குறிப்பிட்டார்.

இதுதொடர்பில் அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

அறிவியல் முறை இன்மை உட்பட்ட பல்வேறு காரணங்களாலேயே, மீதொட்ட முல்லையில் பேரழிவு இடம்பெற்றது. வெள்ளம் காரணமாக, சுற்றுச் சூழல் உறுதியற்ற தன்மையில் காணப்பட்டது.

எனவே, எதிர்வரும் 6 மாத காலப்பகுதிக்குள், மீதொட்ட முல்லையில் உள்ள குப்பைகளை ஸ்திரப்படுத்துவதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்படும். அதன் பின்னர், அங்கு ஆபத்து ஏற்படும் என்று அஞ்சவேண்டிய அவசியம் ஏற்படாது .

நாட்டில், அறிவியல் கழிவு மேலாண்மை நிலையங்களை அமைக்க வேண்டிய கட்டாய நிலை உருவாகியுள்ளது.

இந்த நிலையங்களை அமைப்பதற்கு, அனைவரது ஒத்துழைப்பும் அவசியம்.-- என்றார். (எ)



யாழ். அராலி வீதி மஸ்ஜித் அபூபக்கர் பகுதி மக்களுக்கு துருக்கி நாட்டுத் தூதரகத்தால் அன்பளிப்புச் செய்யப்பட்ட சிறுவர்களுக்கான உதவிப் பொருள்களை இராஜாங்க அமைச்சர் விஜயகலா மகேஸ்வரன் வழங்கினார். (எ-19)

# நாளை மின் தடை

யாழ்ப்பாணம், மே 02

நாளை புதன் காலை 8 மணியிலிருந்து மாலை 5.30 மணி வரை யாழ் பிரதேசத்தில் மந்திகை, வல்லிபுரம், உபய கதிர் காமம், புனிதநகர், கற் கோவளம், மாதனை, நெல் லண்டை, பருத்தித்துறை வெளிச்சவீடு, சிவப்பிர காசம், 3 ஆம் குறுக்குத் தெரு, கற்கோவளம் ஐஸ் தொழிற்சாலை ஆகிய இடங்களிலும் -

வவுனியா பிரதே சத்தில் தேக்கவத்தை பிர தேசத்திலும் -

மன்னார்பிரதேசத்தில் பெரியகுளம் பிரதேசம், மடுக்கரை பிரதேசம், பரப் பாங்கண்டல் பிரதேசம் ஆகிய இடங்களிலும் மின் சாரம் தடைப்படும் என்று மின் பொறியியலாளர் அறி வித்துள்ளார். (இ)

# தமிழர் பொருளாதாரத்தை முடக்குவது தமிழின அழிப்புத் திட்டத்தின் நீட்சியே!

## அனைத்துலக ஈழத்தமிழர் மக்களவை சுட்டிக்காட்டு

போர் அரக்கனை ஏவி தமி ழர்களை நேரடியாக அழித் தொழித்த சிங்கள பௌத்த பேரினவாத அரசு இன்று தமிழர் களின் தொழிற் துறையை முடக்கி மறைமுகமாக அதனைத் தொடர்ந்து மேற்கொண்டு வரு கின்றது. சிங்கள அரசு தமிழர்கள் மீது தொட ரும் இனவழிப்பு யுத்தத்தின் கொடூரங்களையும் பொருளா தாரத் தடைகளையும் எதிர் கொண்டு தலை நிமிர்ந்து நாம் நிற்கின்றமைக்கு எமது பொருளாதாரப் பலமே அடிப்ப டைக் காரணமாகும். அதனைச் சிதைத்து எம்மை மண்டியிட வைக்கும் நோக்கிலேயே தொழிற் துறைகளை முடக்கும் வேலை வாய்ப்புகளில் திட்டமிட்ட புறக் கணிப்புக்களும் மேற்கொள்ளப் பட்டு வருகின்றன.

இவ்வாறு அனைத்துலக ஈழத்தமிழர் மக்களவை மே தினத்தை முன்னிட்டுவெளியிட் டுள்ள அறிக்கையில் தெரிவிக் கப்பட்டுள்ளது.

அதில் மேலும் தெரிவிக்கப் பட்டுள்ளவை வருமாறு:-

தமிழர் தாயகத்திற்குட்பட்ட நிர்வாக எல்லைக்குள்ளாகவே தகுதியான தமிழர்கள் இருக் கையில் வேண்டுமென்றே அவர்களைப் புறக்கணித்து சிங்களவர்களை பணியிலமர்த் தும் போக்கு முழுவீச்சில் நடந் தேறிவருகிறது. இந்த வஞ்ச கத்தால் பல்லாயிரம் தமிழ் இளைஞர், யுவதிகள் வேலை யற்றவர்களாக ஆக்கப்பட்டிருக் கின்றார்கள்.

இனவழிப்புப் போரின் கோரப்பிடியில் சிக்கிச் சின்னா பின்னமாகிப்போன தமது வாழ்வை தூக்கி நிறுத்தும் முனைப்பாக கடல் தொழிலை நம்பியிருக்கும் எமது மக்களின் நம்பிக்கையில் மண்ணைப் போடும் விதமாக இலங்கை இராணுவத்தின் முழு ஒத்துழைப் புடன் சிங்கள மீனவர்களால் எமது மக்களின் பாரம்பரிய மீன்பிடி உரிமை பறிக்கப்பட்டு வருகிறது.

இது போதாதென்று எல்லை தாண்டும் இந்திய மீனவர்களின் அத்துமீறிய படையெடுப்பால் தாயகக் கடல்வளம் மட்டுமன்றி எம்மவர்களின் வாழ்வும் மரமேறி விழுந்தவனை மாடேறி மிதித்த கதையாக சூறையாடப்பட்டுக் கொண்டிருக்கிறது.

தத்தமது வல்லமைக்கு ஏற்றாற்போல் முதலிட்டு வியா பார நிறுவனங்களை அமைத்து கந்தலான தமது வாழ்வை சீர்ப் படுத்தும் முயற்சியில் ஈடுபட் டுள்ள எமது மக்களை பாதிக்கும் வகையில் சிங்கள, இஸ்லாமிய, இந்திய வியாபாரிகளின் ஆதிக் கம் புற்றீசலாகப் பெருக்கெடுத் துள்ளது.

தமிழர்களின் பொருண் மியத்தைத் தூக்கி நிறுத்தும் விவசாயமும் சிங்கள பௌத்த பேரினவாதஅரசின்இனவழிப்புச் செயற்பாட்டில் சீரழிக்கப்பட்டு வருகிறது. வளம்கொழிக்கும் விளை நிலங்களாக விளங்கும் பல்லாயிரம் ஏக்கர் நிலங்கள் உயர் பாதுகாப்பு வலயம் என்ற போர்வையில் இராணுவத்தேவை களுக்காக வல்வளைப்புச் செய் யப்பட்டுள்ளன. அது போக இலங்கை அரசால் எதுவித ஆக்க பூர்வமான ஒத்துழைப் புகளும் கிடைப்பதில்லை.

காணாமல் ஆக்கப்பட்டோர் விவகாரம், அரசியல் கைதிகள் விவகாரம், நில மீட்பு விவகாரம், விதவைகள் விவகாரம், தாய் - தந்தை - உறவுகளை இழந்து தனித்துவிடப்பட்ட இளம்பராயத் தினர் விவகாரம், முன்னாள் போராளிகள் விவகாரம், மது-போதைப் பொருள் பயன்பாட் டால் சமூக விரோதிகள் ஆக்கப் பட்டுக்கொண்டிருக்கும் இளைய தலைமுறை, இந்தப் பின்ன ணியில் தலைகீழ் மாறுதல் கண்டிருக்கும் கல்விநிலை, கலை-கலாசாரம்-பண்பாட்டு ரீதியிலான சீரழிவு என தமிழர் தாயகத்தைச் சூழ்ந்திருக்கும் அத்தனை கொடுமைகளும் சிங்கள பௌத்த பேரினவாத அரசின் தமிழின அழிப்பு நட வடிக்கையின் நீட்சியாகவே அமைந்துள்ளன.

இவ்வாறான பின்னணியில் தமிழர்தாயகத்து பாட்டாளிகளின் வாழ்வு சிங்கள பௌத்த பேரின வாத அரசின் திட்டமிட்ட இன வழிப்பு நிகழ்ச்சி நிரலுக்குள் பந்தாடப்பட்டுக் கொண்டிருக் கும் சூழமைவில்தான் இந்த முறையும் தொழிலாளர்தினத்தை எதிர்கொண்டு நிற்கின்றோம். இனவழிப்புக் கொடுஞ் செய லுக்கு மத்தியில் போராட்டத்து டன் வாழ்வை நகர்த்திக் கொண் டிருக்கும் பாட்டாளி சொந்தங் களுக்கு தொழிலாளர் தின வாழ்த்துக்களை அனைத்துலக தமிழ் மக்கள் சார்பில் தெரிவித் துக்கொள்கின்றோம்.- என்றுள் ளது. (ஐ)

# ஊடகங்களால் உருவாக்கப்பட்டுள்ளதே பொன்சேகாவுக்கான இராணுவப் பதவி!

## அமைச்சர் ஹரிசன் கூறுகின்றார்

சரத்பொன்சேகாவுக்கு இரா ணுவ உயர் பதவி வழங்கப்படப் போகின்றது என்று வெளியான செய்தி ஊடகங்களால் உருவாக் கப்பட்டது என்று கிராமிய பொரு ளாதார அலுவல்கள் அமைச்சர் பி.ஹரிசன் தெரிவித்துள்ளார்.

இந்த விடயம் அமைச் சரவையில் ஒரு நகைச்சுவை யாகப் பேசப்பட்ட விடயம் என் றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

குளியாப்பிட்டிய பகுதியில் நேற்று முன்தினம் இடம்பெற்ற நிகழ்வொன்றில் கலந்து கொண்டு உரையாற்றியபோதே அவர் இவ்வாறு தெரிவித்துள் ளார்.

இதன்போது தொடர்ந்து உரை யாற்றிய அவர் தெரிவித்தவை வருமாறு:-

ஊடகங்களால் திரிபுபடுத் தப்பட்ட செய்தியாகவே இது பரவியுள்ளது. இது நடைமுறை அரசை இராணுவ பாணி அர சாகக் காட்ட முயற்சிக்கும் செய லாகும்.

அத்துடன், இந்த விடயம் கோட்டாபய மீண்டும் அதிகாரத் துக்கு வரும் நிலையை போன் றது.- என்றார். (ஐ)



கட்டுவன் மேற்கு பகுதியில் இருந்து விடுக்கப்பட்ட வேண்டு கோளுக்கு அமைய தந்தை உட்பட 2 பிள்ளைகளும் மாற் றுத்திறனாளிகளாக கொண்டு மீள்குடியேறி வாழ்ந்துவரும் மிகவும் பொருளாதாரம் நலிவான நிலையில் உள்ள குடும்பத் துக்கு இளவாலை வருத்தப்படாத வாலிபர் சங்கத்தின் 'உயர்த் தும் கரங்கள்' திட்டத்தினூடாக ஒரு லட்சம் ரூபா பெறுமதியான பசுமாடு ஒன்று வழங்கப்பட்டுள்ளது. (ஐ)

# துப்பாக்கி வைத்திருந்தவர் கைது!

அனுமதிப் பத்திரமின்றி கைத் துப்பாக்கி ஒன்றை தம்வசம் வைத்திருந்த ஒருவர் மோதரை யில் வைத்து காவல்துறையின ரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

அவரிடம் இருந்து கைத்துப் பாக்கிக்குப் பயன்படுத்தும், ரவைகளும் கைப்பற்றப்பட்டுள் ளன என்றும் பொலிஸார் குறிப் பிட்டுள்ளனர்.

சந்தேகத்திற்கு உரியவர் ஜாஎல பிரதேசத்தைச் சேர்ந்த 29 வயதானவர் என்றும் தெரி விக்கப்படுகிறது.

இவர் பயன்படுத்திய மோட் டார் சைக்கிளும் பொலிஸாரால் மீட்கப்பட்டுள்ளது என்று பொலி ஸார் தெரிவித்துள்ளனர். (ஐ)

# இலங்கைக் கடற்பரப்புக்குள் நுழைந்த வெளிநாட்டுப் பிரஜைகளுக்கு மறியல்

இலங்கைக் கடற்பரப்புக்குள் நுழைந்தசட்ட விரோத புகலிடக் கோரிக்கையாளர்களை விளக்க மறியலில் வைக்குமாறு உத்தர விடப்பட்டுள்ளது.

இதன்படி இந்த 32 பேரை யும் இன்றுவரை விளக்கமறிய லில் வைக்குமாறு மல்லாகம் நீதிமன்ற பதில் நீதிவான் உத் தரவிட்டுள்ளார் என்று பொலி ஸார் தெரிவித்துள்ளனர்.


காங்கேசன்துறைக் கடற்பரப் பில் நேற்று முன்தினம் மதியம் சட்ட விரோதமாக நுழைந்த 32வெளிநாட்டுப் பிரஜைகளில், மியன்மார் பிரஜைகள் 30 பேரும், 2 இந்தியர்களும் உள்ள டங்குகின்றனர் என்றும் கடற் படையினர் தெரிவித்துள்ளனர்.

சிறிய படகில் மிகவும் ஆபத் தான முறையில் இவர்கள் பய ணித்துள்ளனர் என்றும் கைது செய்யப்பட்டவர்களில் 9 சிறு வர்கள் காணப்படுகின்றனர் என்றும் கடற்படையினர் மேலும் குறிப்பிட்டுள்ளனர்.

இவர்கள் இலங்கைக் கடற் பரப்பினூடாக வேறு நாடுகளுக் குச் சட்டவிரோதமாகத் தப் பிச் செல்ல முயற்சித்திருக்கலாம் எனவும், இவர்கள் தொடர்பான மேலதிக விசாரணைகள் தொடர்ந் தும் முன்னெடுக்கப்பட்டு வரு கின்றன என்றும் இலங்கைக் கடற்படையினர் தெரிவித்துள்ள னர்.

கைது செய்யப்பட்டவர்கள் தெல்லிப்பழை வைத்தியாசலை யில் வைத்திய பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டுள்ளனர்.

வைத்தியசாலைக்கு விஜயம் செய்து பார்வையிட்ட மல்லாகம் பதில் நீதிவான் கைது செய்யப் பட்டவர்கள் அனைவரையும்



இன்றுவரை விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிட்டுள்ளார் என்றும் பொலிஸார் தெரிவித் துள்ளனர். (ஐ)

# விசேட பாதுகாப்புப் பிரிவுக்கு பொன்சேகாவுடன் சாகலவும்!

## பிரதமரின் யோசனை இது

கொழும்பு, மே 02

அமைச்சர் பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகா தலைமையில் அமைக்கப்பட உள்ள விசேட பாதுகாப்பு பிரிவில் அமைச்சர் சாகல ரத் நாயக்கவையும் உள்ள டக்க வேண்டும் என்று பிரதமர் ரணில் விக்கிரமசிங்க யோசனை முன்வைத்துள்ளார் எனத் தகவல் கள் தெரிவிக்கின்றன.

அவசரமான நிலைமைகளை கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வரவும், எதிர்ப்பு ஆர்ப்பாட்டங் களைக் கட்டுப்படுத்தவும் பொன் சேகா தலைமையில் விசேட பாதுகாப்புப் பிரிவை ஏற்படுத்த ஜனாதிபதி திட்டமிட்டுள்ளார் என்று பேசப்படுகிறது.

அரசை அசௌகரியத்துக்கு



உள்ளாக்கும் எதிர்ப்பு ஆர்ப்பாட் டங்கள், பணிப் புறக்கணிப்புகள் ஆகியவற்றை எதிர்கொள்ள அரசு உரிய வேலைத்திட்டத்தை முன்னெடுப்பது குறித்து அமைச்சரவையில் கலந்துரை யாடப்பட்டபோதே பிரதமர் இந்தக் கோரிக்கையை முன் வைத்துள்ளார். (ஐ)




பொன்.வேணு கிருஷ்ணா

சிரியா மற்றும் ரஷ்யா விடயத்தில் கடுமையான நிலைப்பாட்டை ட்ரம்ப் ஏற்றுக் கொண்டிருப்பதையும், நேட்டோ என்பது இனியும் பொருத்தமானதாக இல்லை என்று அவர் அறிவித்திருப்பதையும் மேற்கோள் காட்டி போஸ்ட் எழுதியது: ''இத்தகைய தலையாய பிரச்சினைகளில் ஒரு ஜனாதிபதி மிகவும் தவறாக இருப்பதில் இருந்து மிகவும் சரியான நிலைக்குப் போகின்ற போது, மிகக் கவனமாகத் தான் என்றாலும் கூட, புகாரிடுவதாய் அல்லாமல் கொண்டாடுவதே பொருத்தமான பதிலிறுப்பாக இருக்கும்.''

தேசியப் பாதுகாப்பு ஆலோசகராக மைக்கல் ஃபிளின்னை நீக்கியதையும் தேசியப் பாதுகாப்பு கவுன்சிலில் இருந்து ஸ்டீபன் பானனை நீக்கியதையும் தனியாய் குறித்துக் காட்டி, ''ட்ரம்ப் உருக்கொடுக்கத் தொடங்கியிருக்கும் அருமையான தேசியப் பாதுகாப்பு அணி''யை புகழுமளவுக்கு இந்தச் செய்தித்தாள் சென்றது. குறிப்பாக புதிய தேசியப் பாதுகாப்பு ஆலோசகரான எச்.ஆர்.மெக்மாஸ்டர் மற்றும் பாதுகாப்புச் செயலரான ஜேம்ஸ் மாட்டிஸ் ஆகியோர் மீது குறிப்பான உற்சாகத்தை போஸ்ட் வெளிப்படுத்தியது, முதலாமவர் ஒரு பதவியில் இருந்த தளபதி, இரண்டாமவர் ஓய்வு பெற்ற தளபதி இதன் மூலம் அமெரிக்காவின் வெளியுறவு மற்றும் பாதுகாப்புக் கொள்கை உறுதிபட இராணுவத்தின் கரங்களில் சென்று சேர்ந்திருக்கிறது என்பதை அது குறிப்பிடவில்லை.

போஸ்டின் பத்தியாளரான டேவிட் இக்னேஷியஸும் இதேபோன்றதொரு தொனியில், ''வெளியுறவுக் கொள்கையில், ட்ரம்ப் வெற்றியின் சுவையைக் காண்கிறார்'' என்ற தலைப்பின்கீழ் எழுதினார். ஜனாதிபதி ட்ரம்ப், மிக நாசகரமான முதல் இரண்டு மாதங்களுக்குப் பின்னர், கடந்த இந்த இரண்டு வார காலமாக வெளியுறவுக் கொள்கையில் சிறப்பாகச் செயல்பட்டு வருகிறார். சிரியா விடயத்தில் தீர்மானகரமாய் செயல்பட்டார், வட கொரியாவைக் கையாளுவதில் சீனாவை ஒரு சாத்தியமான கூட்டாளியாக ஆக்கிக் கொண்டார், நேட்டோவுடனான உறவுகளைப் பழுதுபார்த்தார், ரஷ்யாவுடனான தீவிர பதற்றங்களை நிவர்த்தி செய்வதில் இறங்கத் தொடங்கினார்.

நியூ யோர்க் டைம்ஸ் MOAB குண்டு வீச்சு குறித்து தலையங்கமோ கருத்தோ வெளியிடாமல், அமெரிக்காவின் இராணுவ மூர்க்கத்தனத்திற்கு ஆதரவிலான அதன் 'மனித உரிமை' அலட்டல் மோசடியில் அம்பலப்பட்டிருக்கிறது.

ஜனநாயகக் கட்சியின் இடது அணியாக சொல்லப்படுகின்ற ஒன்றுக்காகப் பேசுகின்ற Vox இணைய தளம் Zack Beauchamp எழுதியிருந்த ஒரு கருத்தை வெளியிட்டிருந்தது. இக் கருத்து ''அப்பாவி மக்கள் கொல்லப்பட்டதற்கான எந்த ஆதாரத்தையும் அமெரிக்க இராணுவம் கண்டிருக்கவில்லை'' என்ற பென்டகனின் நிலையை விமர்சனமின்றி ஒப்பித்ததோடு MOAB குண்டு வீசல் முழுமையாக முறையான செயலாகவே இருந்ததாக தொடர்ச்சியாய் வலியுறுத்தியது.

''இந்தக் குண்டு அமெரிக்க இராணுவம் வழக்கமாய் பயன்படுத்துகின்றவற்றை விடவும் பெரியது தான் என்ற போதிலும் கூட, அங்கே ஏதோ தவறாகி விட்டிருந்தது என்பதாய் அனுமானிப்பதற்கு எந்த முகாந்திரமும் இல்லை'' என்று அவர் எழுதினார். ''இந்த குண்டு வீச்சைப் பயன்படுத்துவதென்பதை உண்மையில் புரிந்து கொள்ளக் கூடியதாகவே இருக்கிறது'' என்று மேலும் சேர்த்துக் கொண்ட அவர், ''சுருக்கமாய் சொல்வதானால், ஊகமானது உச்சத்தில் இருந்தது'' என்று நிறைவு செய்தார்.

அமெரிக்க இராணுவம் கையில் கொண்டிருக்கக் கூடிய ஒரு அணுகுண்டுக்கு நெருக்கமான ஒன்றை வீசுவதில் -ஊடகங்கள் மற்றும் அரசியல் ஸ்தாபகத்தின் பொதுவான சம்மதம் மற்றும் ஏற்புடன்- உச்சமடைந்திருக்கக் கூடிய, கடந்த இரண்டு வார காலத்தின் திகிலூட்டும் நிகழ்வுகளில் இருந்து ஒரு அடிப்படையான அரசியல் பாடம் புரிந்து கொள்ளப்பட்டாக வேண்டும். சிரிய ஜனாதிபதி அசாத் விடயத்தில் ''மென்மையாக'' நடந்து கொள்வதற்காகவும் புட்டினின் வளர்ப்புப்பிராணி போல நடந்து கொள்வதற்காகவும் ட்ரம்ப் கண்டிக்கப்பட்ட நிலையைக் கண்ட, அமெரிக்க அரசு மற்றும் அரசியல் ஸ்தாபகத்திற்குள்ளான கடுமையான மோதலானது, முழுக்கமுழுக்க ஏகாதிபத்திய வெளியுறவுக் கொள்கையின் மீதே கவனம் குவித்ததாய் இருந்தது.

மிக உடனடியான கவனக்குவிப்பை சீனாவுடனான மோதலுக்கு அளிக்க விரும்பி, சிரிய ஆட்சி மற்றும் ரஷ்யாவுடனான மோதலைத் தணித்து விளையாட ட்ரம்ப் முனைந்ததை சகித்துக் கொள்ள முடியாத உளவுத்துறை மற்றும் இராணுவ ஸ்தாபகத்தின் செல்வாக்கான பிரிவுகளுக்கு ஜனநாயகக் கட்சி முன்னிலை கொடுத்தது. ட்ரம்ப்புக்கு நெருக்குதலளிக்கவும் அவரது தேசியப் பாதுகாப்பு அமைப்பில் ஒரு பெரும் மாற்றம் கொண்டுவரவும் ஜனநாயகக் கட்சியினர், 2016 தேர்தலில் ரஷ்யா ஹேக் செய்ததாகச் சொல்லி இட்டுக்கட்டப்பட்ட கதைகளைப் பயன்படுத்தினர்.

இராணுவ மற்றும் உளவு எந்திரத்தின் மிகக் கடினநிலைப்பாடு கொண்ட மற்றும் இராணுவவாத கன்னைகளுக்கு அவர்கள் அளிக்கின்ற எந்த நிபந்தனையுமற்ற ஆதரவுடன் ஒப்பிட்டால் உள்நாட்டு மற்றும் சமூகக் கொள்கை தொடர்பாக ட்ரம்ப்புடன் அவர்கள் கொண்டிருக்கிற பேதங்கள் ஒன்றுமேயில்லை என்றாகி விடும்.

ட்ரம்ப்பின் புலம்பெயர்ந்தவர்கள் மீதான தாக்குதல்கள் மற்றும் அடிப்படை சமூக வேலைத்திட்டங்களை இல்லாதொழிப்பதற்கான திட்டங்கள் ஆகியவற்றின் காரணத்தால் ஜனவரி மற்றும் பெப்ரவரியில் வெடித்த வெகுஜன ஆர்ப்பாட்டங்களின் தலைமையில் இருந்த நடுத்தர வர்க்க தாராளவாத மற்றும் போலி-இடது அரசியல் சக்திகள், எதிர்ப்பைக் கொஞ்சம் கொஞ்சமாக ஜனநாயகக் கட்சியினரின் பின்னால் திருப்பி விட்டன, இதன்மூலம் வோல் ஸ்ட்ரீட் மற்றும் அமெரிக்க ஏகாதிபத்தியத்தின் கட்சியான இக்கட்சியானது, ட்ரம்ப்-விரோத எதிர்ப்பை மத்திய கிழக்கிலான இராணுவ அதிகரிப்புக்கும் அணு-ஆயுத வல்லமை பெற்ற ரஷ்யாவுக்கு எதிரான ஒரு போருக்கு தயாரிப்பு செய்வதற்குமான அதன் பிரசாரத்தின் பின்னால் திருப்பி விடுவதற்கு வழி வகுத்தன.

புலம்பெயர்ந்தவர்கள் மீதும் சமூக வேலைத்திட்டங்கள் மீதுமான ட்ரம்ப்பின் போர் குறித்த விமர்சனத்தை ஜனநாயகக் கட்சியினர் ஏறக்குறைய கீழே போட்டு விட்டனர். இப்போது அவர்களது வெளியுறவுக்கொள்கை நிலையை ட்ரம்ப் ஏற்றுக் கொண்டு விட்ட நிலையில், அவர்கள் அவரது சமூகத் தாக்குதல்களில் இன்னும் நேரடியாக ஒத்துழைத்துச் செயலாற்றுவார்கள்.

**மனிதகுலத்திற்கு எதிரான ஒரு குற்றம்**

அமெரிக்க இராணுவம் தனது படைக்கலசாலையில் இருப்பவற்றில் அணு-சாராத மிகப் பெரும் குண்டு வகையை வியாழக்கிழமையன்று (13.04.2017) ஆப்கானிஸ்தான்-பாகிஸ்தான் எல்லையில் போட்டிருப்பதானது மனிதகுலத்திற்கு எதிரான ஒரு குற்றமாகும். அமெரிக்க அரசாங்கமும் வெகுஜன ஊடகங்களும் நச்சுவாயு பிரயோகித்ததாக கண்டித்து சிரியா மற்றும் ரஷ்யா மீது ஒரு பொய்யான பரப்புரைப் பிரசாரத்தில் ஈடுபட்டு வந்து கொண்டிருந்த நிலையில், அமெரிக்க இராணுவமானது மிக அரக்கத்தனமான பெரிய வெடிமருந்து குண்டு வீசப்பட்டமை (Massive Ordnance Air Blast - MOAB) என்னும் ஆயுதத்தை ஆப்கானிஸ்தானில் பயன்படுத்துவதற்



காய் நிலைநிறுத்திக் கொண்டிருந்தது.

குண்டுவீச்சின் பாதிப்புக் குறித்து பென்டகன் வெகு அரிதான விவரங்களையே வெளியிட்டிருக்கின்றது என்ற போதும் கூட, நடந்ததாகச் சொல்லப்பட்ட சிரிய இரசாயனத் தாக்குதல் -இது எந்த விதத்திலும் நிச்சயமாக தெரிந்திருக்கவில்லை- உண்மையில் நடந்திருந்ததாகவே கொண்டாலும் கூட அதில் கொல்லப்பட்டவர்களைப் போல பல மடங்கு MOAB வீசப்பட்டதில் கொல்லப்பட்டிருப்பார்கள் என்பதை ஒருவர் நிச்சயமாகச் சொல்ல முடியும்.

ஹிரோஷிமா நாகாசாகி நகரங்கள் அணுகுண்டுவீசி அழிக்கப்பட்டு எழுபத்திரெண்டு ஆண்டுகளுக்குப் பின்னர், இப்பூகோளத்தின் மிக இரக்கமற்ற குற்றவியல் சக்தி அமெரிக்கா தான் என்பதை அது மீண்டுமொருமுறை நிரூபித்திருக்கிறது.

MOAB பயன்பாட்டின் தாக்கம் ஆப்கானிஸ்தானை கடந்து நீண்டு செல்லக் கூடியதாகும். அமெரிக்க இராணுவம், அமெரிக்க ஏகாதிபத்தியத்தின் நலன்களின் பேரில் செய்யத் துணிந்தவற்றுக்கு அங்கே எந்தத் தடைகளும் இருக்கவில்லை என்பதையே இது எடுத்துக்காட் டுகிறது, உண்மையை சொல்லப் போனால், அதைக் காட்டுவது தான் இந்தத் தாக்குதலின் பிரதான நோக்கமாகவும் இருக்கிறது.

**கொரிய தீபகற்பம் தொடங்கி சிரியா மற்றும் கிழக்கு ஐரோப்பா வரையிலும் பதற்றங்கள் பெருகிச் செல்லும் நிலை**

கொரிய தீபகற்பம் தொடங்கி சிரியா மற்றும் கிழக்கு ஐரோப்பா வரையிலும் பதட்டங்கள் பெருகிச் செல்லும் நிலையின் உள்ளடக்கத்தில் இதனை கருதிப் பார்த்தால், ஆப்கானிஸ்தான் மீது மிகப் பெரும் குண்டுவீசி வெடிக்கச்செய்திருப்பதென்பது, ரஷ்யா, ஈரான், வட கொரியா மற்றும் அமெரிக்காவின் நலன்களுக்கு சவால் விடத் துணிகின்ற எந்தவொரு நாட்டிற்கும் அவற்றின் மீது அமெரிக்க ஏகாதிபத்தியம் கட்டவிழ்த்து விடத்தக்க வன்முறையின் மட்டத்திற்கு எந்த வரம்புமில்லை என்ற ஒரு எச்சரிக்கை விடுப்பதையே குறித்து நிற்கிறது.

உத்தியோகபூர்வமாக GBU-43/B Massive Ordnance Air Blast என்று அறியப்படுவதும் பென்டகனால் MOAB அல்லது ''அத்தனை குண்டுகளுக்கும் தாய்'' என்று குறிப்பிடப்படுவதுமான இந்த ஆயுதம் நடுவானில் கிட்டத்தட்ட 20,000 பவுண்டுகள் வெடிமருந்தை வெடிக்கச்செய்து, அந்தகாற்றுவெளியை தீப்பற்றச் செய்து, 1,000 யார்கள் (yards) சுற்றுவட்டத்திற்குள்ளாக இருக்கும் எதுவொன்றும் தெரியாவண்ணமான ஒரு பெரிய அதிர்வை உருவாக்குகிறது. இதன் அதிர்ச்சி அலைகள் 1.7 மைல்கள் சுற்றுவட்டம் வரையிலும் மனிதர்களைக் கொல்லும் திறம்படைத்தவையாகும். குறிவைக்கப்படும் மண்டலத்திற்குள் மாட்டிக் கொண்டவர்களுக்கு இந்த வெடிப்பின் பாதிப்பு ஒரு அணு ஆயுதம் வெடித்ததற்கு நிகரான பாதிப்பைக் கொண்டிருக்கும்.

**இந்த ஆயுதம் 14 வருட காலத்தில் எந்த ஒரு சண்டையிலும் பயன்படுத்தப்படாது இருந்து வந்தது**

ஈராக் மீதான 2003 அமெரிக்க ஆக்கிரமிப்பை ஒட்டி கட்டவிழ்த்து விடப்பட்ட ''அதிர்ச்சியில் பிரமிக்கச் செய்யும்'' பிரசாரத்திற்காய் பயன்படுத்துவதற்கென வடிவமைக்கப்பட்ட இந்த ஆயுதம் 14 வருட காலத்தில் எந்த ஒரு சண்டையிலும் பயன்படுத்தப்படாது இருந்து வந்தது. சுமார் ஒரு மில்லியன் ஈராக்கிய உயிர்களைக் காவு கொண்ட ஒரு போர் மற்றும் ஆக்கிரமிப்பை பென்டகன் நடத்திய போதிலும் கூட, இந்த ஆயுதமானது அமெரிக்க மூலோபாய நோக்கங்களுக்கு சேவை செய்யக் கூடிய மிக அழிவுகரமான ஆயுதமாக பார்க்கப்பட்டது.


ஆப்கானிஸ்தானில் இந்த படுபயங்கர ஆயுதத்தைப் பயன்படுத்துவதற்கான திட்டமிடல் ஒபாமா நிர்வாகத்தின் கீழேயே தொடங்கியது.

பென்டகன் தலைமையகம் கூறுவதன் படி, ISIS உடன் இணைந்த ஆப்கானிய பிரிவுகளால் பயன்படுத்தப்பட்டதாக சொல்லப்பட்ட பதுங்குகுழி அமைப்புகள் மற்றும் சுரங்கப்பாதைகளை உருத்தெரியாமல் ஆக்குவதற்காக ஆப்கானிஸ்தானின் கிழக்கு நாங்கர்ஹார் மாகாணத்திலுள்ள ஒரு மூலையில் உள்ள மாவட்டத்தின் மீது இந்த உண்மையான ''பேரழிவு ஆயுதம்'' முதன் முறையாக வீசப்பட்டது.

வெறும் ISIS சின்னத்தை மட்டுமே ஏற்றுக் கொண்டிருந்த இஸ்லாமியவாத கெரில்லாக்கள் என்னும் பாகிஸ்தானை அடிப்படையாகக் கொண்ட ஒரு சிறிய மற்றும் அதிக ஆயுதங்களற்ற ஒரு குழுவின் மீது இத்தகையதொரு பெரிய ஆயுதத்தை வீசுமளவுக்கு எந்த உடனடியான நியாயமோ, அதற்கு சளைத்த மூலோபாய நியாயமோ அங்கே ஏதுமில்லை. மாறாய், ஒரு அணு ஆயுதத் தாக்குதலுக்கு சற்றுக் குறைந்த ஒரு படுபயங்கரத் தாக்குதலை நடத்த முடிகின்ற அமெரிக்க இராணுவ வலிமையின் ஒரு கணிப்பிடப்பட்ட எடுத்துக்காட்டலுக்கான அத்தனை அடையாளங்களையும் இந்த தாக்குதல் கொண்டிருக்கிறது.

சிரியாவுக்கு எதிராய் அந்நாட்டு அரசாங்கத்தின் வான் தளத்திற்குள் 59 கப்பல்தள ஏவுகணைகளை ஏவி குறைந்தபட்சம் 15 சிரியர்கள் -இவர்களில் பெரும்பான்மையோர் அப்பாவி மக்கள்- கொல்லப்படக் காரணமாக அமைந்த இராணுவ மூர்க்கத்தனத்தின் ஒரு அப்பட்டமான நடவடிக்கையை அமெரிக்கா நடத்தி முடித்து வெறும் ஒரு வார காலம் தள்ளி இந்தக் குண்டு வீச்சுத் தாக்குதல் வந்திருக்கிறது.

(கேள்வி தொடரும்...)






# தமிழ்த் தேசிய எழுச்சி

ஈழத் தமிழினத்தின் தேச விடுதலை பற்றி சிந்தனைப் புரட்சியை முன்னெடுத்தவர்களுள் விடுதலைப் புலிகளின் தத்துவ ஆசிரியரான அன்ரன் பாலசிங்கம் மிக முக்கியமானவர். அரசியல் ஞானம் மிக்க தத்துவ ஆசிரியர்.

ஈழத் தமிழினத்தின் உயரிய வரலாற்றுப் பதிவு ஏடான 'போரும் சமாதானமும்' என்ற நூலை அவர் படைத்திருக்கின்றார். இலங்கைத் தீவில் தமிழ்த் தேசிய எழுச்சி பற்றி அந்நூலில் அவர் குறிப்பிடும் நுட்பமான – நுண்ணியமான – விடயங்களை இக்கட்டுரைத் தொடரில் நாம் அறிந்து கொள்ளலாம்.




133

## புலிகளின் போரியல் வளர்ச்சியும் நோர்வேயின் சமாதான முயற்சியும்

### *நோர்வேயின் சமாதான முயற்சி*

1998 ஆம் ஆண்டின் பிற்பகுதியில், வன்னியில் சிறுநீரக வியாதியால் நான் கடும் சுகவீனமுற்றிருந்த வேளையில், என்னை சிகிச்சைக்காக வெளிநாட்டுக்கு அனுப்பி வைக்க நோர்வே அரசும் சர்வ தேசச் செஞ்சிலுவைச் சங்கமும் மேற்கொண்ட முயற்சிகள் பயனளிக்கவில்லை. விடுதலைப் புலிகளின் தலைமைப்பீடத்திடம் ஏற்கமுடியாத கடும் நிபந்தனைகளை விதித்து, ஜனாதிபதி சந்திரிகாவும், வெளிவிவகார அமைச்சர் கதிர்காமரும் எனது வெளியுலகப் பயணத்துக்கு முட்டுக்கட்டை போட்டனர். சந்திரிகா அரசின் மனிதாபிமானமற்ற போக்கினால் சினமடைந்த தலைவர் பிரபாகரன், எமது இயக்கத்தின் கப்பல் சேவை மூலமாக, இரகசியமாக என்னையும் எனது துணைவியாரையும் தாய்லாந்துக்கு அனுப்பிவைத்தார். தாய்லாந்தின் தலைநகரான பாங்கொக்கில் அவசர சிகிச்சை பெற்ற நான், எனது பிரித்தானிய கடவுச் சீட்டைப் புதுப்பித்துக் கொண்டு 1999 ஆம் ஆண்டு மே மாதம் லண்டன் வந்து சேர்ந்தேன். இந்தத் தகவல்கள் எனது மனைவி எழுதிய 'சுதந்திரவேட்கை' எனும் நூலில் விவரமாகத் தரப்படுகிறது.

நாங்கள் லண்டன் வந்து சேர்ந்ததும் நோர்வே சமாதானத் தூதுவர்கள் எம்முடன் தொடர்பை ஏற்படுத்திக் கொண்டனர். முன்னாள் நோர்வே உதவி வெளிவிவகார அமைச்சர் வேகர் ஸ்ரோமன், எரிக் சொல்ஹெய்ம் , முன்னாள் கொழும்பு நோர்வேத் தூதுவர் ஜோன் வெஸ்ட்போர்க் ஆகியோர் லண்டனிலுள்ள எமது இல்லத்துக்கு அடிக்கடி வருகை தந்து எமது விடுதலைப் போராட்டம் பற்றியும், எமது இயக்கத்தின் கொள்கை, இலட்சியம் பற்றியும் சமாதானப் பேச்சுகளுக்கான வாய்ப்புகள் பற்றியும் எம்முடன் கலந்துரையாடுவதுண்டு. சமாதான முன்னெடுப்புகளுக்கு நோர்வே அரசு அனுசரணை வழங்கத் தயாராக இருக்கின்றது எனவும், இதற்கு ஜனாதிபதி சந்திரிகா இணங்கியிருக்கிறார் எனவும் இவர்கள் எம்மிடம் தெரிவித்தனர். சந்திரிகா அரசு தனது கடும் போக்கான இராணுவ அணுகுமுறையைக் கைவிட்டு, தமிழர் தாயகத்தில் இயல்பு நிலையையும், சமாதானச் சூழ்நிலையையும் ஏற்படுத்தினாலேயே பேச்சுகள் நிகழ்வது சாத்தியமாகும் என நான் நோர்வேத்தூதுவர்களிடம் விளக்கினேன். இதற்கிடையில் நோர்வே அரசின் உதவியுடன், ஒஸ்லோ நகரிலுள்ள அரச மருத்துவ மனையில் எனக்குச் சிறுநீரக மாற்றுச் சிகிச்சை நிகழ்ந்தது. இதனையடுத்து, நான் ஒஸ்லோவில் தங்கியிருந்த வேளை, நோர்வேயின் முன்னாள் வெளிவிவகார அமைச்சர் வெலிபோர்க்கும், எரிக் சொல்ஹெய்மும் என்னைச் சந்தித்து; தலைவர்



பிரபாகரனை நோர்வே அரச பிரதிநிதிகள் சந்திக்க விரும்புகின்றனர் எனவும் அதற்கான ஏற்பாடுகளை ஒழுங்கு செய்து தருமாறும் வேண்டினர். நான் உடனடியாகவே பிரபாகரனுடன் தொடர்பு கொண்டு நோர்வே அரசின் விருப்பத்தைத் தெரிவித்தேன். அதற்கு அவர் இணக்கம் தெரிவித்தார்.

2000 ஆம் ஆண்டு, ஒக்ரோபர் மாதம் 31 ஆம் நாள் தலைவர் பிரபாகரனுக்கும் நோர்வே சமாதானத் தூதுவர்களுக்கும் மத்தியிலான சந்திப்பு நிகழ்ந்தது. வன்னிப் பிராந்தியத்தின் மையத்தில் அமைந்திருந்த மல்லாவியில் நிகழ்ந்த இந்தச் சந்திப்பில் நோர்வே அரசு சார்பில் நோர்வேயின் விசேட தூதுவர் எரிக் சொல்ஹெய்ம், கொழும்புக்கான நோர்வேத் தூதுவர் ஜோன் வெஸ்ட்போர்க், நோர்வே வெளிவிவகார அமைச்சின் நிர்வாக அலுவலர் சிறீமதி ஜெர்ஸ்டி ரோம்ஸ்டல் ஆகியோர் கலந்து கொண்டனர். பிரபாகரனுக்கு உதவியாக வீரச்சாவடைந்த சங்கரும் அரசியல்துறைப் பொறுப்பாளர் தமிழ்ச்செல்வனும் இந்தச் சந்திப்பில் பங்கு பற்றினர்.

தமிழ்த் தேசிய இனப்பிரச்சினைக்கு சமரச பேச்சுகள் மூலம் ஓர் அரசியல் தீர்வை எட்டுவதற்கு விடுதலைப் புலிகள் இயக்கம் தயாராக இருக்கிறது என நோர்வேத் தூதுவர்களிடம் பிரபாகரன் விளக்கினார். ஆனால், சந்திரிகாவின் அரசு இராணுவ வழி முறையைக் கையாண்டு யுத்தத்தைத் தீவிரப்படுத்தி தமிழர் தாயகத்தை அடிமை கொள்வதிலேயே முனைப்பாக இருக்கிறது என்பதையும் விளக்கினார். புலிகள் இயக்கம் பேச்சு மேசையில் அமர்வதற்கான ஏது நிலைகள் பற்றிக் கருத்துத் தெரிவித்தபோது, படிப்படியாகச் சமூக நிலையை உருவாக்கி, மக்களை இயல்பு வாழ்வுக்குத் திரும்ப வைப்பது ஓர் இன்றியமையாத கோரிக்கையாக இருக்கும் என்பதை வலியுறுத்திய பிரபாகரன், ஒரு யுத்த சூழ்நிலைக்குள் தமிழ் மக்கள் சிக்குண்டு இருக்கும்போது, இத்தகைய பேச்சுகளில் ஈடுபடவும் விடுதலைப் புலிகள் இயக்கம் தயாராக இல்லை என்பதையும் தெளிவுபடுத்தினார். சமூக நிலையை மீள உருவாக்குதல் என்னும்போது முழுமையான ஒரு போர் நிறுத்தத்தை நடைமுறைக்குக் கொண்டுவருதல், தமிழர் தாயகத்தின் மீது திணிக்கப்பட்டிருக்கும் பொருளாதாரத் தடையை முழுமையாக நீக்குதல், சாதாரண அன்றாட வாழ்வுக்கு மக்களை மீளக் கொண்டுவருதல் என்பவை நிகழ வேண்டும் என்பதை அவர் மீளவும் விளக்கினார். இனவேறுபாடுகளைக் களைந்து, நாட்டின் அமைதிச் சூழலை ஏற்படுத்துவதில் சந்திரிகா அம்மையார் நேர்மையாகவே உள்ளார் எனின், யுத்தத்தைத் தொடரும் எண்ணத்தை அவர் முழுமையாகக் கைவிட வேண்டும் என்றும் பிரபாகரன் குறிப்பிட்டார். வன்னியில் இருந்து திரும்பிய நோர்வே சமரசக் குழு ஜனாதிபதி சந்திரிகாவை கொழும்பில் சந்தித்து, பிரபாகரனின் கருத்தையும், நிலைப்பாட்டையும் தெரிவித்தபோது, பேச்சுக்கு முன்பாக போர் நெருக்கடியைத் தளர்த்தும் யோசனைக்கு அவர் சாதகமான பதிலை அளிக்கவில்லை.

விடுதலைப் புலிகளின் தலைவருக்கும், நோர்வே அரசின் சமாதான தூதர்களுக்கும் இடையிலான சந்திப்பைத் தொடர்ந்து- நோர்வேயின் வெளிவிவகாரத் துணை மந்திரி றேமன்ட் ஜோன்சன், பிரபாகரனுக்கு ஒரு கடிதம் எழுதினார். சாதாரண மக்கள் அனுபவித்து வரும் துன்பங்களைத் தளர்த்தி, ஒரு மனிதாபிமானச் சூழலை உருவாக்குவதற்கு ஏதுவான அம்சங்கள் அடங்கிய 'புரிந்துணர் உடன்படிக்கை' என்ற வடிவிலான ஒரு யோசனைத் திட்ட வரைவைப் பிரச்சினைக்குரிய இரு தரப்பிடமும் சமர்ப்பிக்க நோர்வே அரசு எடுத்திருக்கும் தீர்மானத்தை, றேமன்ட் ஜோன்சன் அந்தக் கடிதம் மூலம் தெரிவித்திருந்தார். நவம்பர் மாதம் 2000 ஆம் ஆண்டில் வழங்கப்பட்ட அந்தக் கடிதம் பின்வருமாறு தெரிவிக்கின்றது:-



### *அன்புக்குரிய பிரபாகரன் அவர்களுக்கு!*

*சிறிலங்கா ஜனநாயகச் சோசலிசக் குடியரசின் ஜனாதிபதி மற்றும் சிறிலங்கா அரசின் வெளிவிவகார அமைச்சர் ஆகியோருடன் ஒருபுறமும் தமிழீழ விடுதலைப் புலிகளின் அதிகாரபூர்வ பிரதிநிதி அன்ரன் பாலசிங்கத்துடன் இன்னொரு புறமும் நோர்வே அரசின் பிரதிநிதிகள் கடந்த 18 மாதங்களாகத் தொடர்ச்சியான தொடர்பில் இருந்து வருகின்றார்கள். அண்மையில், விடுதலைப் புலிகளின் தலைவராகிய தங்களையும் அவர்கள் சந்தித்திருக்கிறார்கள்.*

*சிறிலங்காவில் நீண்டகாலமாக இருந்து வரும் பிரச்சினைக்குத் தீர்வொன்றை எட்டுவதற்கு ஏதுவாக, நேரடிப் பேச்சுகளை நிகழ்த்துவதற்கான சாத்தியப்பாடுகளைக் கண்டறிவதில் சம்பந்தப்பட்ட தரப்புக்களுக்கு உதவுவதற்காகவே நோர்வே அரசு இந்தத் தொடர்புகளைப் பேணி வருகின்றது.*

*இந்தத் தொடர்புகளின் வாயிலாகவும், ஜனாதிபதி மற்றும் தங்களுடனுமான அண்மைய உரையாடல்கள் வாயிலாகவும் - பிரச்சினைக்கு அரசியல் தீர்வொன்றினைக் காணக் கூடிய பேச்சுகளை ஆரம்பிப்பதில் சிறிலங்கா அரசும், விடுதலைப் புலிகள் இயக்கமும் ஈடுபாட்டுடன் இருக்கின்றன என்று நோர்வே அரசு கருதுகிறது.*

*மனிதாபிமான நடவடிக்கைகளுக்கான புரிந்துணர்வு உடன்படிக்கைத் திட்ட வரைவு ஒன்றை இரு தரப்பிடமும் சமர்ப்பிப்பது பொருத்தமாக இருக்கும் என - ஆழமான பரிசீலனைக்குப் பின்பு நோர்வே அரசு கருதுகின்றது. இந்தத் திட்டம் இரு தரப்பினராலும் ஏற்றுக் கொள்ளப்பட்டு நடைமுறைப்படுத்தப்படுமானால் சமூகச் சூழலை முன்னேற்றி, பொதுமக்கள் அனுபவித்துவரும் துன்பங்களை அகற்றுவதுடன், சமரசப் பேச்சுகளுக்கு ஊக்கமளிக்கக் கூடிய புறநிலைகளையும் இது தோற்றுவிக்கும் என நம்பலாம்.*

*தங்கள் உண்மையுள்ள*
*றேமன்ட் ஜோன்சன்*

(தொடரும்...)

# லண்டனில் சாதித்த இலங்கையர்



இலங்கையிலிருந்து லண்ட னுக்கு புகலிடக் கோரிக்கையாளராக சென்ற யாழ். இளைஞர் ஒருவர் தொழில்நுட்பத் தொழிலதிபராக சாதனை படைத்துள்ளார்.

யாழ்ப்பாணத்தை பிறப்பிடமாக கொண்ட ஈழத்து இளைஞரே இவ்வாறு லண்டனில் தொழிலதிபராக முன்னேறியுள்ளார் என்று ஆங்கில ஊடகம் ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.

இந்த இளைஞர், தான் சிறு பராயத்திலிருந்து எதிர் நோக்கிய இன்னல்கள் குறித்தும், தற்போது இந்த உயர் நிலைக்கு வருவதற்கு அவர் மேற்கொண்ட கடின முயற்சிகள் தொடர்பிலும் கருத்து வெளியிட்டுள்ளார்.

உள்நாட்டில் இடம்பெற்ற யுத்தம் காரணமாக ஐந்து வயதில் எனது குடும்பத்துடன் புகலிட கோரிக்கையாளர்களாக இலங்கையை விட்டுச் சென்றிருந்தேன் அடிப்படை ஆங்கில அறிவை வைத்துக் கொண்டு வடமேல் லண்டனில் உள்ள பாடசாலையில் ஆரம்ப கல் வியை கற்றேன். இது ஒரு பெரிய சவாலாக இருந்தது, ஆனால் நான் அதை எதிர்கொண்டேன்.

கடின உழைப்பாலும் இரவுகளிலும், ஆங்கிலத்தை கற்க ஆரம்பித்தேன். இருப்பினும் எனது முதல் தேர்வில் நான் தோல்வியடைந்தேன். பெற்றோர்களுக்கும் குறைந்த ஆங்கில அறிவு. எனவே ஆங்கிலம் தொடர்பில் அறிந்து கொள்வது எனக்கு சவாலாகவே அமைந்தது.

நான் உயர்தர கற்கை நெறிகளை மேற்கொள்ள மீண்டும் பிரித்தானியாவில் உள்ள பல்கலைக்கழகத்திற்கு வந்தேன்.அப்போது வயது 18. என்ன செய்ய வேண்டும் என்று எனக்கு எந்தக் குறிப்பும் இல்லை.

சில சோதனை மற்றும் பிழைகளுக்குப் பிறகு, லண்டனில் உள்ள ஒரு முன்னணி பல்கலைக்கழகத்தில் கணக் கியல் பட்டம் பெற்றேன். நீண்ட இடைவேளைக்கு பிறகு கொலம்பியாவுக்கு வேலைவாய்ப்பு ஒன்றைத் தேடிச் சென்றேன். அங்கு பல மக்களை சந்தித்தேன். பின் கலாசாரத்தையும் மக்களையும் நேசித்தேன்.

வேலையில் எனது விண்ணப் பங்கள் நிராகரிக்கப்பட்ட பின்னர் சில மாதங்கள் கழித்து, லண்டன் நகரத்தில் ஒரு தரகு நிறுவனத்தில் மீண்டும் பதவி வகித்தேன்.

மூன்று மாதங்களின் முடிவில், நான் வர்த்தகம் செய்யத் தயாராக இருந்தேன். சுவிஸ் நிறுவனம் ஒன்று உட்பட மூன்று நிறுவனங் களுக்கு வாடிக்கையாளர்களாக செயற்பட்டேன்.

நிதி தொழில்நுட்பம் தொடர்பில் பணியாற்ற விரும்பினேன். ப்ரோடக்ட் தொடக்கத்தில் ஒரு வணிக மேம்பாட்டு மேலாளராக நியமனம் பெற்றேன்.

பின்னர், தலைமை நிர்வாகி என்ற விருதையும் பெற்றுக் கொண்டேன் என்று இந்த ஈழத்து இளைஞர் தெரிவித்துள்ளார். (ஐ)

# இலங்கை இளைஞன் ஆஸ்திரேலியாவில் முன்னிலை

இலங்கையை பூர்வீகமாக கொண்ட இளைஞர் ஒருவர் ஆஸ்திரேலியாவில் வர்த்த ரீதியில் முன்னிலை பெற்றுள்ளார் என்று சர்வதேச ஊடகம் ஒன்று தகவல் வெளியிட்டுள்ளது.

ஆஸ்திரேலியாவில் பிரபல விடுதி ஒன்றை 33 வயதான சேம் பிரின்ஸ் என்பவர் ஆரம்பித்து முன்னெடுத்துச் செல்கின்றார்.


இலங்கையைச் சொந்த இடமாகக் கொண்ட பெற்றோருக்கு பிறந்த சேம் பிரின்ஸ், ஆஸ்திரேலியாவில் இளவயது வர்த்தகராக முன்னிலை பெற்றுள்ளார்.

கடந்த வருடம் வெளியான இளம் பணக்காரர்கள் பட்டியலில் சேம் பிரின்ஸ் 10ஆவது இடத்தை பெற்றிருந்தார் என்பது சிறப்பம்சமாகும்.

2015 ஆம் ஆண்டு மருத்துவக் கல்லூரி மாணவராக இருந்த போதே, பிரின்ஸ் 17 ஆயிரம் அமெரிக்க டொலரில் இந்த ஹோட்டலை ஆரம்பித்துள்ளார்.

இளம் வயதில் இவ்வாறான சாதனை பெற்றுக்கொள்ள தனது பெற்றோர்கள் ஆதரவாக செயற்பட்டதாக சேம் பிரின்ஸ் தெரிவித்துள்ளார். (ஐ)







# அன்னை பூபதியின் நினைவேந்தல் ஜேர்மனியில்

ஜேர்மன் தலை நகரத்தில் கடந்த ஞாயிற்றுக்கிழமை அன்னை பூபதியின் வணக்க நிகழ்வு பல்லின கலாச்சார மன்றத்தில் நடைபெற்றது.இதன் போது காலங்கள் கடந்தாலும் எம் இருப்புக்கு உரமாக மண்ணுக்குள் விதையாக கலந்து கொண்ட அன்னையை நினைவு கூறி வலி சுமந்த மாதத்தில் செய்யப்பட இருக்கும் வேலைத் திட்டங்கள் சார்ந்தும் எடுத்துரைக்கப் பட்டன. (ஐ)

# இத்தாலியச் சுதந்திர நாளில் ஈழத்தமிழர் வரலாறு, அடையாளம்

25 ஏப்ரல் 2017 அன்று இத்தாலி சுதந்திர நாளை முன்னிட்டு, இரண்டாம் உலகப் போரில் நாசிப்படைகளுக்கு எதிராகப் போராடி உயிரிழந்த 7 சகோதர விடுதலைப் போராளிகளின் வீட்டில் வெகு சிறப்பாகப் பல்லாயிரக் கணக்கான மக்களுடன் சுதந்திர நாள் கொண்டாட்டங்கள் நடைபெற்றன.

இந்த நிகழ்வில் தமிழ் இளையோர் அமைப்பு இத்தாலியும் பங்களித்து நிகழ்வின் சிறப்புக்கு பல இத்தாலிய அமைப்புகளுடன் இணைந்து பணியாற்றினார்கள்.

அத்துடன் தமிழ் இளையோர் அமைப்பு உறுப்பினர்கள் வருகை தந்த மக்களுக்கு எம் தாயக விடுதலைப் போராட்டம் தொடர்பாகவும் தமிழீழ மக்களின் இனப்படுகொலை தொடர்பாகவும் துண்டுப் பிரசுரங்களை வழங்கி விளக்கம் அளித்தார்கள்.

எமது அடையாளங்களான தேசியக்கொடி, தமிழீழம், தேசியத்தலைவர் மற்றும் தேசியச் சின்னங்களின் விளக்கமும் காட்சி வடிவில் விளக்கம் அளிக்கப்பட்டது. (ஐ)





# தமிழீழ நாட்டுப்பற்றாளர் பிரான்ஸில் நாள்





பிரான்ஸ் தமிழ்ப் பெண்கள் அமைப்பு மற்றும் ஒன்லிசூபுவா தமிழ்ச்சங்கமும் இணைந்து அன்னை பூபதி, நாட்டுப்பற்றாளரை நினைவு கூர்ந்தனர். பாரிஸின் புறநகர் பகுதியில் ஒன்றான ஒன்லிசூபுவா நகரத்தில் நினைவு கூரப்பட்டது.

அன்னை பூபதியின் திருவுருவப் படத்துக்கு ஈகைச் சுடர் ஏற்றப்பட்டு மலரஞ்சலி செலுத்தப்பட்டது. தொடர்ந்து நாட்டுப் பற்றாளர்களது படங்களுக்கு சுடர் ஏற்றப்பட்டது.(ஐ)

## நவீன வசதிகளையுடைய அம்புலன்ஸை இலங்கைக்கு வழங்கிய ஜப்பான்

கொழும்பு, மே 02

சகல மருத்துவ கருவிகள் அடங்கலான அதி நவீன வசதிகளைக் கொண்ட, அம்புலன்ஸ் ஒன்றை, இலங்கை வான் படைக்கு ஜப்பான் நன்கொடையாக வழங்கியுள்ளது.

இதனை ஜப்பானிய அதிகாரிகள் இலங்கை வான் படைத் தளபதி எயார் மார்ஷல் கபில ஜயம்பேதியிடம் கையளித்துள்ளனர்.

இந்த நிகழ்வு வான் படைத் தலைமையகத்தில் இடம்பெற்றது.

இந்த அம்புலன்ஸ், அனர்த்த காலப் பகுதியில் அவசர உதவியை மக்கள் பெற்றுக் கொள்ளும் வகையில் அமையும் என்று நிகழ்வில் உரையாற்றிய வான் படைத் தளபதி குறிப்பிட்டார்.

# இனங்களைத் தூண்டிவிடும் குழப்பகாரர் ஞானசார தேரர்!

## சாடுகிறார் தீகவாபி பரிவார சைத்திய ரஜமகா விகாரை பிரதம பிக்கு சந்தானந்த தேரர்



எந்த இனமாக இருந்தாலும் மற்றொருவரின் காணியில் அத்துமீறி பௌத்த விகாரை நிர்மாணிக்குமாறு புத்தபெருமான் ஒருபோதும் கூறவில்லை. வண.ஞானசார தேரர் இனங்களைத் தூண்டி விடும் ஒரு குழப்பக் காரர்.- என்று தீகவாபி பரிவார சைத்திய ரஜமகா விகாரையின் பிரதம பௌத்த பிக்கு வணக்கத்துக்குரிய போத்திவெல சந்தானந்ததேரர் தெரிவித்தார்.

இறக்காமம் மாயக்கல்லி விடயம் தொடர்பில் அவர்கருத்து வெளியிட்டபோதே இவ்வாறு தெரிவித்தார். இதுதொடர்பில் அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

நீண்ட காலமாக மாயக்கல்லி முஸ்லிம்களை அவர்களது பூர்வீகக் காணிகளில் இருந்து அப்புறப் படுத்தி விகாரையை அமைக்க வேண்டிய அவசியமில்லை. மாணிக்கமடுவுக்கு அருகிலேயே தீகவாபி உள்ளதால் இங்கு ஒரு விகாரை அவசியமில்லை.

தொல்லியல் சின்னங்களைப் பாதுகாக்கும் பொறுப்பு எல்லா இனங்களையும் சார்ந்தது. இதனை ஒரு குறிப்பிட்ட குழு தான் பாதுகாக்க வேண்டிய தேவையில்லை. மாணிக்கமடு மாயக்கல்லி விடயத் தால் அம்பாறை மாவட்ட கணிசமான சிங்கள மக்கள் கவலையடைந்துள்ளனர்.

பௌத்த மக்கள் தமிழ், முஸ்லிம் மக்களுடன் என்றுமே நல்லுறவைப் பேணி வருகின்றனர். அவர்கள் இந்தநாட்டுப் பிரஜைகள்; எமது சகோதரர்கள்.

தீகவாபியைச் சுற்றிலும் பல விகாரைகள் உள்ளன. ஆனால், புத்த பெருமானை வணங்குபவர்கள் மிகக் குறைவானவர்களே! இந்த நிலையில் மற்றுமொரு விகாரை மாணிக்கமடுவில் எதற்கு? மஹிந்த சிந்தனைக்குட்பட்ட பௌத்த பிக்குகளின் எதேச்சதிகார போக்கே இது. இனங்களிடையே முறுகல் நிலையைத் தோற்றுவிக்க எடுக்கப்படும் செயற்பாடுகளே இவை.

அத்துடன், எமது மாவட்ட மக்களின் பிரச்சினைகளைத் தீர்க்க நாம் இருக்கிறோம். ஞானசார தேரர் இங்கு வர வேண்டிய அவசியமில்லை.

இதனைப் பார்க்க அவர் யார்? அவர் இனங்களைத் தூண்டி விடும் ஒரு குழப்பகாரர். ஏனைய இனங்கள் மத்தியில் வாழும் கணிசமான பௌத்தர்கள் இவரது கொள்கையை ஆதரிக்கவில்லை. எனவே, முஸ்லிம்கள் அவதானத்துடன் நடந்து கொள்ள வேண்டும்.

இந்தநாடு பௌத்தர்களுக்கே சொந்தமென சிலர் கூறுகின்றனர். ஆனால், பௌத்த மதத்தை இலங்கைக்குக் கொண்டு வந்த மஹிந்த தேரர் கூட, தேவ நம்பிய திஸ்ஸ மன்னனிடம் இந்த நாடு எல்லா உயிர் களுக்கும் சொந்தம், உமக்கு மாத்திர மல்ல, ஆனால், இந்த நாட்டை நிர்வகிக்கும் பொறுப்பே உமக்குரியது என்று கூறியுள்ளார். ஞானசார தேரர் இனங்களைத் தூண்டி விடும் ஒரு குழப்பக் காரர்.- என்றார். (எ)

## நிதிசேகரிப்பில் ஈடுபட்டிருந்த போலி மருத்துவர் சிக்கினார்

கொழும்பு, மே 02

சத்திர சிகிச்சை நிபுணர் என்று தம்மை அடையாளப் படுத்திக் கொண்டு தம்புள்ளை நகரில் நிதி சேகரிப்பில் ஈடுபட்ட வந்த போலி டாக்டர் ஒருவரை இளைஞர்கள் பிடித்துப் பொலிஸாரிடம் ஒப்படைத்துள்ளனர்.

அந்தப் பிரதேசத்தில் வியாபாரத்தில் ஈடுபட்டு வந்த பெண்ணொருவரிடம் அவர் நிதி சேகரிக்க முற்பட்ட போது பெண்ணுக்கு அறிமுகமான சிலர் அந்த சந்தேகநபரை நேற்றுமுன்தினம் பிற்பகல் பிடித்துள்ளனர் என்றும் பொலிஸார் தெரிவித்தனர்.

சந்தேக நபர் மாத்தளையைச் சேர்ந்த 45 வயது மதிக்கத்தக்கவர் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தம்புள்ளை பொலிஸார் இது தொடர்பான விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர். (எ)

## நுண்ணறிவில்லாத பிள்ளைகளுக்கு பதவி வழங்க அரசியல்வாதிகள் ஆர்வம்

### முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா தெரிவிப்பு



கொழும்பு, மே 02

தற்போதுள்ள அரசியல்வாதிகள், தங்களுடைய, கல்வியறிவில்லாத, நுண்ணறிவில்லாத பிள்ளைகளுக்கு, பல்வேறு பதவிகளை வழங்குவதற்கு முயன்று வருகின்றனர் என்று முன்னாள்ஜனாதிபதியும் தேசிய ஒருமைப்பாட்டுக்கும் நல்லிணக்கத்துக்குமான அலுவலகத்தின் தலைவருமான சந்திரிகா பண்டார நாயக்க குமாரதுங்க தெரிவித்துள்ளார்.

கிரிந்திவெல பெண் சாரணியர் சங்கத்தால், ஏற்பாடு செய்யப்பட்டிருந்த நிகழ்வொன்றில் கருத்துத் தெரிவிக்கும் போதே, அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

கல்வியறிவுள்ள, நுண்ணறிவுள்ளவர்கள் பதவிகளைப் பெற்று நாட்டுக்குப் பயனுள்ள பிரஜைகளாக வருகின்றமையை இவ்வாறான அரசியல்வாதிகள் தடுத்துள்ளனர்.

இதன்போது, எதிர்காலத்தில் நாட்டின் தலைமைத்துவத்தைப் பெறத் தகுதியுள்ள, கல்வியறிவும் திறனும் உள்ள பெண்களை உருவாக்குவதற்கான அதன் முயற்சிகள் தொடர்பாக, பெண்சாரணியர்சங்கத்துக்குப்பாராட்டுத்தெரிவிக்கின்றேன். அரசியலைப் பின் தள்ளி, நாட்டுக்குச் சேவைகளை வழங்கியுள்ளோம்.- என்றார். (எ)

## தம்புள்ளையில் கோர விபத்து: ஒருவர் உடல் சிதறிப் பலி!



தம்புள்ளை - வேவல பிரதான பாதையில் நிகவட்டவக பிரதேசத்தில் நேற்று முன்தினம் மாலை இடம் பெற்ற விபத்தில் ஒருவர் சம்பவ இடத்திலேயே உடல் சிதறிப் பலியானார்.

மோட்டார் சைக்கிள் ஒன்றும் டிப்பர் ஒன்றும் நேருக்கு நேர் மோதிய இந்த விபத்தில் மோட்டார் சைக்கிளைச் செலுத்திச் சென்ற நபரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

விபத்தை அடுத்து பொலிஸார் பரிசோதனைக்காக அங்கு சென்ற வேளை சிதறிய உடல் துணி ஒன்றால் மூடப்பட்டிருந்தது. அதனை அகற்றிய போது சிலர் காணொலி மற்றும் படங்களை எடுக்க முற்பட்ட வேளை முறுகல்நிலை ஏற்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது.

விபத்தில் உயிரிழந்தவர் தம்புள்ளை வேவல பிரதேசத்தைச் சேர்ந்த 42 வயதானவர் என்றும் தெரியவந்துள்ளது.

குறுகிய வளைவொன்றில் இரண்டு வாகனங்களும் நேருக்கு நேர் மோதி இந்த விபத்து இடம் பெற்றுள்ளது என்றுபொலிஸார்தெரிவித்துள்ளனர்.

டிப்பர் சாரதி கைது செய்யப்பட்டுள்ள நிலையில், தம்புள்ளை பொலிஸார் இது தொடர்பில் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர். (எ)

## நாட்டில் முன்னறிவிப்பின்றி மின்சாரம் துண்டிக்கப்படும்

### மின்சார சபை பொறியியலாளர் சங்கம் தெரிவிப்பு

கொழும்பு, மே 02

நாட்டின் பல பகுதிகளில் முன் அறிவிப்பின்றி மின்சாரம் துண்டிக்க நேரிடும் என்று இலங்கை மின்சார சபையின் பொறியியலாளர் சங்கம் தெரிவித்துள்ளது.

நாட்டில் தற்போது நிலவும் அதிகளவான வெப் பம் காரணமாக, மக்களின் மின்சார பாவனை அதிகரித்துள்ளது.

அதேவேளை, நுரைச்சோலை அனல் மின் நிலையத்தின் ஓர் இயந்திரம் செயலிழந்துள்ளமையால் இந்த நிலை ஏற்பட்டுள்ளதாக அந்தச் சங்கத் தலைவர் அத்துர வன்னி ஆராய்ச்சி தெரிவித்துள்ளார்.

இதேவேளை, நாட்டிலுள்ள நீர்த்தேக்கங்களில் நீர் மட்டம் 10 வருடங்களின் பின்னர் 31 வீதம் வரை குறைவடைந்துள்ளது. இதன்காரணமாக மின்சார உற்பத்தி பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளது. இதனால் மின்சாரத்தைச் சிக்கனமாகப் பயன்படுத்துமாறு பொது மக்களிடம், மின்சார சபை வேண்டுகோள் விடுத்துள்ளது. (எ)

## தமிழ் அரசியல் கைதி தாக்கப்பட்டமை: விசாரணை கோரி மனு கையளிப்பு!

சிறைச்சாலை அதிகாரிகளால் சிறைக் கைதி ஒருவர் தாக்கப்பட்டமை தொடர்பாக பக்கச்சார்பற்ற விசாரணைகளை முன்னெடுக்க வேண்டும் என்று சிறைச்சாலைகள் அத்தியட்சகரிடம் கோரிக்கை மனு கையளிக்கப்பட்டுள்ளது.

மேலும் இந்தச் சம்பவத்தோடு தொடர்பான அதிகாரிகளுக்கு எதிராக நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என்றும் அந்த மனுவில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

அந்த மனுவை காணாமற் போனோரைத் தேடிக் கண்டறியும் குழுவின் தலைவர் சுந்தரம் மகேந்திரன் கையளித்துள்ளார்.

அந்த மனுவில் தெரிவிக்கப்பட்டுள்ளவை வருமாறு:-

1999ஆம் ஆண்டு, முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா மீதான தற்கொலைத் தாக்குதல் சம்பவம் தொடர்பில் சந்தேகத்தில் கைதுசெய்யப்பட்ட வேலாயுதம் வரதராஜன் மகஸின் சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டுள்ளார்.

கடந்த 21ஆம் திகதி சுகவீனமுற்ற நிலையில் சிறைச்சாலை வைத்திய அதிகாரியின் பணிப்புரைக்கு அமைய வெலிக்கடை சிறைச்சாலை வைத்தியசாலையில் அவர் சேர்க்கப்பட்டார்.

வெலிக்கடை சிறைச்சாலை வைத்தியசாலைக்கு அழைத்துச் செல்லப்பட்ட நிலையில் மிகவும் கொடூரமாக அவர் தாக்கப்பட்டுள்ளார்.

இந்தச் சம்பவம் தொடர்பில் பக்கச்சார்பற்ற விசாரணை நடத்த வேண்டும்.- என்றுள்ளது.

# ஆட்சியையும், கட்சியையும் யாராலும் அசைக்க முடியாது!

## முதலமைச்சர் எடப்பாடி பழனிச்சாமி உறுதி



சேலம், மே 02

சில சந்தர்ப்பவாதிகள் அ.தி.மு.கவை முடக்க நினைக்கிறார்கள். அது ஒருபோதும் நடக்காது. ஆட்சியையும், கட்சியையும் யாராலும் அசைக்க முடியாது.

-இவ்வாறு முதலமைச்சர் எடப்பாடி பழனிச்சாமி தெரிவித்தார்.

சேலத்தில் நேற்றுமுன்தினம் ஞாயிற்றுக்கிழமை நடந்த மாவட்ட அ.தி.மு.க. (அம்மா) அணி நிர்வாகிகள் ஆலோசனை கூட்டத்தில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

90 வீத நிர்வாகிகள் எம் மோடுதான் உள்ளார்கள். 48 மாவட்ட செயலாளர்களில் 26 பேர் எமது அணியில் இருக்கிறார்கள். மேலும், 123 சட்டசபை உறுப்பினர்களும், 37 அமைச்சர்களில் 29 அமைச்சர்களும் எமது அணியில்தான் இருக்கின்றனர்.

எம்.ஜி.ஆர்., ஜெயலலிதா ஆகியோர் இருந்த காலத்தில் அதி.மு.க வுக்கு பல்வேறு சோதனைகள் வந்தன. ஆனால், அந்த சோதனைகளைத் தொண்டர்கள் தவிடு பொடியாக்கி அ.தி.மு.கவை நிலைநிறுத்தினார்கள்.

பேச்சு முட்டுக்கட்டை கட்சியின் நலன் கருதி இரண்டு அணிகளும் ஒன்றாகச் சேர்ந்தால் நல்லது என்று மக்களவை துணை சபாநாயகர் தம்பிதுரை கூறினார். அதே கருத்தை அமைச்சர்களும் தெரிவித்தார்கள். எனவே, கட்சி சிதைந்து விடக்கூடாது என்பதற்காக இரண்டு அணிகளும் இணைவதற்கு பேச்சு நடத்த நான் சம்மதம் தெரிவித்தேன். முதன் முதலில் நிபந்தனையின்றி பேச்சுக்கு தயார் என்று பன்னீர்செல்வம் அணியினர் தெரிவித்தார்கள். ஆனால், தற்போது பல்வேறு நிபந்தனைகளை விதித்து பல்வேறு கருத்துக்களை அவர்கள் தெரிவித்து வருகிறார்கள். பேச்சுக்கு முட்டுக்கட்டை போடுபவர்களே அவர்கள்தான்.

தமிழக அரசின் சிறப்பான செயற்பாடுகள்

தமிழகத்தில் அ.தி.மு.க. அரசு செயற்படவில்லை என்றும், இது பினாமி அரசு என்றும் தி.மு.க. செயல் தலைவர் மு.க.ஸ்டாலின் கூறி வருகிறார். ஆட்சியில் இருப்பவர்கள் மக்களைப் பற்றிச் சிந்திக்க வேண்டும். இதுவரை இல்லாத வகையில் நான் முதலமைச்சராக பொறுப்பேற்று 73 நாள்களில் ஆயிரத்து 570 கோப்புகளில் கையெழுத்து போட்டு அனைத்து பணிகளையும் ஆரம்பித்துள்ளேன். தமிழக அரசு சுறுசுறுப்பாகச் செயற்பட்டுவருகிறது.

தமிழகத்தில் 140 ஆண்டுகளாக இல்லாத வகையில் தற்போது கடும் வறட்சி நிலவுகிறது. மேட்டூர் அணையில் தற்போது தண்ணீர் வற்றி போய்விட்டது. ஆனால், தமிழகத்தில் வறட்சி நிலவினாலும் பொதுமக்களுக்கு சீரான முறையில் குடிதண்ணீர் வழங்கப்பட்டு வருகிறது. விவசாயிகளுக்குத் தேவையான நிவாரணத் தொகைகள் வங்கிகள் மூலம் வழங்கப்பட்டுள்ளன. டில்லிக்கு நான் சென்றபோது, பிரதமர் மோடியை நேரில் சந்தித்து விவசாயிகளின் பிரச்சினைகளைப் பற்றி எடுத்துக் கூறினேன். அவரும் உரிய நடவடிக்கை எடுப்பேன் என உறுதியளித்தார். -என்றார். (ச)

## கொடநாடு காவலாளி கொலை: கைதான நால்வரிடமும் விசாரணை!

கொடநாடு காவலாளி கொலை மற்றும் கொள்ளை வழக்கில் கைதான நான்கு பேரிடமும் பொலிஸார் தீவிர விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர் எனத் தெரிவிக்கப்படுகிறது.

மறைந்த முன்னாள் முதல்வர் ஜெயலலிதாவுக்குச் சொந்தமான கொடநாடு பங்களாவில் கடந்த 24 ஆம் திகதி காவலாளியைக் கொலை செய்து, கொள்ளை முயற்சியில் மர்ம கும்பல் ஒன்று ஈடுபட்டிருந்தது.

இந்த நிலையில், ஜெயலலிதாவின் கார் ஓட்டுநராகப் பணியாற்றிய கனகராஜ், கோவையைச் சேர்ந்த தனது நண்பர் சயானுடன் சேர்ந்து கொள்ளைக்குச் சதித்திட்டம் தீட்டி செயற்படுத்தியமை தொடர்பில் பொலிஸ் விசாரணையில் தெரியவந்தது. இதனையடுத்து, இவர்களைப் பொலிஸார் தேடிய நிலையில், கடந்த சனிக்கிழமை கனகராஜ் வீதி விபத்தில் உயிரிழந்தார். மற்றொரு நபரான சயான் குடும்பத்தினருடன் கேரளா செல்லும் போது வீதி விபத்தில் சிக்கி, கவலைக்கிடமான நிலையில் கோவை மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருகிறார். அவருடன் காரில் பயணம் செய்த மனைவி மற்றும் மகள் சம்பவ இடத்திலேயே இறந்தனர்.

இந்நிலையில், காவலாளி கொலைச் சம்பவம் தொடர்பாக கேரள மாநிலம் திருச்சூரைச் சேர்ந்த சந்தோஷ், தீபு, சதீசன், உதயகுமார் ஆகியோர் கடந்த சனிக்கிழமை கைது செய்யப்பட்டனர். கொள்ளை முயற்சியில் 11 பேர் ஈடுபட்டனர் எனக் கைதானவர்கள் தெரிவித்துள்ளனர்.

இந்தச் சம்பவம் தொடர்பில் தெரிய வருவதாவது:-

கொடநாடு பங்களாவில் கொள்ளையடிக்க கனகராஜ் திட்டம் தீட்டியுள்ளார். மேற்படி 11 பேரும் காவலாளி கிருஷ்ண பகதூரை 8 ஆம் நுழைவு வாயில் அருகே கட்டிப் போட்டுள்ளனர். 10 ஆம் நுழைவு வாயிலில் காவலாளி ஓம் பகதூரை கொலை செய்து மரத்தில் கட்டிப் போட்டுள்ளனர். இதனை அடுத்து ,பங்களாவுக்குள் புகுந்த அவர்கள், அங்கு பணம் எதுவும் இல்லாததால் ஜெயலலிதாவின் அறைக்குள் புகுந்து, அவரது 5 கடிகாரங்கள் மற்றும் விலையுயர்ந்த பொருள்களைக் கொள்ளையடித்துக் கொண்டு தப்பியுள்ளனர். பிடிபட்டவர்களிடம் இருந்து ஒரு கார் மற்றும் கொள்ளையடிக்கப்பட்ட பொருள்கள் பறிமுதல் செய்யப்பட்டுள்ளன எனத் தெரிவிக்கப்படுகிறது.

இதனையடுத்து,கைது செய்யப்பட்ட இவர்களைப் பொலிஸார் குன்னூர் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தினர். இந்நிலையில், நீதிபதி சவுந்திரராஜன் உத்தரவின் பேரில் இவர்கள் நான்கு பேரும் சிறையில் அடைக்கப்பட்டுள்ளனர் எனப் பொலிஸார் தெரிவித்துள்ளனர். (ச)

## வாக்குப் போடுவதற்கு பணம் வழங்குபவர்கள் தேர்தலில் போட்டியிட 5 ஆண்டுகளுக்குத் தடை!

### தேர்தல் ஆணையகம் பரிந்துரை

புதுடில்லி,மே 02

தேர்தல் காலங்களில் வாக்குப் போடுவதற்கு வாக்காளர்களுக்குப் பணம் வழங்கும் வேட்பாளர்களை 5 ஆண்டுகளுக்கு தகுதி நீக்கம் செய்ய வேண்டும் எனத் தலைமைத் தேர்தல் ஆணையம் மத்திய அரசுக்குப் பரிந்துரை செய்துள்ளது.

தமிழக முன்னாள் முதல்வர் ஜெயலலிதாவின் மறைவைத் தொடர்ந்து, ஆர்.கே.நகர் சட்டசபைத் தொகுதிக்கு, ஏப்ரல் 12 ஆம் திகதி இடைத் தேர்தல் அறிவிக்கப்பட்டிருந்தது.

அ.தி.மு.க. இரண்டாகப் பிரிந்துள்ள நிலையில், சசிகலாவின் அக்கா மகன் தினகரனும், முன்னாள் முதல்வர் பன்னீர் செல்வம் அணியின் சார்பில் மதுசூதனனும் போட்டியிட முடிவு செய்யப்பட்டது. இதனை அடுத்து, இந்தத் தேர்தலில் தினகரன் அணி சார்பில் வாக்காளர்களுக்குப் பணம் வழங்கப்பட்டது என முறைப்பாடுகள் எழுந்தன. இதனை அடுத்து, இடைத் தேர்தலைத் தேர்தல் ஆணையகம் ஒத்தி வைத்தது.

இந்த நிலையில், இது போல் வாக்காளர்களுக்குப் பணம் வழங்குவதைத் தடுப்பது தொடர்பில், மத்திய சட்ட அமைச்சகத்துக்குத் தேர்தல் ஆணையகம் சார்பில் கடிதம் அனுப்பத் திட்டமிடப்பட்டுள்ளது எனத் தெரிவிக்கப்படுகிறது.

இது தொடர்பில் தேர்தல் ஆணையக அதிகாரிகள் தெரிவிக்கையில்-

ஆர்.கே.நகர் இடைத் தேர்தலின்போது, வாக்காளர்களுக்குப் பல் வேறு வழிகளில் பணம் கொடுத்துள்ளனர். மக்கள் பிரதிநிதித்துவச் சட்டத்தின் கீழ் வன்முறைகள் நடந்தால், குறிப்பிட்ட தொகுதியில் தேர்தலை நிறுத்தும் அதிகாரம் தேர்தல் ஆணையகத்துக்கு உள்ளது.

அதே நேரத்தில், வாக்காளர்களுக்கு பணம் கொடுக்கப்பட்டால் அங்கு, தேர்தலை நிறுத்த அதிகாரம் இல்லை. அரசமைப்புச் சட்டப் பிரிவுகளைப் பயன்படுத்தியே தேர்தலை நிறுத்த முடியும். இந்த சட்டப் பிரிவை அதிகம் பயன்படுத்த தேர்தல் ஆணையகம் விரும்பவில்லை. வாக்குப் போட பணம் கொடுக்கப்பட்டமை நிரூபிக்கப்பட்டால் உடனே தேர்தலை நிறுத்த, மக்கள் பிரதிநிதித்துவச்சட்டத்தில் திருத்தம் செய்யப்பட வேண்டும் என மத்திய அரசை ஏற்கனவே வலியுறுத்தி உள்ளோம்.

தற்போது, ஆர்.கே.நகர் தொகுதி அனுபவத்தின் அடிப்படையில் இவ்வாறு பணம் கொடுக்கும் ஒரு சிலரால், மற்ற வேட்பாளர்கள் பாதிக்கப்படாமல் இருப்பதை உறுதி செய்ய வேண்டும். அதன்படி பணம் கொடுக்கும் வேட்பாளர் மீது நீதிமன்றத்தில் வழக்குப் பதிவு செய்தவுடனேயே, குறைந்தபட்சம் ஐந்து ஆண்டுகள் அவர் எந்தத் தேர்தலிலும் போட்டியிடத் தடை விதிக்க வேண்டும். இதற்காக சட்டத் திருத்தம் செய்யப்பட வேண்டும்.-என்றனர். (ச)

## தினகரனின் 5 வங்கிக் கணக்குகள் முடக்கப்பட்டன!

இரட்டை இலைச் சின்னம் பெறுவதற்காக தேர்தல் அதிகாரிகளுக்கு 50 கோடி ரூபா லஞ்சம் கொடுக்க முயன்ற வழக்கில் தினகரனைக் கைதுசெய்த பொலிஸார் அவரது 5 வங்கிக் கணக்குகளை முடக்கியுள்ளனர்.

இந்த வழக்கில் அ.தி.மு.க. அம்மா அணித் துணைப் பொதுச் செயலாளர் டி.டி.வி.தினகரனிடம் டில்லி பொலிஸார் தீவிர விசாரணை நடத்தி வருகிறார்கள்.

இதில் இடைத்தரகராகச் செயற்பட்ட சுகேஷ் சந்திர சேகர் கடந்த 16 ஆம் திகதி டில்லியில் கைதானார். அவரிடம் இருந்து ஒரு கோடியே 30 லட்சம் ரூபா பணம் பறிமுதல் செய்யப்பட்டது. அவர் அளித்த வாக்குமூலத்தின் அடிப்படையில் டி.டி.வி.தினகரன், அவரது நண்பர் மல்லிகார்ஜுனா ஆகியோர் கடந்த 25 ஆம் திகதி நள்ளிரவு கைது செய்யப்பட்டனர். இதனை அடுத்து, டி.டி.வி.தினகரன், மல்லிகார்ஜுனா ஆகியோரை பொலிஸார் 5 நாள்கள் காவலில் எடுத்து விசாரணை நடத்த டில்லி நீதிமன்றம் அனுமதி அளித்தது.

இந்நிலையில், இடைத்தரகர் சுகேஷ் சந்திரசேகர் பதுக்கி வைத்திருந்த 50 லட்சம் ரூபா லஞ்சப் பணம் பறிமுதல் செய்யப்பட்டது. இதையடுத்து, பணம் பதுக்கி வைத்திருந்திருந்தமை தொடர்பில் மேலும் ஒரு ஹவாலா முகவர் கைது செய்யப்பட்டார். கைது செய்யப்பட்ட ஹவாலா முகவர் நரேஷ் என்பவரை, டி.டி.வி. தினகரன் முன்னிலையில் வைத்துப் பொலிஸார் நேரடியாக விசாரணை நடத்தினார்கள். அப்போது அந்தப் பணம், தான் கொடுத்து அனுப்பியது தான் என்பதை டி.டி.வி.தினகரன் ஒப்புக் கொண்டார் எனக் கூறப்படுகிறது.

இதில் அடுத்த கட்டமாக தினகரனின் 5 வங்கிக் கணக்குகள் முடக்கப்பட்டன. இது தொடர்பாக டில்லி பொலிஸாரின் வேண்டுகோளை ஏற்று ஸ்டேட் வங்கியில் உள்ள அவரது 5 கணக்குகளும் முடக்கப்பட்டன. அடுத்து அவரது வங்கிக் கணக்கு மூலம் எந்த வகையில் பணப் பரிமாற்றம் நடந்துள்ளது என்பது தொடர்பில் பொலிஸார் விசாரணை நடத்தி வருகிறார்கள். (ச)

### பிரான்ஸ் போர்க்கப்பல் அமெரிக்காவுக்கு உதவத்தயார்

கொரிய தீபகற்பத்தில் நிலவிவரும் அசாதாரண சூழலை தவிர்த்து அமெரிக்காவுக்கு உதவும் வகையில் பிரான்ஸ் நாட்டு போர்க்கப்பல் ஜப்பான் நாட்டைச் சென்றடைந்ததாக தகவல்கள் வெளியாகியுள்ளன. இதனால் போர் பதற்றம் ஏற்பட்டுள்ளது.

அமெரிக்கா மற்றும் வடகொரியா ஆகிய இரு நாடுகளுக்கிடையே நிலவி வரும் அசாதாரண சூழலைத் தவிர்க்க உலக நாடுகள் முயற்சிகளை மேற்கொண்டு வருகின்றன. அமெரிக்கா, தென் கொரியா மற்றும் பிரிட்டன் ஆகிய நாடுகள் ஏற்கனவே தென் கொரியாவில் இராணுவப் பயிற்சியில் ஈடு பட்டு வருகின்றன. இந்த நிலையில், அமெரிக்கக்கூட்டுப்படையில் ஓர் அங்கமாக விளங்கும் பிரான்ஸ் நாட்டின் போர்க்கப்பலும் தற்போது இதில் பங்கேற்கத்தயாராக உள்ளது.

# ஒன்றியத்துடனான பிரெக்சிற் பேச்சு; மிக கடினமானதாக அமையலாம்!

## பிரதமர் மே தெரிவிப்பு



லண்டன், மே 02

பிரெக்சிற் விவகாரம் தொடர்பில் ஐரோப்பிய ஒன்றியத்துடன் மேற்கொள்ளப்படும் பேச்சுகள் கடினமானதாக அமையலாம் என்று பிரிட்டன் பிரதமர் தெரேசா மே நேற்று முன்தினம் தெரிவித்துள்ளார்.

சர்வதேச ஊடகம் ஒன்றுக்கு வழங்கிய செவ்வி ஒன்றிலேயே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

பிரெக்சிற் விதிமுறைகள் தொடர்பில் பிரிட்டன் தவிர்ந்த ஏனைய 27 ஐரோப்பிய ஒன்றிய நாடுகள் பிரஸ்சலஸில் நேற்றுமுன்தினம் பேச்சு நடத்தின. இந்த விதிமுறைகளுக்கு 27 நாடுகளும் இணக்கம் தெரிவித்துள்ள நிலையிலேயே தெரேசா மே மேற்குறித்தவாறு தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பில் அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

பேச்சு என்று வரும் போது இதுபோன்ற நிலைமை ஏற்படும். சில சமயங்களில் அது கடினமானதாகக் கூட அமையலாம். பிரிட்டன் பிரதமர் எனும் வகையில் பிரஜைகள் தொடர்பில் எனக்கும் அக்கறை உண்டு.

அந்த வகையில் ஐரோப்பிய ஒன்றியத்தில் உள்ள பிரித்தானியர்களின் வதிவிட உத்தரவாதம் தொடர்பிலும் நான் மிகுந்த அக்கறை கொண்டுள்ளேன். அதேசமயம் பிரிட்டனில் உள்ள ஒன்றிய பிரஜைகளுக்கு வதிவிட உத்தரவாதம் வழங்கக் கூடிய நிலைமை ஏற்பட வேண்டும் என்பதும் எனது விருப்பங்களில் ஒன்று.

லிஸ்பன் விதியின் 50ஆவது சரத்தை செயலாக்குவது தொடர்பான கடிதத்திலும் நான் இந்தவிடயம் தொடர்பில் தெளிவுபடுத்தியிருந்தேன். பிரிட்டன் மற்றும் ஐரோப்பிய ஒன்றிய பிரஜைகளின் வதிவிட உத்தரவாதம் தொடர்பான பேச்சுக்கு முன்னுரிமை அளிக்கப்பட வேண்டும் என்று நான் குறிப்பிட்டிருந்தேன்:- என்றார்.

இதேவேளை பிரெக்சிற் உடன்படிக்கை தொடர்பில் ஐரோப்பிய ஒன்றியத்தால் பரிந்துரை செய்யப்பட்டுள்ள விதிமுறைகள் திருப்தியாக இல்லாத பட்சத்தில், உடன்படிக்கையின்றி ஒன்றியத்தை விட்டு விலகுவது தொடர்பிலும் அக்கறை செலுத்தப்படும் என்று மே தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (எ)

## மாலியில் பிரான்ஸ் ராணுவம் தாக்கி தீவிரவாதிகள் 20 பேர் உயிரிழப்பு!

மாலி, மே 02

மாலிநாட்டில் பிரான்ஸ் இராணுவம் நேற்று முன்தினம் நடத்திய அதிரடித் தாக்குதலில் தீவிரவாதிகள் 20 பேர் கொல்லப்பட்டனர்.


ஆபிரிக்கநாடான மாலி பிரெஞ்ச் காலனித்துவ ஆதிக்கத்தின் கீழ் இருந்தது. சுதந்திரம் அடைந்த பின்னர் அங்கு உள்நாட்டுப் போர் நடைபெற்று வருகிறது. தற்போது அங்கு தீவிரவாதிகளின் அட்டூழியம் இடம்பெற்று வருகின்றது. எனவே, அவர்களை ஒடுக்கி மாலி நாட்டுக்கு பாதுகாப்பு அளிக்க 4 ஆயிரம் பிரெஞ்சு இராணுவ வீரர்கள் அங்கு முகாமிட்டுள்ளனர்.

தென் மேற்கு கயோ மாகாணத்தில் போல் சரேவனப்பகுதி உள்ளது. அங்கு பதுங்கியிருந்து கொண்டு பிரான்ஸ் இராணுவம் மற்றும் பொது மக்கள் மீது தீவிரவாதிகள் தாக்குதல் நடத்தி வந்தனர். இது புர்கினோ பாசோ நாட்டின் எல்லையில் உள்ளது.

இந்தநிலையில் நேற்று முன்தினம் அங்கு பிரான்ஸ் இராணுவம் அதிரடித் தாக்குதல் நடத்தியது. அதில் 20 தீவிரவாதிகள் 20 பேர் சுட்டுக் கொல்லப்பட்டனர்.

கடந்த டிசெம்பர் 12 ஆம் திகதி புர்கினோ பாசோ எல்லைப் பகுதியில் இராணுவம் மீது தீவிரவாதிகள் அதிரடித் தாக்குதல் நடத்தினார்கள். அதில் 12 வீரர்கள் உயிரிழந்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (எ)

## இந்தோனேஷியாவில் பஸ் விபத்து 11 பேர் உயிரிழப்பு; 50 பேர் காயம்!



ஜகார்த்தா, மே 02

இந்தோனேஷியாவில் உள்ள மேற்கு ஜாவா மாகாணத்தில் நடைபெற்ற பஸ் விபத்தில் 11 பேர் பரிதாபமாக உயிரிழந்தனர். 50 பேர் காயமடைந்தனர்.

இந்தோனேஷியாவின் ஜகார்தாவில் இருந்து தெற்கே 90 கிலோ மீற்றர் தூரத்தில் உள்ள சியான் ஜூர் மாவட்டத்தில் பஸ் ஒன்று பயணித்துக் கொண்டிருந்தது. அந்த பஸ் திடீரென கட்டுப்பாட்டை இழந்து முன்னால் சென்று கொண்டிருந்த 4 கார்கள் மீது பயங்கரமாக மோதியது.

அத்துடன் வீதியில் சென்ற மோட்டார் சைக்கிள்கள் மீதும் மோதியது. கார்கள் மற்றும் மோட்டார் சைக்கிள்களை இடித்துத் தள்ளிய பஸ், இறுதியில் ஒரு பள்ளத்தில் தலைகீழாகக் கவிழ்ந்தது. இதில் 11 பேர் பரிதாபமாக உயிரிழந்தனர். சுமார் 50 பேர் காயம் அடைந்தனர்.

அந்த பஸ் கட்டுப்பாட்டை இழந்தமையாலேயே இந்த விபத்து ஏற்பட்டிருக்கலாம் என்று பொலிஸார் சந்தேகப்படுகின்றனர். இந்தோனேஷியாவில் பராமரிப்பு சரியில்லாத காரணத்தால் அடிக்கடி பஸ் விபத்துக்கள் இடம்பெறுகின்றன என்று தெரிவிக்கப்படுகின்றது. (எ)

## ஏவுகணை பாதுகாப்புக் கேடயம் அமைக்கும் செலவை ஏற்றது அமெ.

தென்கொரியாவில் அமெரிக்கா அமைக்க இருக்கும் ஏவுகணை பாதுகாப்பு கேடயத்துக்கான செலவை அமெரிக்கா கொடுக்க சம்மதித்துள்ளதாக தென்கொரியா தெரிவித்துள்ளது.

நூறு கோடி அமெ. டொலர் பெறுமதியான இந்தத் திட்டத்துக்கான செலவை தென்கொரியாவே ஏற்றுக் கொள்ள வேண்டும் என்று அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் முன்னர் கூறியிருந்தார்.

இரு நாடுகளின் தேசிய பாதுகாப்பு ஆலோசகர்கள் தொலைபேசியில் மேற்கொண்ட உரையாடலை அடுத்து அமெரிக்கா நிதி வழங்க ஒப்புக்கொண்டுள்ளது.

தற்போது தென்கொரியாவில் அமைக்கப்படும் இந்த பாதுகாப்புக் கேடயம், வடகொரியாவில் இருந்து ஏவுகணைகள் வந்தால், அவற்றைச் சுட்டு வீழ்த்தும் திறன் படைத்தது.

இந்த ஒப்பந்தத்தின்படி, ஏவுகணை பாதுகாப்பு கேடய அமைப்பிற்கான இடத்தை தென்கொரியா வழங்கும் நிலையில், அமெரிக்கா ஏவுகணை பொருள்களுக்கான செலவை ஏற்றுக் கொள்ளும் என்பது குறிப்பிடத்தக்கது. (எ)

## ஜனாதிபதி பணி மிகச் சவாலானது பழைய வாழ்வையே விரும்புகிறேன்



### ஆதங்கம் கொள்ளும் ட்ரம்ப்

அமெரிக்க ஜனாதிபதி பணி மிகவும் சவாலாக உள்ளது. இப்போது எனது பழைய வாழ்க்கையை விரும்புகிறேன் என ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் தெரிவித்துள்ளார்.

அமெரிக்காவின் 45 ஆவது ஜனாதிபதியாக கடந்த ஜனவரி 20 ஆம் திகதி ட்ரம்ப் பதவி ஏற்றார். அவர் பொறுப்பேற்ற 100 ஆவது நாள் விழாவை தனது அலுவலகத்தில் எளிமையாகக் கொண்டாடிய போது தனியார் செய்தி நிறுவனத்துக்கு அளித்த பேட்டியிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இதுதொடர்பில் அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

அமெரிக்க ஜனாதிபதி பணி மிகவும் எளிமையாக இருக்கும் என்றே நினைத்தேன். ஆனால் அந்தப்பணி எவ்வளவு சவாலானது என்பதை இப்போது உணர்கிறேன்.

கார் ஓட்டுவதை மிகவும் விரும்புவேன். நான் நினைத்தால் கூட இப்போது கார் ஓட்ட முடியாது. எனக்குப் பிடித்தவற்றை, தனிப்பட்ட வாழ்க்கையை இழந்துவிட்டேன்.

24 மணி நேர பாதுகாப்புக் காரணமாக பட்டுப்புழு கூட்டில் இருப்பது போல உணர்கிறேன். இந்த நேரத்தில் எனது பழைய வாழ்க்கையையே விரும்புகிறேன். வடகொரியாவுடன் மிகப் பெரிய பிரச்சினை எழுந்துள்ளது. இந்தப் பிரச்சினைக்கு ராஜ்ஜிய ரீதியில் தீர்வு காணலாம் என்று முயற்சிக்கிறோம். ஆனால் அது மிகப்பெரும் சவாலாக உள்ளது. - என்றார்.

## மிசூரியில் வெள்ளப்பெருக்கு அவசர நிலை பிரகடனம்!



அமெரிக்காவின் மிசூரி மாநிலத்தில் தொடரும் அடை அழை காரணமாக ஏற்பட்டுள்ள வெள்ளப் பெருக்கில் சிக்கி இருவர் உயிரிழந்தனர். இதை யடுத்து அங்கு அவசர நிலை பிரகடனப்படுத்தப்பட்டுள்ளது.

மிசூரியின் ஆளுநர் எரிக்கி ரெய்டன்ஸின் உத்தரவின் பிரகாரம், நேற்றுமுன்தினம் தொடக்கம் அவசர நிலை பிரகடனப்படுத்தப்பட்டுள்ளது எனத் தெரிவிக்கப்படுகிறது.

மிசூரியில் அடைமழை தொடர்ந்தும் பெய்யக் கூடும் என்றும் செயின்ட் லூயிஸ் பகுதியில் இடியுடன்கூடிய மழைபெய்யும் என்று எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

அத்துடன் லூசியானா, மிஸிசிப்பி மற்றும் அலபாமா ஆகிய பகுதிகளிலும் நேற்று முன்தினம் அடைமழை பெய்ததாக அங்கிருந்து வரும் தகவல்கள் தெரிவிக்கின்றன. (எ)



# ரொனால்டோ புதிய சாதனை!

மாட்ரிக், மே 02
ரியல் மாட்ரிட் அணியின் நட்சத்திர வீரர் கிறிஸ்டியானோ ரொனால்டோ, ஐரோப்பாவில் இடம்பெற்ற 6 முக்கிய தொடர்களில் அதிக கோல்கள் (367) அடித்த வீரர் என்ற புதிய சாதனை படைத்துள்ளார்.

ஸ்பெயினில், உள்ளூர் உதைபந்தாட்ட கிளப் அணிகள் பங்கேற்கும் 'லா லிகா' தொடர் இடம்பெற்று வருகிறது. மாட்ரிட் நகரில் இடம்பெற்ற லீக் போட்டியில் ரியல் மாட்ரிட், வாலன்சியா அணிகள் மோதின.

அபாரமாக ஆடிய ரியல் மாட்ரிட் அணி 2-1 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது.

ரியல் மாட்ரிட் அணி சார்பில் கிறிஸ்டியானோ ரொனால்டோ (27 ஆவது நிமிடம்), மார்சிலோ (86 ஆவது) தலா ஒரு கோல் அடித்தனர். வாலன்சியா அணிக்கு டானி பரேஜோ (82 ஆவது நிமிடம்) ஒரு கோல் அடித்து ஆறுதல் கொடுத்தார்.

இப்போட்டியில் ஒரு கோல் அடித்த கிறிஸ்டியானோ ரொனால்டோ, ஐரோப்பாவில் இடம்பெற்ற 'லா லிகா', இங்கிலீஷ் பிரிமியர் லீக் உள்ளிட்ட 6 முக்கிய தொடர்களில் அதிக கோல்கள் அடித்த வீரர் என்ற புதிய சாதனை படைத்தார்.

இதுவரை இவர், ரியல் மாட்ரிட் (280 கோல்கள், 262 போட்டிகள்), மான்செஸ்டர் யுனைடெட் (84 கோல்கள், 196 போட்டிகள்), ஸ்போர்டிங் கிளப் டி போர்ச்சுகல் (3 கோல்கள், 25 போட்டிகள்) எனத் தனது அணிகளுக்காக 483 போட்டிகளில் 367 கோல்கள் அடித்துள்ளார்.

இதன்மூலம் முன்னாள் இங்கிலாந்து வீரர் ஜிம்மி கிரீவ்ஸ்,(வயது 77) (366 கோல்கள், 528 போட்டிகள்) 2 ஆவது இடத்துக்குத் தள்ளப்பட்டார். இவர் (1957 ஆம் ஆண்டு தொடக்கம் 1971 ஆம் ஆண்டு வரை) செல்சியா, ஏ.சி. மிலன், டாட்டன்ஹாம் ஹாட்ஸ்பர், வெஸ்ட் ஹாம் அணிகளுக்காக விளையாடியுள்ளார்.

ஜிம்மி கிரீவ்ஸ் இலக்கை, பார்சிலோனா அணிக்காக விளையாடும் அர்ஜென்டினா வீரர் மெஸ்சி (345 கோல்கள், 379 போட்டிகள்) விரைவில் முறியடிப்பார் என்றும் எதிர்பார்க்கப் படுகிறது.

**பார்சிலோனா வெற்றி:**

'லா லிகா' தொடரின் மற்றொரு லீக் போட்டியில் பார்சிலோனா, எஸ்பான்யால் அணிகள் மோதின.

அசத்தலாக ஆடிய பார்சிலோனா அணி 3-0 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது. பார்சிலோனா அணிக்கு லூயிஸ் சாரஸ் (50, 87 ஆவது நிமிடங்கள்), ராகிடிக் (76 ஆவது நிமிடம்)கோல்கள் அடித்து கைகொடுத்தனர்.

பார்சிலோனா அணி, இதுவரை பங்கேற்ற 35 போட்டிகளில் 25 வெற்றிகள், 6 சமநிலைகள், 4 தோல்விகள் என 81 புள்ளிகளுடன் முன்னிலை வகிக்கிறது.

பார்சிலோனா அணியை விட கோல்கள் வித்தியாசத்தில் பின்தங்கியுள்ள ரியல் மாட்ரிட் அணி 81 புள்ளிகளுடன் (34 போட்டிகள்) 2 ஆவது இடத்தில் உள்ளது.

# இலங்கை கிரிக்கெட் அணியின் வேகப்பந்து ஆலோசகரானார் அலன் டொனால்ட்



கொழும்பு, மே 02
சர்வதேச கிரிக்கெட் பேரவை (ஐ.சி.சி.) சம்பியன்ஸ் கிண்ண கிரிக்கெட் போட்டியை முன்னிட்டு இலங்கை அணியின் வேகப்பந்துவீச்சு ஆலோசகராக தென்னாபிரிக்காவின் அலன் டொனால்ட் நியமிக்கப்பட்டுள்ளார்.

இந்த நியமனம் தொடர்பான அறிவிப்பை ஸ்ரீலங்கா கிரிக்கெட் நிறுவனம் உத்தியோகபூர்வமாக நேற்றுமுன்தினம் வெளியிட்டது.

இங்கிலாந்தின் பிராந்திய அணிகளில் ஒன்றான கென்ட் அணியின் உதவிப் பயிற்றுநராக அலன் டொனால்ட் நியமிக்கப்படவுள்ளார்.

இந் நிலையில் சம்பியன்ஸ் கிண்ண கிரிக்கெட் போட்டிகள் நிறைவு பெறும்வரை இரண்டு மாத காலத்திற்கு ஸ்ரீலங்கா கிரிக்கெட் நிறுவனத்துடன் இணைந்து செயற்படும் வகையில் அலன் டொனலடுக்கு விடுகை கொடுக்க கென்ட் பிராந்திய கழகம் இணக்கம் தெரிவித்துள்ளது என்று ஸ்ரீலங்கா கிரிக்கெட் நிறுவனத்தின் ஊடகப் பிரிவு வெளியிட்டுள்ள அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

தேசிய கிரிக்கெட் அணியின் முன்னேற்றத்தை முன்னிட்டு திறமை வாய்ந்த பயிற்றுநர்களுக்கும் தொழில்நுட்ப பயிற்சிகளுக்கும் பெருமளவு பணத்தை ஸ்ரீலங்கா கிரிக்கெட் நிறுவனம் முதலீடு செய்து வருகின்றது. அதன் வரிசையில் துடுப்பாட்டம், பந்துவீச்சு, களத்தடுப்பு ஆகிய பயிற்சிகளுக்கென முன்னாள் தேசிய கிரிக்கெட் வீரர்கள் பலரை முழு நேரப் பயிற்றுநர்களாக ஸ்ரீலங்கா கிரிக்கெட் நிறுவனம் நியமித்துள்ளது. வேகப்பந்து வீச்சுப் பயிற்றுநர்களான சமிந்த வாஸ், சம்பிக்க ராமநாயக்க, ரவீந்திர புஷ்பகுமார மற்றும் நுவன் சொய்ஸா ஆகியோருடன் மிக நெருக்கமாக அலன் டொனல்ட் செயற்படவுள்ளார்.

பந்துவீச்சு பயிற்றுநர்களுக்கு ஆலோசனைகளை வழங்கவுள்ள 50 வயதான அலன் டொனல்ட், தேசிய அணிகளுடனும் இணைந்து செயற்படவுள்ளார்.

இங்கிலாந்து கால நிலைக்கு ஏற்ப தங்களைப் பழக்கப்படுத்திக் கொள்ளும் பொருட்டு பல்லேகலையில் எதிர்வரும் 9ஆம் திகதிமுதல் 16ஆம் திகதிவரை தங்குமிட முகாமிட்டு தீவிர பயிற்சியில் ஈடுபடவுள்ள இலங்கை அணியினருடன் அலன் டொனல்ட் இணைந்துகொள்வார் என ஸ்ரீலங்கா கிரிக்கெட் நிறுவனம் தெரிவிக்கின்றது.

தென்னாபிரிக்கா சார்பாக டெஸ்ட் அரங்கில் 300 விக்கெட்களை வீழ்த்திய முதலாமவரான அலன் டொனல்ட், நேற்று இலங்கைக்கு விஜயம் செய்துள்ளார். இவர் 1992 ஆம் ஆண்டு முதல் 2002 ஆம் ஆண்டு வரை 72 டெஸ்ட் போட்டிகளில் விளையாடி 330 விக்கெட்களை வீழ்த்தியுள்ளார்.

# அரை இறுதிப் போட்டியுடன் வெளியேறினார் ஷரபோவா!



ஸ்டுட்கார்ட், மே 02
ஊக்கமருந்து பாவனையில் சிக்கியமை காரணமாக 15 மாதத் தடையின் பின்னர் சர்வதேச டென்னிஸ் அரங்கில் மீள் பிரவேசம் செய்த மரியா ஷரபோவா, தனது மூன்றாவது போட்டியில் தோல்வி அடைந்து வெளியேறியுள்ளார்.

ஸ்டுட்கார்ட்டில் நடைபெற்ற போர்ஷே டென்னிஸ் குரோன் ப்றீ போட்டியில் திறந்த வாய்ப்பு (வைல்ட் கார்ட்) மூலம் மீள் பிரவேசம் செய்த மரியா ஷரபோவா, முதலிரண்டு போட்டிகளில் வெற்றிபெற்றார்.

ஆனால், அரை இறுதியில் பிரான்ஸ் வீராங்கனை கிறிஸ்டினா மிலாடேனோவிக்கிடம் தோல்வி அடைந்துள்ளார்.

அப் போட்டியின் முதலாவது செட்டில் 6 - 3 என்ற புள்ளிகள் அடிப்படையில் வெற்றிபெற்ற ஷரபோவா அடுத்த இரண்டு செட்களிலும் 5 - 7, 4 - 6 என்ற புள்ளிகள் அடிப்படையில் மிலடேனோவிக்கிடம் தோல்வி அடைந்து போட்டியிலிருந்து வெளியேறினார்.

இந்தத் தோல்வியின் காரணமாகத் தரவரிசையில் 200 வீராங்கனைகளுக்குள் ஷரபோவா இடம்பெறவில்லை.

இதனால், இம் மாதம் ஆரம்பமாகவுள்ள பிரெஞ்சு பகிரங்க போட்டிகளிலும் திறந்த வாய்ப்பு மூலமே ஷரபோவாவுக்கு பங்குபற்றக்கூடியதாக இருக்கும்.

பிரெஞ்சு பகிரங்க டென்னிஸ் போட்டி பாரிஸில் எதிர்வரும் 28ஆம் திகதி ஆரம்பமாகவுள்ளதுடன் ஷரபோவாவுக்கு எத்தகைய திறந்த வாய்ப்பு (வைல்ட் கார்ட்) வழங்கப்படும் என்பது 16ஆம் திகதி அறிவிக்கப்படும் என்றும் தெரிவிக்கப்படுகிறது.

# வோர்னரின் அதிரடியில் வீழ்ந்தது கொல்கத்தா!



ஹைதராபாத், மே 02

ஐ.பி.எல். தொடரில் நேற்றுமுன்தினம் இடம் பெற்ற போட்டி ஒன்றில் சன்ரைசஸ் ஹைதராபாத் அணி 48 ஓட்டங்களால் அசத்தல் வெற்றி ஒன்றைப் பதிவு செய்துள்ளது.

ஹைதராபாத்தில் நடைபெற்ற இந்தப் போட்டியின் நாணய சுழற்சியில் வெற்றி பெற்ற கொல்கத்தா நைட் ரைடர்ஸ் அணி களத்தடுப்பில் ஈடுபடத் தீர்மானித்தது. இதன்படி, ஐதராபாத் அணியின் தலைவர் வோர்னர், தவான் ஆகியோர் ஆரம்ப வீரர்களாகக் களம் இறங்கினார்.

தவான் ஒரு புறம் நிதானமாக விளையாட, மறு புறம் வோர்னர் ருத்ரதாண்டவம் ஆடினார். 2 ஆவது ஓவரில் ஒரு சிக்ஸருடன் 10 ஓட்டங்கள் குவித்த வோர்னர், கிறிஸ் வோக்ஸ் வீசிய 3 ஆவது ஓவரில் தலா ஒரு சிக்ஸர், பவுண்டரி மூலம் 11 ஓட்டங்கள் சேர்த்தார். யூசுப் பதான் வீசிய 4 ஆவது ஓவரில் இரண்டு பவுண்டரிகள், ஒரு சிக்ஸருடன் 17 ஓட்டங்கள் சேர்த்தார்.

ஆறாவது ஓவரை குல்தீப் யாதவ் வீசினார். இந்த ஓவரின் 2ஆவது பந்தில் தவான் கொடுத்த 'ஸ்டம்பிங்' வாய்ப்பை உத்தப்பா சரியாகப் பயன்படுத்தவில்லை. இந்த ஓவரில் ஐதராபாத் அணி 12 ஓட்டங்கள் சேர்க்க, பவர்பிளேயான முதல் 6 ஓவர்களில் 79 ஓட்டங்கள் குவித்தது.

அதிரடி காட்டிய வோர்னர் 43 பந்துகளில் 7 பவுண்டரிகள், 8 சிக்ஸர்களுடன் சதம் அடித்தார். மறுமுனையில் விளையாடிய தவான் 30 பந்துகளில் 29 ஓட்டங்கள் எடுத்த நிலையில் 'ரன்அவுட்' ஆனார். அப்போது ஐதராபாத் அணி 13 ஓவரில் 139 ஓட்டங்கள் எடுத்திருந்தது. அடுத்து கேன் வில்லியம்சன் களம் இறங்கினார். வோர்னர் 59 பந்துகளில் 10 பவுண்டரிகள் மற்றும் 8 சிக்ஸர்களுடன் 126 ஓட்டங்கள் சேர்த்தார்.

கேன் வில்லியம்சனும் அதிரடியாக விளையாட சன்ரைசர்ஸ் ஐதராபாத் அணி 20 ஓவர்கள் முடிவில் 3 விக்கெட்டுகள் இழப்பிற்கு 209 ஓட்டங்களைக் குவித்தது.

பின்னர் 210 ஓட்டங்கள் எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் களமிறங்கிய கொல்கத்தா நைட் ரைடர்ஸ் அணியின் தொடக்க ஆட்டக்காரர்களாக சுனில் நரைன் மற்றும் கம்பீர் ஆகியோர் களம் இறங்கினர்.

ஓர் ஓட்டம் மட்டுமே எடுத்த நிலையில் நரைன் ஆட்டமிழந்தார். அந்த அணியின் தலைவர் கம்பீர் 11 ஓட்டங்களுக்கு அரங்கு திரும்பினார். இதனையடுத்து களமிறங்கிய உத்தப்பா அதிரடியாகவும், பொறுப்புடனும் செயல்பட்டு ஆடினார். அவர் 28 பந்துகளில் 4 பவுண்டரிகள், 4 சிக்ஸர்களுடன் 53 ஓட்டங்கள் எடுத்து ஆட்டமிழந்தார்.

ஆட்டத்தின் 7 ஆவது ஓவரில் மழை குறுக்கிட்டதால் ஆட்டம் சிறிது நேரம் தடைப்பட்டது. பின்னர், மழை நின்றதும் கொல்கத்தா அணியினர் துடுப்பாட்டத்தை தொடர்ந்தனர்.

வெற்றி இலக்கு அதிகமாக இருந்தாலும் அதிரடி வீரர்கள் சீக்கிரமே ஆட்டமிழந்ததால் பின்வரிசை வீரர்கள் ஓட்டங்களை எடுக்க மிகவும் சிரமப்பட்டனர். 20 ஓவர்கள் முடிவில் கொல்கத்தா அணியினால் 7 விக்கெட்டுகளை இழந்து 161 ஓட்டங்களை மட்டுமே எடுக்க முடிந்தது.

ஐதராபாத் அணி தரப்பில் புவனேஷ்வர் குமார், முகமது சிராஜ், கவுல் ஆகியோர் தலா 2 விக்கெட்டுகளை வீழ்த்தினர்.

இதனால், 48 ஓட்டங்கள் வித்தியாசத்தில் ஐதராபாத் அணி வெற்றி பெற்றது. அந்த அணியில் அதிரடியாக சதமடித்த அணித் தலைவர் வோர்னர் ஆட்ட நாயகனாக தெரிவானார்.

# தொடர் தோல்விகளால் தடுமாறும் டில்லி அணி!

மொஹாலி, மே 02

ஐ.பி.எல். தொடரில் நேற்று முன்தினம் மொஹாலியில் இடம்பெற்ற முதல் போட்டியில் கிங்ஸ் லெவன் பஞ்சாப் மற்றும் டில்லி டேர்டேவில்ஸ் அணிகள் பலப்பரீட்சை நடாத்தின.

இந்தப் போட்டியின் நாணய சுழற்சியில் வெற்றி பெற்ற கிங்ஸ் லெவன் பஞ்சாப் அணியின் தலைவர் மெக்ஸ்வெல் களத்தடுப்பில் ஈடுபடத் தீர்மானித்தார்.

இதன்படி முதலில் துடுப்பெடுத்தாட களம் வந்த டில்லி அணியின் சஞ்சு சாம்சன், பில்லிங்ஸ் ஆகியோர் தொடக்க வீரர்களாக களம் இறங்கினர். ஆரம்ப ஓவரிலேயே டில்லி அணிக்கு பெரிய அதிர்ச்சி காத்திருந்தது. சந்தீப் ஷர்மா வீசிய அந்த ஓவரின் கடைசிப் பந்தில் பில்லிங்ஸ் ஓட்டங்கள் எவையும் எடுக்காத நிலையில் ஆட்டம் இழந்தார்.

அடுத்து கருண் நாயர் களம் இறங்கினார். 3ஆவது ஓவரின் 5ஆவது பந்தில் சஞ்சு சாம்சன் 5 ஓட்டங்கள் எடுத்த நிலையில் வெளியேறினார். 5ஆவது ஓவரின் கடைசிப் பந்தில் ஷ்ரேயாஸ் அய்யர் 6 ஓட்டங்களுடன் வெளியேறினார். இந்த மூன்று விக்கெட்டுக்களை சந்தீப் ஷர்மா வீழ்த்தினார்.

ஆரம்பம் முதலே விக்கெட்டுக்களை இழந்த டில்லி அணியினால் அதிலிருந்து மீண்டு வரமுடியவில்லை. கருண் நாயர் (11 ஓட்டங்கள்), ரிஷப் பந்த் (3 ஓட்டங்கள்), கோரி ஆண்டர்சன் (18 ஓட்டங்கள்), கிறிஸ் மோரிஸ் (2 ஓட்டங்கள்), ரபாடா (11 ஓட்டங்கள்) என அனைவரும் அடுத்தடுத்து ஆட்டமிழக்க டில்லி டேர்டெவில்ஸ் அணி 17.1 ஓவரில் 67 ஓட்டங்கள் மட்டுமே எடுத்து அனைத்து விக்கெட்டுக்களையும் இழந்தது.

பஞ்சாப் அணி சார்பில் சந்தீப் ஷர்மா 3 விக்கெட்டுகளையும், அக்சார் பட்டேல், வருண் ஆரோன் ஆகியோர் தலா இரண்டு விக்கெட்டுக்களையும் வீழ்த்தினர்.



இதனைத் தொடர்ந்து 68 என்ற இலகுவான வெற்றி இலக்கை நோக்கி துடுப்பெடுத்தாட களம் இறங்கிய கிங்ஸ் லெவன் பஞ்சாப் அணியின் ஆரம்ப துடுப்பாட்ட வீரர்களாக அம்லா மற்றும் குப்டில் ஆகியோர் ஆட்டத்தைத் தொடங்கினர்.

அம்லா நிதானமாக விளையாட, மார்ட்டின் குப்தில் அதிரடி ஆட்டத்தை வெளிப்படுத்தினார். இதன் காரணமாக பஞ்சாப் அணி 7.5 ஓவரிலேயே விக்கெட் இழப்பின்றி 68 ஓட்டங்கள் எடுத்து 10 விக்கெட்டுகள் வித்தியாசத்தில் அபார வெற்றி பெற்றது.

மார்ட்டின் குப்டில் 27 பந்துகளில் 7 பவுண்டரிகள், 3 சிக்ஸர்களுடன் 50 ஓட்டங்கள் எடுத்தும், அம்லா 20 பந்துகளில் 16 ஓட்டங்கள் எடுத்தும் கடைசி வரை ஆட்டமிழக்காமல் இருந்தனர். மூன்று விக்கெட்டுக்கள் வீழ்த்திய சந்தீப் ஷர்மா ஆட்ட நாயகன் விருதைப் பெற்றார்.

இந்த வெற்றியின் மூலம் கிங்ஸ் லெவன் பஞ்சாப் அணி 9 போட்டிகளில் நான்கு வெற்றிகள் மூலம் 5ஆவது இடத்தில் உள்ளது. டில்லி அணி 8 போட்டிகளில் இரண்டில் மட்டுமே வெற்றி பெற்று கடைசி இடத்தில் உள்ளது.

# திறமையான பந்துவீச்சுக்கு காரணம் முத்தையா முரளிதரன்!

## ஹைதராபாத் அணி வீரர் ரஷித் கான் கூறுகிறார்

ஹைதராபாத், மே 02.

கிங்ஸ் லெவன் பஞ்சாப் அணிக்கெதிரான போட்டியில் சிறப்பான பந்து வீச்சை வெளிப்படுத்தி ஆட்ட நாயகன் விருது பெற்ற ரஷித் கான், தன்னுடைய திறமையான பந்துவீச்சுக்கு காரணம் முத்தையா முரளிதரன் தான் என்றும் குறிப்பிட்டுள்ளார்.

மொஹாலியில் கடந்த வெள்ளிக்கிழமை நடைபெற்ற போட்டியில் பஞ்சாப் - ஹைதராபாத் அணிகள் மோதின.



இதில் முதலில் ஆடிய ஹைதராபாத் அணி 207 ஓட்டங்களைக் குவித்தது. பின்னர் கிங்ஸ் லெவன் பஞ்சாப் அணி 208 ஓட்டங்களை சேர்த்தால் வெற்றி என்ற இலக்குடன் களமிறங்கியது.

ரஷித் கான், புவனேஸ்வர் குமார் ஆகியோரின் அபார பந்து வீச்சால் பஞ்சாப் அணியால் 181 ஓட்டங்களை மட்டுமே எடுக்க முடிந்தது.

குறிப்பாக ரஷித் கான் நான்கு ஓவர்களில் 16 ஓட்டங்களை மட்டுமே விட்டுக்கொடுத்து முக்கியமான நேரத்தில் மோர்கன் விக்கெட்டை வீழ்த்தினார். இதனால் ரஷித் கான் ஆட்ட நாயகன் விருதை தட்டிச் சென்றார்.

ஆட்ட நாயகன் விருது கிடைத்தமை தொடர்பில் ரஷித் கான் கூறுகையில் - "இந்த ஆட்ட நாயகன் விருதை எனது சகோதரருக்கு அர்ப்பணிக்க விரும்புகிறேன்.

அத்துடன் முத்தையா முரளிதரன் போன்ற ஜாம்பவான்களின் துணையுடன் ஐ.பி.எல். தொடரில் சிறப்பாக பந்து வீச முடிகிறது." - என்றும் தெரிவித்துள்ளார்.

ஹைதராபாத் அணியின் பந்துவீச்சுப் பயிற்சியாளராக இலங்கை அணியின் முன்னாள் வீரர் முத்தையா முரளிதரன் செயற்பட்டு வருகிறார் என்பது குறிப்பிடத்தக்கது.

## தீர்வு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வேண்டும். நல்லிணக்கம், ஒற்றுமை என்பன ஏற்படுத்தப்பட வேண்டும்.

இந்த நாட்டில் கடந்த 30 வருடங்களாக ஏற்பட்ட யுத்தத்தினால் பெரும் இராணுவச் செலவுகள் மற்றும் இழப்புக்கள் என்பன ஏற்பட்டிருக்கின்றன. இதனால் நாடுமுன்னேறமுடியாமல்பொருளாதார ரீதியாகப் பல பின்னடைவைச் சந்தித்து இருக்கின்றது.

ஆசியாவில் பல்வேறு நாடுகள் பல முன்னேற்றத்தை அடைந்து இருக்கின்றன. சிங்கப்பூர், மலேசியா போன்ற நாடுகள் முன்னேறி உள்ளன.

அதனால் அந்நாட்டு மக்கள் கௌரவமாக வாழ்கின்றனர். ஆனால் இந்தநாட்டில்வாழ்கின்ற மக்கள்அந்தநிலையைஇன்னும் அடையவில்லை.

இந்த நாட்டில் தொழில் வாய்ப்புக்கள் வழங்கப்படாமையினால் நாடுபொருளாதாரரீதியில்பெரும் பின்னடைவைச் சந்தித்துள்ளது. இதனை மாற்ற வேண்டும்.

விஞ்ஞான வளர்ச்சிக்கு ஏற்ப எம்மை தயார்படுத்திக்கொள்ள வேண்டும். அப்போதுதான்பொருளாதார ரீதியாக நாம் முன்னேற முடியும்.

வடக்கு மற்றும் கிழக்கில் வாழ்கின்றதமிழ்பேசும்மக்கள் கட்டாயமாக ஒற்றுமையுடன் இருக்க வேண்டும். அப்போது தான் நாம் எதிர்பார்த்த இலக்கை அடைய முடியும். எமக்குள் ஒற்றுமை இல்லாவிட்டால் அது எமக்கு பாதகமாக அமையும்.

நாடு சுதந்திரம் அடைவதற்கு முன்னர் தமிழர்களுக்கு சமஷ்டி முறையிலான தீர்வுத்திட்டத்திற்கு வாய்ப்பிருந்தது.

1987 ஆம் ஆண்டுக்குப் பின்னரும் சமஷ்டி முறையிலான தீர்விற்கு வாய்ப்பு இருந்தது. அது எமக்குக் கிடைக்காது கைநழுவிப் போய் விட்டது.

இதன் காரணமாக தற்போது கிடைத்துள்ள சந்தர்ப்பத்தைச் சரியாகப் பயன்படுத்திக் கொள்ள வேண்டும். அதற்கு எம்முடைய மக்கள் எம்முடன் இருக்க வேண்டும்.

அதேவேளை, இனிமேல் எமது மக்களுக்கு வழங்கப்படுகின்றஎந்தத்தீர்வாக இருந்தாலும் எமது மக்கள் ஏற்றுக்கொள்கின்ற தீர்வாக அது இருக்க வேண்டும்.

அப்போதுதான் நாம் அதை ஏற்றுக்கொள்வோம். அந்த விடயத்தில் எமது கட்சி உறுதியாக இருந்து செயற்பட்டு வருகின்றது.

சர்வதேசம் இந்த நாட்டின் நடவடிக்கைகளைஉற்றுநோக்கிக் கொண்டு இருக்கின்றது. ஐக்கிய நாடுகள் சபையில் பல்வேறு தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டு இருக்கின்றன. இச்சந்தர்ப்பத்தை நாம்சரியாகப்பயன்படுத்தவேண்டும்.

அந்தத் தீர்மானம் நிறைவேற்றப்பட வேண்டுமானால் சரியான முறையில் அரசமைப்பு மாற்றப்பட்டு, நியாயமான அரசியல் தீர்வு மக்களுக்கு இறைமையின் அடிப்படையில் அதிகாரங்களைப் பகிர்ந்தளித்து, அவர்கள் சுதந்திரமாகவும், கௌரவமாகவும் வாழக் கூடிய நிலை இந்த நாட்டில் ஏற்பட வேண்டும்.

அதனைஅடைவதற்குத்தான் எமது அரசியல் பயணத்தை அமைதியான முறையில் நகர்த்திக் கொண்டு இருக்கின்றோம். சர்வதேச சந்தையில் முதலீட்டை செய்ய வேண்டுமானால் இலங்கையில்நியாயமான தீர்வுத்திட்டம் முன்வைக்கப்பட வேண்டும்.

பிரதமர் ரணில் விக்கிரமசிங்க கேட்டுக் கொண்டதற்கு இணங்க வடக்கு மற்றும் கிழக்கில் இந்திய அரசாங்கம்பலஅபிவிருத்திகளை முன்னெடுக்கவுள்ளது. குறிப்பாக திருகோணமலையை மையப்படுத்தியும் ஏனைய பகுதிகளையும் அபிவிருத்தி செய்யவுள்ளனர்.

முழுமையான அரசியல் தீர்வு வழங்கப்பட்டால்தான் இந்தியாவின் மூலம் செய்யப்படும் அபிவிருத்தியைப்பூரணமாகபெற்றுக் கொள்வதற்கு நல்லதாக அமையும்.

இந்த நாட்டு மக்கள் அனைவரும் சுயநிர்ணய உரிமையுடன் வாழ வேண்டும். இந்த நாடு என்னுடைய நாடு என்ற அந்தஸ்து வேண்டும்.

முஸ்லிம்களைத் தமிழர்களும் தமிழர்களை முஸ்லிம்களும் ஏமாற்றிக் கொள்ள முடியாது. நாம் இருவரும் ஒற்றுமைப் படவேண்டும்.

இந்த நாட்டு மக்கள் அனைவரும் சமத்துவத்துடன் வாழ வேண்டுமென்றால்ஆட்சிமுறைகளில் மாற்றங்கள் வேண்டும். நமக்கு கிடைத்திருக்கின்ற சந்தர்ப்பத்தை இழந்துவிடக் கூடாது.

தமிழர்கள் மற்றவர்களின் உரிமைகளை மதித்து நமது உரிமைகளைப்பெறவேண்டும். இன்று சர்வதேச சமூகம் இந்த நாட்டில்நடக்கும்விடயங்களை அவதானித்துக்கொண்டு இருக்கின்றது.ஐ.நா.மனித உரிமைகள்கவுன்ஸிலில்பலதீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டுள்ளன. அந்தத்தீர்மானங்கள்முழுமையாக நடைமுறைப்படுத்தப்பட வேண்டும். அந்தத் தீர்மானங்கள் முழுமையாக நிறைவேற்றப்பட வேண்டுமானால், இந்த நாட்டில் அரசமைப்பு மாற்றப்பட்டு நியாயமான தீர்வை மக்களுக்கு வழங்க வேண்டும். இதனை அடைவதற்காகவே தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு பல பணிகளை நிறைவேற்றி வருகின்றது.

இவ்வாறு ஒரு சிறந்த தீர்வு கிடைக்குமானால் அது தமிழர்களுக்கு மட்டுமல்ல, இந்த நாட்டில் வாழ்கின்ற அனைத்து மக்களுக்கும் பயனுள்ளதாக அமையும். நாட்டுக்கும் சிறந்த விடயமாக அமையும். – என்றார்.

## மோடிக்கு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

"திருகோணமலை தொடர்பில் இலங்கையுடன் ஓர் உடன்பாடு செய்வதற்காக இந்தியப் பிரதமர்மோடிஇலங்கைக்குவருகின்றார். அதனை நாம் எதிர்க்க வேண்டும். இலங்கையை இந்தியாவிடம் விற்கும் இந்த நடவடிக்கைக்கு எதிர்ப்புக் காட்டும் விதத்தில் இந்தியப் பிரதமரின் விஜயசமயத்தில்கறுப்புக்கொடிகள்பறக்கவிட்டு எதிர்ப்புக் காட்ட வேண்டும்".

"விரைந்து தேர்தலைநடத்துவதற்கு வலியுறுத்தி மக்கள் வீதிக்கு இறங்க வேண்டும்."

– இவ்வாறு நேற்றுக் காலிமுகத்திடலில்நடைபெற்றகூட்டு எதிரணியின் மே தினக் கூட்டத்தில் உரையாற்றுகையில் கூட்டு எதிரணிப் பிரமுகர் விமல் வீரவன்ஸ எம்.பி. தெரிவித்தார்.

முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவையும் அருகில் வைத்துக் கொண்டு இந்த அறிவிப்பை விமல் வீரவன்ஸ விடுத்திருக்கின்றமை குறிப்பிடத்தக்கது. (உ)

# ஒற்றுமைப்பட்ட அரசியலின் மூலமே வளத்தையும் வாழ்வையும் பெறலாம்

## முல்லைத்தீவு மேதின விழாவில் முதல்வர் விளக்கம்

முல்லைத்தீவு, மே 02

"சுயநலங் கருதாது ஒற்றுமைப்பட்ட – ஒன்றிணைந்த – அரசியல் நடவடிக்கைகளே எமக்கு வளத்தையும் வருமானத்தையும் வாழ்வையும் தரவல்லன."

– இவ்வாறு கூறியிருக்கின்றார் வடக்கு மாகாண முதலமைச்சர் சி.வீ.விக்னேஸ்வரன்.

கூட்டுறவாளர்கள் நேற்று முல்லைத்தீவில் நடத்திய மேதினப் பேரணியின் பின்னர் முல்லைத்தீவு மாவட்டக் கூட்டுறவுக் கலாசார மண்டபத்தில் நடைபெற்றமேதினக்கூட்டத்தில் உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

கூட்டுறவுத்துறை, அதன் சிறப்பு, இலங்கையில் அதன் வளர்ச்சி, அதன் சரித்திரம், கூட்டுறவை மேம்படுத்தல் ஆகிய பல விடயங்கள் குறித்து நீண்ட உரை ஒன்றை அவர் ஆற்றினார்.

அந்த உரையில் அவர் மேலும் கூறியவை வருமாறு:–

மக்கள் மட்டத்து ஜனநாயக நிறுவனங்களாக கூட்டுறவுகள் பரிணமித்துள்ளன. தம்மைத் தாமே ஆளும் முறைமையை கூட்டுறவு, மக்களுக்குச் சொல்லிக் கொடுக்கின்றது. இரண்டாம் உலக மகா யுத்தம் முடிந்த போது எமது வடபுலத்துத் தேவைகளைக் கூட்டுறவுகளே நிறைவு செய்துவந்தன. விவசாய உற்பத்தியாளர்கள் கூட்டுறவு, பனை விளைபொருள் கூட்டுறவு, மீனவர் கூட்டுறவு, வைத்தியசாலைகள் கூட்டுறவு, பாடசாலைகள் கூட்டுறவுகள், சிக்கனக்கடன் வழங்கும் கூட்டுறவுகள் என்று பல கூட்டுறவுச் சங்கங்கள் வடமாகாணத்தில் திறம்பட அக்காலத்தில் நடத்தப்பட்டன.

அரசியலானது எமது முழுச் சமுதாயத்தையும் குட்டிச் சுவராக்கிவிட்டது. இடமாற்றங்களும், போரும், அரசியல் உள்ளீடுகளும் கூட்டுறவைச் சீரழித்து விட்டன. இன்று பலர் கூட்டுறவை வைத்துத் தமது அரசியல் அபிலாசைகளை நிறைவு செய்யப் பார்க்கின்றார்கள்.

கூட்டுறவாளர்களால் நடத்தப்படும் இந்தமேதினக்கொண்டாட்டம் எமது தமிழ் இனத்திற்கு கூட்டான ஒருமித்த செயற்பாடுகளின் முக்கியத்துவத்தை எடுத்துக் காட்டுவதாக அமையட்டும்.

நேற்றைய தினந்தான் சகல் காணாமற்போனோரின் உறவுகளையும் வட,கிழக்கு ரீதியாக ஒன்றுபடுத்த வேண்டும் என்று கேட்டுக் கொண்டிருந்தேன்.

எமது காணிகள் எமக்குத் திரும்பக்கையளிக்கப்படவேண்டும். போர்க்குற்றங்களுக்கு ஆளாகியிருக்கும் இராணுவம் உடனேயே எமது பிரதேசங்களை விட்டு வெளியேற வேண்டும். சட்டமும் ஒழுங்கும் பொலிஸார் கைகளுக்கு மாற வேண்டும். எமது அரசியல் கைதிகள் உடனே விடுதலை செய்யப்பட வேண்டும். காணாமற்போனோர் பற்றிய விசாரணைகள் தாமதமின்றி நடைபெற வேண்டும்.

இவற்றிற்கான அரசியல் நடவடிக்கைகளை நாங்கள் தொடர்ந்து முன்னெடுத்துச் செல்வோம். சுயநலங்கருதாது ஒற்றுமைப்பட்ட–ஒன்றிணைந்த – அரசியல் நடவடிக்கைகளே எமக்கு வளத்தையும் வருமானத்தையும் வாழ்வையும் தரவல்லன. கூட்டுறவுடன் கூடி வாழப் பழகிக் கொள்வோம். – என்றார்.

# மாக்சிச, லெனினிசக் கட்சியின் மேதினம் நேற்று யாழ்ப்பாணத்தில்





புதிய மாக்சிச, லெனினிசக் கட்சியின் மேதின எழுச்சிப் பேரணியாழ்ப்பாணத்தில்நடைபெற்றது. 'ஒக்ரோபர்சோசலிசப் புரட்சியின் பாதையில் அனைத்துஒடுக்குமுறைகளையும் எதிர்த்து மக்கள் அதிகாரத்தை வென்றெடுக்க அணிதிரள்வோம்' – என்ற தொனிப் பொருளில்நேற்றையமேதினம் இடம்பெற்றது.

கொக்குவில் மஞ்சவனப்பதி முருகன் ஆலய வளாகத்தில் இருந்து ஆரம்பமான பேரணி காங்கேசன்துறை வீதி வழியாக சத்திரத்துச் சந்தியை அடைந்து அங்கிருந்து ஆஸ்பத்திரி வீதி வழியாக முனியப்பர் வீதியை சென்றடைந்துயாழ். வீரசிங்கம் மண்டபத்தில் நிறைவடைந்தது.

பின்னர்வீரசிங்கம்மண்டபத்தில்மாலை 6.00 மணியளவில் பொதுக் கூட்டம் இடம்பெற்றது. இக் கூட்டத்தில் புதிய மாக்சிச லெனினிசக் கட்சியின் பொதுச் செயலாளர் சி.க.செந்தில்வேல், சட்டத்தரணிதேவராஜன்மற்றும் கட்சியின் உறுப்பினர்கள், பொதுமக்கள்எனப்பலர்கலந்து கொண்டனர். (ம)

## காலி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அறுபது வயது மதிக்கத்தக்க ஒருவரும், எண்பது வயது மதிக்கத்தக்க மற்றொருவருமே உயிரிழந்தனர் என முதலில் கிடைத்த செய்திகள் தெரிவித்தன.

இருவரினதும் சடலங்கள் மேதினக் கூட்டம் நடைபெறவிருந்த காலிமுகத் திடலில் இருந்துகொழும்புதேசியவைத்தியசாலைக்குஎடுத்துச்செல்லப்பட்டன.

பிரேத பரிசோதனையின் பின்னரே மரணம் சம்பவித்தமைக்கானகாரணத்தைஉறுதிப்படுத்த முடியும் என வைத்தியசாலைப் பணிப்பாளர் அனில் ஜயசிங்க தெரிவித்தார்.

அண்மைக்காலத்தில்புனித பாப்பரசர்இலங்கைக்குவருகை தந்த சமயமே காலிமுகத் திடலில் பெரும் ஜனசமுத்திரம் திரண்டது எனக் கூறப்பட்டது. எனினும், அதைவிட எண்ணிக்கையில் மிக அதிகமான மக்கள் நேற்றைய கூட்டு எதிரணியின் மேதினத்தில் திரண்டனர்.

காலிமுகத் திடல், அதற்குப் பக்கத்தில் உள்ள பாரிய வீதிகள் எங்கும் ஜனசமுத்திரம் நிரம்பி வழிந்ததைக் காணக் கூடியதாக இருந்தது.

இலங்கையின் சமகால அரசியலில் இந்த ஜனத்திரள்வு ஒரு பெரிய அதிர்வை ஏற்படுத்தியுள்ளமையுடன், பல மாற்றங்களுக்கு வித்திடுவதாகவும் அமையக்கூடும் எனக் கொழும்பில் சில அரசியல் நோக்கர்கள் கருத்து வெளியிட்டனர்.

கண்டி, கெட்டம்பேயில் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன பங்குபற்றிய மேதினக் கூட்டத்திலும் விட மிக அதிக எண்ணிக்கையானோர் மஹிந்தவின் கூட்டத்துக்குவருகைதந்திருந்தனர்.

காலி முகத்திடல் கூட்டத்துக்கு நேற்று மதியத்துக்குச் சற்றுப் பின்னர் ஆரம்பத்தில் அதிக கூட்டம் இருக்கவில்லை. ஆனால் பிற்பகலில் திடீரெனத் திரண்டு வந்த கூட்டத்தினால் காலி முகத்திடல் பிதுங்கி வழிந்தது.

ஒரு லட்சத்துக்கும் அதிகமானோர் அங்கு திரண்டனர் எனச் சுயாதீனச் செய்திகள் தெரிவித்தன.

ஆனால் நாமல் ராஜபக்ஷ எம்.பியோ இரண்டு மில்லியன் மக்கள் வருகை தந்தனர் எனத் தெரிவித்தார் என்று ஒரு செய்தி ஏஜென்ஸி தகவல் வெளியிட்டது. (உ)

# மக்களுடைய காணியில் ஓர் அங்குலம் கூட வைத்திருக்காமல் முழுமையாக வழங்குவோம்

## யாழ். மே தினத்தில் அமைச்சர் ராஜித தெரிவிப்பு

யாழ்ப்பாணம், மே 02

''மக்களுடைய காணிகளில் ஓர் அங்குலம் கூட வைத்திருக்காமல் முழுமையாக வழங்குவோம்.

''ஜனாதிபதி தேர்தல் காலத்தில் வழங்கிய வாக்குறுதிகள் நிறைவேற்றப்படாமல் மந்தகதியில் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன என்று பல தரப்பிலும் கருத்துகள் முன்வைக்கப்படுகின்றன.

''மந்தகதியில் அவை நடைபெற்றாலும் முழுமையாக நடைபெறும். அடுத்த மே மாதம் முதலாம் திகதிக்குள் சகல வாக்குறுதிகளும் நிறைவேற்றப்படும்.''

இவ்வாறு மத்திய சுகாதார அமைச்சர் ராஜித சேனாரத்ன தெரிவித்துள்ளார்.

முற்போக்குத் தமிழ்த் தேசியக் கட்சியின் மே தின நிகழ்வுகள் யாழ். சங்கிலியன் பூங்கா (கிட்டு பூங்கா) வளாகத்தில் நேற்று நடைபெற்றன.

இந்த நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு கூறியுள்ளார்.

இந்தநிகழ்வில் அவர்மேலும் உரையாற்றுகையில் தெரிவித்துள்ளவை வருமாறு:-

15 வயதில் நான் எனது தந்தையாருடன் யாழ்ப்பாணம் வந்தேன். அப்போது தமிழ் வைத்தியர்களும் இணைந்து எனது தந்தையை 8 வருடங்கள் மருத்துவர் சங்கத்தின் தலைவராக வெற்றி பெறச் செய்தார்கள்.

அதேபோல் மருத்துவர் சங்கத்தின் செயலாளராக என்னை எதிர்த்து ஒரு தமிழர் போட்டியிட்ட போதும் என்னை தமிழ் வைத்தியர்களும் இணைந்து செயலாளராக நியமித்தார்கள்.

அப்போது தங்களுடைய சேனாரத்ன என்று என்னை அவர்கள் நினைத்தார்கள். அதனை நாங்களும் மனதார உணர்ந்தோம்.

ஆயுதம் தாங்கிப் போராட்டம் நடத்திய சகல இயக்கங்களுடனும் பேசியிருக்கிறேன். அவர்களைச் சந்தித்திருக்கிறேன். இங்கிருந்த அசாதாரண சூழ்நிலையை தவிர்ப்பதற்கும் அடக்கு முறையை தவிர்ப்பதற்குமே அவர்களுடன் பேசியிருக்கிறேன்.

பின்னர் இந்திய - இலங்கை ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்ட போதும் ஆயுத இயக்கங்களின் தலைவர்களுடன் இணைந்து பேசினோன். இங்கு நாங்கள் அனைவரும் ஒன்றிணைந்து உரிமைகளைப் பாதுகாக்க வேண்டும் என்பதற்காகவே இவ்வாறு பேசினேன்.

தேர்தல் காலத்தில் இதே சங்கிலியன் பூங்கா வளாகத்தில் வைத்து மக்களின் காணிகளை மக்களிடம் வழங்குவோம் எனவும், காணாமல் ஆக்கப்பட்டவர்கள் தொடர்பான உண்மைநிலையை அறிவோம் எனவும், அரசியல் கைதிகள் மற்றும் வேலை வாய்ப்புக்கள் போன்றவற்றையும் செய்வோம் என்றும் கூறியிருந்தோம்.

இந்த நிலையில் அந்த வாக்குறுதிகள் நிறைவேற்றப்படவில்லை. மந்தகதியிலேயே நடந்து கொண்டிருக்கின்றன. மந்தகதியில் நடந்தாலும் முழுமையாக நடைபெறும். குறிப்பாக மக்களுடைய காணிகளில் ஓர் அங்குலம் கூட வைத்திருக்காமல் முழுமையாக வழங்குவோம்.

3 வாரங்களுக்கு முன்னர் காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவுகளை சந்தித்து கலந்துரையாடினேன். சந்தித்தபோது அவர்கள் தங்கள் உறவுகளின் உண்மைநிலையை கேட்டார்கள். அது தொடர்பாக நடவடிக்கை எடுக்கப்படும்.

இலங்கையின் சட்டக் கோவையின்படி குற்றம் இழைக்காதவர்கள், குற்றம் தொடர்பான சாட்சிகள் இல்லாதவர்கள் விடுவிக்கப்படுவார்கள்.

வட மாகாணத்தில் மேற்கொள்ளப்படும் வேலைத் திட்டங்களுக்கு வட மாகாண இளைஞர்கள், யுவதிகள் சேர்த்துக் கொள்ளப்படுவார்கள்.

அதேபோல் காணாமல் ஆக்கப்பட்டவர்கள் தொடர்பான தகவல்களை மாகாண சுகாதார அமைச்சர் ப.சத்தியலிங்கத்திடம் கேட்டிருந்தேன். அவர் ஒரு கட்டுத் தகவல்களை தந்திருக்கின்றார்.

வடமாகாணத்தில் போரால் பாதிக்கப்பட்ட அங்கவீனர்களாக ஆக்கப்பட்டவர்கள் தொடர்பாகவும் நடவடிக்கை எடுக்கப்படும். மேலும் இலங்கையிலேயே பெரிய வைத்திய சாலை மேல் மாகாணத்தில் இருக்கின்றது.


அதேபோல் வடக்கிலும் உலகத் தரம் வாய்ந்தவைத்திய சாலை உருவாக்கப்படும். அதேபோல் மேல் மாகாணத்துக்கு அடுத்தபடியாக வடமாகாணத்துக்கு ஆயிரத்து 600 கோடி ரூபா நிதியை வழங்கியுள்ளோம்.- என்றார். (ஐ)













## தொழிலாளர் தினத்தில் பேசாலையில் வழிபாடு

மன்னார், மே 02

தொழிலாளர் தினத்தை முன்னிட்டு மன்னார் மாவட்டத்தில் அரசியல் கட்சிகளின் ஊர்வலங்கள், நிகழ்வுகள் இடம்பெறாத போதும் பெரும்பாலான கிராமப் புறங்களில் காலையில் இறை வழிபாடுகளும் அதைத் தொடர்ந்து விளையாட்டு நிகழ்வுகளும் கலை நிகழ்வுகளும் இடம் பெற்றன.

கத்தோலிக்க தொழிலாளரின் புனிதராக போற்றும் புனித சூசையப்பரை நினைவு கூர்ந்து கொண்டாடும் இந்த நாளில் மீனவர்கள் செறிந்து வாழும் பேசாலை பகுதியில் கடற்கரையில் பங்கு தந்தையர்களான அ. டெனோசில்வா மற்றும் பெயிலன் குரூஸ் ஆகியோரது தலைமையில் திருப்பலி ஒப்புக் கொடுக்கப்பட்டு கடலில் திருச்சொரூபத்தை ஊர்வலமாகஎடுத்துச் சென்று ஆசீர்வழங்கப்பட்டது.

(ஐ-112)

# வடக்கு, கிழக்கு இணைந்த தீர்வே தேவை!

## மே தின உரையில் செல்வம் அடைக்கலநாதன் எம்.பி.

வடக்கு, கிழக்கு இணைந்த ஒரு தீர்வை எதிர்பார்த்துத்தான் நாங்கள் செயற்பட்டுக் கொண்டிருக்கின்றோம்.

இவ்வாறு தமிழீழ விடுதலை இயக்கத்தின் தலைவரும் வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான செல்வம் அடைக்கலநாதன் தெரிவித்தார்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் மே தினக் கூட்டம் அம்பாறையில் இடம்பெற்றது. இதில் உரையாற்றும் போது இவ்வாறு தெரிவித்தார். அவர் தொடர்ந்து உரையாற்றுகையில்-

கிழக்கு மாகாணத்தில் எங்களுக்கு உரிமை கிடைக்கவில்லை. நாங்கள் அடக்கு முறையில் வாழ்ந்து கொண்டிருக்கின்றோம். இதில் இருந்து நாங்கள் - மக்கள் மீண்டெழுவதற்கு எமக்கு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு உதவ வேண்டும் என மக்கள் ஏங்கிக் கொண்டிருக்கின்றனர்.

சர்வேத ரீதியாக எமது பிரச்சினை சம்பந்தமாக வெளிநாட்டு இராஜதந்திரிகளுடன் பேசும் போது எமது தலைவர் எமது மக்களின் பிரச்சினைகளை மிகவும் இறுக்கமாகவும், எந்தவித விட்டுக்கொடுப்பின்றி, தமிழ் மக்களுக்கு எதிராக அரசு அரங்கேற்றுகின்ற பிரச்சினைகள் அனைத்தையும் சுட்டிகாட்டி வருகிறார்.

வடக்கு, கிழக்கு இணைந்த ஒரு தீர்வை எதிர்பார்த்துத்தான் நாங்கள் செயற்பட்டுக்கொண்டிருக்கின்றோம். அவ்வாறான ஒரு தீர்வை உள்ளடக்கிய தீர்வுத் திட்டத்தை உறுதிப்படுத்தியே கூட்டமைப்புச் செயற்படும் என்பதில் எவ்விதமான மாற்றுக் கருத்துக்கும் இடமில்லை. தீர்வுத் திட்ட விடயத்தாலே அரசு எங்களை ஏமாற்ற நினைக்குமாயின் நாங்கள் அரசில் இருந்து விலகுவோம்.- என்றார். (ஐ)






கூட்டுறவுத் தொழிலாளர்களின் மே தினப் பேரணி முல்லைத்தீவு புதுக்குடியிருப்பில் இடம்பெற்றது. இந்தப் பேரணியில் வடமாகாண சபை முதலமைச்சர் சி.வீ.விக்னேஸ்வரன் மற்றும் வடமாகாண சபை உறுப்பினர்கள், கூட்டுறவு ஊழியர் சங்கம் மற்றும் பொது மக்கள் உள்ளிட்ட பலர் கலந்துகொண்டனர். (ஐ-81)

# தமிழர் தாயகப் பிரதேசத்தில் நேற்றைய மேதின நிகழ்வுகள்



முல்லைத்தீவு - புதுக்குடியிருப்பில் கூட்டுறவாளர்களால் ஏற்பாடு செய்யப்பட்ட மேதின நிகழ்வில்....



சாவகச்சேரியில் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் மேதின நிகழ்வில்....




சமத்துவம், சமூக நீதிக்கான மக்கள் அமைப்பின் ஏற்பாட்டில் கிளிநொச்சியில் இடம்பெற்ற மேதினம்....



தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் வடக்கிற்கான மேதினக் கூட்டம் கிளிநொச்சியில்...

தலவாக்கலையில் தமிழர் முற்போக்கு கூட்டமைப்பின் மேதினம்






# மரண அறிவித்தல்

| பிறப்பு | | இறப்பு |
|---|---|---|
| 20 - 05 - 1938 |  | 30 - 04 - 2017 |

## அமரர் முத்தையா சிவப்பிரகாசம்

**(முன்னை நாள் அதிபர்). (வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சி.சிவமோகன் அவர்களின் தந்தையார்)**

புதுக்குடியிருப்பு முதலாம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட முன்னை நாள் அதிபரும், வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சி.சிவமோகன் அவர்களின் தந்தையுமான முத்தையா சிவப்பிரகாசம் (30-04-2017) ஞாயிற்றுக்கிழமை அன்று காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற முத்தையா – கண்ணகை தம்பதியினரின் புதல்வனும், கமலாம்பிகையின் அன்புக் கணவரும், சி.சிவமோகன் (வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்), சி.சிவரஞ்சன் (உதவிக் கல்விப் பணிப்பாளர்), சி.சிவஜெயந்தன் (அபிவிருத்தி உத்தியோகத்தர், புதுக்குடியிருப்புப் பிரதேச செயலகம்), சி.சிவதர்சன் (லண்டன்), சி.சிவதர்சினி (கோப்பாய் ஆசிரியர் பயிற்சிக் கலாசாலை) ஆகியோரின் அன்புத் தந்தையாரும், தேவிகா (ஆசிரியை), சி.சோமாவதி (ஆசிரியை முல்லைத்தீவு ம.வி.), சி.ஜீவினி (முகாமைத்துவ உதவியாளர், புதுவை பிரதேச சபை), சி.ரஜனிதேவி, காலஞ்சென்ற சி.ஜெயஸ்ரீ (மாவட்டச் செயலகம், முல்லைத்தீவு), சி.சதீஸ்குமார் (கனடா) ஆகியோரின் அன்பு மாமனாரும் ஆவார்.

அன்னாரது இறுதிக் கிரியைகள் இன்று (02-05-2017) செவ்வாய்க்கிழமை காலை 10.30 மணியளவில் முல்லைத்தீவு, புதுக்குடியிருப்பு முதலாம் வட்டாரத்தில் அமைந்துள்ள அன்னாரது இல்லத்தில் நடைபெற்றுப் பூதவுடல் தகனக் கிரியைகளுக்காகப் புதுக்குடியிருப்பு இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்பட்டுத் தகனக் கிரியைகள் இடம்பெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

தகவல்:
வன்னிக்குறோஸ் கலாசாரப் பேரவை,
வன்னிக்குறோஸ் கல்வி மேம்பாட்டுப் பேரவை,
வன்னிக்குறோஸ் மகளிர் பேரவை,
வன்னிக்குறோஸ் விளையாட்டு மற்றும் இளைஞர் பேரவை,
நிர்வாகத்தினர் - முல்லை மாவட்டம்.

தொடர்புகளுக்கு:-
077 805 2903
(ச.ரூபன் – இணைப்பாளர்)

இப்பத்திரிகை யாழ்ப்பாணம் இல.30 இந்துக் கல்லூரி வீதியிலுள்ள சிறாம் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 672B கே.கே.எஸ் வீதியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 02.05.2017 இல் அச்சிடப்பட்டு வெளியிடப்பெற்றது.